வெளியீடு 19-3-2003

Issued 19-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செய்திகை வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 6, 2002 – தொகுதி 27 – எண் 2

**Monday the 6th May, 2002 – Volume 27 – No. 2**


...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...tive Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

...3.00]

[Price Rs. 3.00

உள்ளடக்கம் பக்கங்கள்


**(6) மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 31-தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை—தொடர்ச்சி | 515-532 |
| மாண்புமிகு திரு. வது. நடராஜன் | 552-556 |
| (ஆ) கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம் | 515-528 |
| (இ) கோரிக்கை எம் 32 - சட்டத் துறை | 532-546 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | |
| (ஈ) கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை | 557-680 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 557, 573-574 576-577, 578, 581-582, 587, 594, 603, 638-673 |
| திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 575-587 |
| திரு. மா. சின்னசாமி | 587-591 |
| திரு. சி. ஞானசேகரன் | 592-609 |
| டாக்டர் ஆர். கோவிந்தசாமி | 609-617 |
| * திரு. எச்.எம். ராஜு | 618-622 |
| * திரு. கே. மகேந்திரன் | 622-627 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 627-633 |
| திரு. எச். ராஜா | 633-639 |




உள்ளடக்கம் பக்கங்கள்


**(6) மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| (2) கோரிக்கை எண் 16-கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல். | 680-797 |
| மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் | 680, 685, 691 701, 718-179, 749, 771, 773 775 |
| * திரு. மு.பெ. சாமிநாதன் | 685-691 |
| * திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு | 692-707 |
| * திரு. இரா. இராம் பிரபு | 707-715 |
| * திரு. கே. ஆறுமுகம் | 715-723 |
| * திருமதி டி. யசோதா | 723-728 |
| * திரு. என். நன்மாறன் | 728-731 |
| * திருமதி செல்வி முருகேசன் | 731-739 |
| திரு. ஜி. பழனிசாமி | 739-744 |
| * திரு. ப. அரசன் | 744-749 |
| **(7) இலங்கை சென்று திரும்பிய உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்களுக்குப் பாராட்டு—** | 574-575 |
| **(8) அறிவிப்பு—** | |
| 7-5-2002 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து | 617 |
| **(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 778-781 |

298
263

6-5-2002

உள்ளடக்கம் பக்கங்கள்


**(1) இரங்கற் குறிப்பு—**

முன்னாள் அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் மறைவு 499-500

**(2) தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 500

**(3) கவன ஈர்ப்பு—**

(அ) திருச்சி, உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசனப் பகுதிக்குத் தண்ணீர் விடுவது 501-504

(ஆ) கோவை, சிறுவாணி மற்றும் வேலூர் ஜவ்வாது மலைப் பகுதிகளில் காட்டு யானைகளால் பயிர்கள் நாசம் 504-511

**(4) அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மதிப்பீட்டுக் குழு 511

(ஆ) பொதுக் கணக்குக் குழு 512

(இ) பொது நிறுவனங்கள் குழு 512

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு 512

(உ) மனுக்கள் குழு 512

**(5) அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு, 2002 513-515

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225164
சென்னை 600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 23, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 மே 6, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"***

நோயின் தன்மை, நோய்க்கான காரணம், நோயைத் தீர்க்கும் வழி ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்.

[*குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழக முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மூத்த முன்னாள் உறுப்பினரும், சிறந்த காந்தியவாதியுமான திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் தனது 92-வது வயதில் 4-5-2002 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் 1957 முதல் 1962 வரை குளச்சல் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், உள்ளாட்சித் துறை*

அமைச்சராகவும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாணியம்பாடி, காவல் நிலையத்தின் எல்லைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். உடனேயா? நாளைக்கு காலையில் அறைக்கு வாருங்கள். என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடு)

பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த.....

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்குத்தானே கொடுத்திருக்கிறீர்கள். என்னவென்று பார்த்துச் சொல்கிறேன். நாளைக்கு அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) பொன்முடி சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** சட்டமன்ற அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு அறைக்கு வாருங்கள், பேசுவோம், பேசுவோம்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அறைக்கு வாருங்கள் பேசுவோம். நல்ல ரூ வாங்கித் தருகிறேன். பேசுவோம்.



## 3. கவன ஈர்ப்பு

### (அ) திருச்சி, உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசனப் பகுதிக்குத் தண்ணீர் விடுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. பரணிகுமார், திரு. கே.என். சேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. கே. என். சேகரன் அவர்களை பேச அனுமதிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி, உய்யக்கொண்டான் வாய்க்காலில் பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகத் தண்ணீரைத் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

காவேரி ஆற்றின் வலது கரையில் கட்டளை படுக்கை அணையிலிருந்து பிரியும் தென்கரை கால்வாயின் கடைமடையில் (Tail drop) இருந்து உய்யக்கொண்டான் கால்வாய் ஆரம்பமாகிறது. இதன் பாசனப்பகுதி உய்யக்கொண்டான் கால்வாய் எல்லையில் இருந்து 43/0 மைலில் உள்ள பெட்டவாய்த்தலை எல்லையில் இருந்து 43/0 மைலில் உள்ள வாழவந்தான்கோட்டை கிராமம் எல்லை வரை கால்வாயின் இடது பக்கம் அமைந்துள்ளது. கால்வாயின் மொத்த பாசனப் பரப்பு 32,742 ஏக்கர் மற்றும் இக்கால்வாயில் ஜூன் 1 முதல் 30 வரை 30 நாட்கள் போக வருடத்தில் மிகுதியான நாட்களில் தண்ணீர் வழங்க...

சென்னை-600 009

குறித்தும் அரசுக்கு ஆலோசனை கூறவும், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட முத்தரப்புக் குழுக்களை மாவட்ட வாரியாக ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இது தொழிலாளர்களின் நலனைக் காக்க கருணையுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் கொண்டுள்ள அக்கறையின் புதிய முயற்சியாகும்.

நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250 மாதாந்திர உதவித் தொகை தருவது குறித்தான திட்டம் 1-5-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 72 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பயன்பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 8,973 தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இரண்டு கோடியே 44 இலட்சத்து 39 ஆயிரத்து 750 ரூபாய் மட்டும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில், அத்தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அரசு, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட்டுள்ளது. தொழில் தீர்ப்பாயத்தில் நடுவராகச் செயல்பட நீதிபதிகளில் ஒருவரை தேர்வு செய்ய நீதிபதிகளின் பட்டியல் சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

பிற்பகல் 10-30

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் 13-9-2001 முதல் 12-3-2002 முடிய 6 மாத காலத்திற்கு அமலில் இருந்தது. இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான இடைக்கால நிவாரணம் அளிக்கப்படும் காலத்தை நீட்டிப்பது குறித்து சட்டத் துறையுடன் கலந்து ஆலோசித்து பரிசீலனை செய்யப்படும்.

கோவை மாவட்டம், சிறுமுகையில் உள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலையில், ரேயான், விஸ்கோஸ், ஸ்டேபிள் பைபர் மற்றும் மரக்கூழ் அட்டைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1995-96 ஆம் ஆண்டு வரை முறையாக இயங்கி வந்த இந்த நிறுவனம் அதற்குப்பின் சுற்றுப்புறச் சூழல், தூய்மை தொடர்பாக பல்வேறு பிரச்சனைகளை சந்தித்தது. நிர்வாகத்திற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக, மின்வாரியத்திற்கு ரூ. 7 கோடி பாக்கி ஏற்பட்டு, மின் சப்ளை



துண்டிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டிய பாக்கித் தொகை சம்பந்தமாக தொழிலாளர் துணை ஆணையர், ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் என் மட்டத்தில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஜனவரி 2002 முதல் ஏப்ரல் 2002 வரையிலான சம்பளம், இதுவரையில் வழங்கப்படவில்லை. ஊதிய உயர்வு நிலுவைத் தொகையில் 50 சதவீதம் இன்னும் வழங்கப்படவில்லை. இப்பிரச்சினை குறித்து மீண்டும் கோவை தொழிலாளர் துணை ஆணையர், ஆணையர் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அடுத்த கட்டமாக 8-5-2002 அன்று எனது முன்னிலையிலும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இதற்கிடையில் நிர்வாகம் கோரிய லே-ஆஃப் அனுமதி அரசால் மறுக்கப்பட்டுள்ளது.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்—இத்தொழிற்சாலை 4-10-1996 முதல் கலைப்பு அதிகாரியின் முன் கலைப்பு நடவடிக்கையில் இருந்து வருகிறது. டன்லப்-நிதி நெருக்கடி காரணமாக இந்நிறுவனம் இயங்காமல் உள்ளது. இப்பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள தொழிலாளர் பிரச்சினைகளில் மிக முக்கியமான பிரச்சனையாக தற்போது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை உள்ளது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியும், அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்வது பற்றியும், குறைந்தபட்சக் கூலி சட்டத்தை அரசியல் சாசனத்தின் 9-வது அட்டவணையில் சேர்ப்பது குறித்தும், இம்மாமன்றத்தில் பல்வேறு கருத்துகள் உறுப்பினர்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டன.

தமிழகத்தில் பதிவு பெற்றதும், பதிவு பெறாததுமாக மொத்தம் 831 தோட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் நாற்பத்தி மூன்றாயிரத்து அறுநூற்றி எழுபத்தி மூன்று தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையில் இந்த அரசு தோட்டத் தொழிலில், மாநில அளவில் இயங்கி வரும் தொழிற்சங்கங்கள் அனைத்தையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதற்கிடையில் ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி ஆகிய இடங்களில் உள்ள தோட்ட நிறுவனங்களின் அதிபர்கள் சங்கங்கள் மேற்படி இடங்களில் இயங்கும் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை

நடத்தி ஒப்பந்தங்கள் செய்து கொண்டு உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதில் அரசுக்கோ, தொழிலாளர் துறைக்கோ எவ்விதப் பங்கும் இல்லை.

வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தோட்ட நிறுவனங்களுக்கும், அப்பகுதிகளில் இயங்கும் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே 6-4-2002 அன்று, ஊதிய முன்பணம் குறித்து இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தினை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து, தொழிலாளர்கள் சாலை மறியல், உண்ணாவிரதம், வேலைநிறுத்தம் போன்ற சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கக் கூடிய நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டதால் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தோட்ட அதிபர்களுடனும், தொழிலாளர்களுடனும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையின் பயனாக 1-1-2002 முதல் 8 மாதங்களுக்கு எவ்வித பிடித்தமும் இன்றி சம்பள முன்பணம் வழங்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனையடுத்து தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டனர். இப்பிரச்சினை குறித்து 4-5-2002 அன்று என் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இத்தாவா குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை மேற்கொண்டு தீர்வு காணப்படும்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அரசியல் சாசனத்தின் 9-வது அட்டவணையில் சேர்ப்பது குறித்து—குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கை வெளியிடும் சமயங்களில் அந்த அறிவிக்கைகளுக்கு எதிராக வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து தடையுத்தரவு பெறுகின்றனர்.

இதனால், அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் தொழிலாளர்களுக்குக் கிடைப்பது தடுக்கப்படுகிறது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அரசியல் சாசனத்தின் 9-வது அட்டவணையில் சேர்ப்பது தொடர்பாக மத்திய அரசு கோரிய குறிப்புரையின்மீது தமிழக அரசு, மேற்படி சட்டத்தை, அரசியல் சாசனத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளது. இப்பிரச்சினை தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.



முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பீடித் தொழிலில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் நலனில் அக்கறை கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின் பேரில் இந்த அரசு, பீடித் தொழிலாளர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், தொழிலாளர்கள் தாங்களாகவே வீடு கட்டிக்கொள்ளும் வகையில், முதல் முறையாக பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கென தனி மானியம் ஒதுக்கீடு செய்து, பீடித் தொழிலாளர்கள் கட்டும் வீடு ஒன்றுக்கு, மாநில சர்க்காரால் ரூபாய் 5,000 வீதம் மானியம் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முந்தைய தி.மு.க. ஆட்சியில் பீடித் தொழிலாளர்கள் வீடு கட்டுவதற்கு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை என்பதை இம்மாமன்றத்திற்குச் சுட்டிககாட்ட விரும்புகிறேன்.

இத்திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு 2,000 வீடுகள் வீதம், 5 ஆண்டுகளில் மொத்தம் 10,000 வீடுகள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு கோடி வீதம் 5 ஆண்டுகளுக்கு ரூபாய் 5 கோடி மாநில அரசின் பங்காகச் செலவிடுவது என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலம் ஆக்குவதற்கான 15 அம்சத் திட்டத்தில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சிகொள்கிறேன்.

தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக சட்டப்பூர்வமாக சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான இதர சட்ட விதிமுறைகளும் மிகத் தீவிரமான முறையில் அமலாக்கப்பட்டு வருகின்றன. இத்தீவிர முயற்சிகளின் விளைவாக அமைப்புச் சார்ந்த தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்திற்கிணங்க குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பதற்கான பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டுள்ளோம். மத்திய அரசின் நிதியுதவியுடன் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய 9 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் நடைபெற்று வருகிறது.

விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அகில உலக தொழிலாளர் அமைப்பின் ஒருங்கிணைந்த குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பின்கீழ் குழந்தைத் தொழிலாளர்களை ஆபத்தான மற்றும் சுரண்டப்படும் நிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் ஐ.எல்.ஓ.-வின் ஒருங்கிணைந்த அணுகுமுறைத் திட்டம், சிவகாசி மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக ஐ.எல்.ஓ. நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1948-ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டு, தொழிலாளர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும்.

10-1-1997 முதல் மாத வருமானம் ரூபாய் 6,500-க்குக் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அம்மா ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் அதிகமான தொழிலாளர்களும், அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் 2001-2002-ல் கீழ்க்கண்ட பகுதிகள் கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் மருந்தகங்கள் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ள புதிய பகுதிகள்:

ஆமத்தூர், விருதுநகர் மாவட்டம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம், பெரியநாயக்கன்பட்டி, விருதுநகர் மாவட்டம், சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம், சென்னிமலை, ஈரோடு மாவட்டம், வானூர், விழுப்புரம் மாவட்டம், சங்கரலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்,



நாங்குனேரி, திருநெல்வேலி மாவட்டம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம், வக்கணகுண்டு-காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம், நல்லட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

முற்பகல் 10-40

தற்போது சென்னை மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவு இயங்கி வருகின்றது. இவைபோக சேலம், மதுரை, சிவகாசி, வேலூர், ஒசூர், திருச்சி ஆகிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவு தொடங்கப்பட உள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில் வேலைவாய்ப்புப் பிரிவில் வேலை வேண்டுவோரை பதிவு செய்தல், தகுந்த காலியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரைத்தல், வேலைவாய்ப்பற்றோருக்கும், மாணவர்களுக்கும் தொழில்முறை வழிகாட்டிப் பணிகள் ஆற்றுதல், வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்பற்றோர் பற்றிய விவரங்களை அவ்வப்போது சேகரித்து அறிக்கைகள் தயார் செய்தல் போன்றவை இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

2001-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐநூற்று எண்பது மனுதாரர்களால் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்யப்பட்டு, இருபதாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மனுதாரர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

வேலை தேடுபவர்களிடையே சுய வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அளித்துவரும் உதவிகள் மற்றும் சலுகைகள் பற்றிய விவரங்களை கூட்டுக் கலந்துரையாடல்கள் மூலம் ஏற்பாடு செய்து-மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—அவர்களிடையே விழிப்புணர்வை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஏற்படுத்துகின்றன. இதன்படி 2001-ல் 728 மனுதாரர்களுக்கு ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் வங்கிகள் மூலம் கடன் உதவி அளிக்கப்பட்டு அவர்கள் சுய வேலைவாய்ப்புத் தொழில்களைத் தொடங்கியுள்ளனர் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் பொருட்டு கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், கடலூர் ஆகிய ஐந்து இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கும் உதகமண்டலம், சங்கராபுரம், திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய நான்கு இடங்களில் பழங்குடியினருக்கும் சிறப்பு வழிகாட்டும் மையங்கள் இயங்கி வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் தொழில் உற்பத்திக்கு திறமை வாய்ந்த கைவினைஞர்கள் தேவைப்படுகின்றனர். 2001 ஆம் ஆண்டில் பயிற்சித் துறை 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களின் வாயிலாக 8,084 கைவினைஞர்களையும் 603 அங்க்கரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் வாயிலாக பதினேழாயிரத்து ஐநூற்று எட்டு கைவினைஞர்களையும் உருவாக்கியுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் திறனாய்வுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற திறனாய்வுப் போட்டியில்—இதுவரையிலும் தமிழகத்தில் எந்த அரசும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளாத நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்றதற்குப் பின்னாலேதான் நம் மாநிலம் இந்தியாவில் முதல் மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற திறனாய்வுப் போட்டியில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு சிறந்த மாநிலமாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் இந்த விருது விரைவில் வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழுபவர்களுக்கு மாத்திரம் அல்லாது அயல்நாடுகளிலும் தமிழர்கள் வாழுகிறார்கள், அவர்களும் வாழவேண்டும் என்ற உணர்வோடு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக தமிழ்நாட்டை தாயகமாகக் கொண்ட வெளிநாடுகள்வாழ் இந்தியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இன்ஷூயூரன்ஸ் வாயிலான சமூகப் பாதுகாப்பு அளிப்பதற்காக 'வெளிநாடுவாழ் தமிழருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்' என்ற பெயர் கொண்ட ஒரு திட்டம் மாண்புமிகு அம்மா அரசு பதவியேற்றபின் தொடங்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தை முந்தைய ஆட்சியாளர்கள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்வதோடு, இத்திட்டம் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

முற்பகல் 10-45

இத்திட்டத்தில் வெளிநாட்டுவாழ் தமிழர் மட்டுமின்றி இந்தியாவில் வசிக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்கள்கூட சேரலாம். இத்திட்டத்தில் சேருபவர்களுக்கு ஒரு தடவை மட்டுமே செலுத்தப்படும் குறைந்த அளவான பிரிமியத் தொகையில் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கு, விபத்துக்கான இழப்பீடு வழங்கப்படுகிறது. தவிர, மருத்துவமனை சிகிச்சை தொடர்பாக ஆகும் செலவுகளும் ஈடுசெய்யப்படுகின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்திட்டத்திற்கான உடன்பாட்டு விதிக் குறிப்பு 27-03-2002 அன்று நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியுடன் ஏற்படுத்தப்பட்டு விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களது பொற்கரங்களால் தொடங்கப்படவுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரை ஆற்றிய உரையின் மூலமாக, தமிழகத்தில் வசிக்கும் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், அயல்நாட்டில் வாழும் தொழிலாளர்களின் நலனைக் காப்பதிலும், மாண்புமிகு அம்மா அரசு எந்தெந்த வகையில் செயலாற்றி வருகிறது என்பதை இம்மாமன்றத்திற்கு எடுத்துரைத்துள்ளேன். தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டும், தொழிலாளர் நலம் காக்க வேண்டும், இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில், முதல் மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும் போன்றவை மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த இலட்சியங்களாகும். அவற்றைச் செயல்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதலோடு கீழ்க்கண்ட புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்திற்கு அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புச்சாரா தொழிலாளர் நல வாரியங்கள், பல்வேறு நல வாரியங்களாகச் செயல்படுவது குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகளை இம்மாமன்றத்தில் எழுப்பினார்கள்.

1982 ஆம் வருடம் மாண்புமிகு முன்னாள் முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அமைப்புச்சாரா தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டு அவர்களின் குறைகளைக் களைந்து, அவர்களின் சமூகப் பொருளாதார அந்தஸ்தை உயர்த்த தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தினை இயற்றினார்கள். இச்சட்டத்தின்கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் நலனுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது தொடங்கப்பட்டது. இதற்குப் பின்னர், இதர அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்காக 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் என்ற ஒன்றினை அரசு அமைத்தது. அதனைத் தொடர்ந்து பல்வேறு அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு என்று 9 வாரியங்கள் தொடங்கப்பட்டன. 20-7-2000-ல் தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகிய தொழிலாளர்களுக்கு 4 வாரியங்கள் அமைக்கப்பட்டன.

18-10-2000-ல் பனைமரத் தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள் ஆகிய தொழிலாளர்களுக்காக 2 நல வாரியங்கள் அமைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 14-3-2001-ல் மேலும் கீழ்க்கண்ட மூன்று வாரியங்கள் அமைக்கப்பட்டன:

(1) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம்.

(2) தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் தயாரிப்போர் மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்,

(3) தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்.

அமைப்புச் சாரா தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைக் கண்டறிந்து அவர்களுக்கென்று வாரியங்களை அமைப்பதற்கு 1997-ல் அப்போதைய தி.மு.க. அரசு ஒரு குழு அமைத்தது. அக்குழு 1998-ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அக்குழுவானது, ஒவ்வொரு தொழிலுக்கும் தனித் தனியே வாரியங்கள் அமைப்பது, நிர்வாக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சாத்தியமில்லை எனப் பரிந்துரை செய்தது. ஆனால், முந்தைய தி.மு.க. அரசு அதன்படி செய்ததா என்றால் இல்லை. குழுவின் பரிந்துரைக்கு எதிராக ஒன்பது அமைப்புச் சாரா நல வாரியங்கள் தி.மு.க. அரசால் அவசர அவசரமாக அமைக்கப்பட்டன. ஏன் தெரியுமா? அரசியல் ஆதாயம் தேடி மக்களைத் திசைதிருப்புகின்ற வகையில், ஓட்டுக்களைப் பெறுகின்ற நோக்கத்தோடு பல வாரியங்களை அமைத்தார்கள். மேற்படி குழு, வாரியங்களை தனித் தனியே அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறியதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. அவ்வாறு அவசர அவசரமாக தேர்தல் ஆதாயம் தேடி அமைக்கப்பட்ட வாரியங்களின் இன்றைய நிலைமை என்ன? தனித் தனி வாரியங்கள் அமைக்கப்பட்டதால் நிர்வாகச் செலவு அதிகரித்ததே தவிர, வேறு பலன்கள் தொழிலாளர்களுக்குப் போய்சேரவில்லை. ஆட்டோ மற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியத்தைத் தவிர, ஏனைய அனைத்து வாரியங்களுக்கும் நிதி ஆதாரத்தை ஏற்படுத்த தி.மு.க. அரசு தவறிவிட்டது. ஒரே மாதிரியான பலன்களை வழங்க பல்வேறு வாரியங்களை ஏற்படுத்தியது தேவையற்ற செயலாகும்.



முற்பகல் 10-50

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்காக ஒரே நல வாரியம் அமைக்கப்பட்டு, அதற்கு ஒரே நல நிதியினை ஏற்படுத்தி அந்த வாரியத்தைத் திறம்பட நடத்திட போதிய பணியாளர்களை நியமித்து தொழிலாளர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு உரிய காலத்தில் பலன்களை அளிப்பது என்பது ஒன்றுதான் அமைப்புச்சாரா தொழிலாளர்களின் நலனை உண்மையாகப் பாதுகாக்கும் முயற்சியாகும்.

இப்பிரச்சினைகளை ஆராய்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இவ்வாரியங்களை பொருளாதார ரீதியில் வலுவாகவும், நல்ல முறையில் செயல்படுத்தவும் ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல்பதனிடும் தொழிலாளர்கள், ஓவியர்கள் மற்றும் கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் ஆகிய அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட ஒன்பது வாரியங்களை முதன்மை வாரியமாக தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல

வாரியத்துடன் இணைக்கத் தீர்மானித்துள்ளது என்பதனை முதல் அறிவிப்பாக இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஆண்டிப்பட்டி, பெரியகுளம், இளையான்குடி, சங்கரன்கோவில், உத்திரமேரூர் மற்றும் தருமபுரி ஆகிய ஊராட்சிகளில் தன்னார்வு பயிலும் வட்டங்களைத் தொடங்க அரசு தீர்மானித்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் இரண்டாவது அறிவிப்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தனியார் நிறுவனங்களில் நியமனங்களை ஊக்குவிக்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் வேலைவாய்ப்பளிக்கும் வாயில் (ஜாப் போர்டல் என்ற வெப்சைட்) ஒன்றினை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீர்மானித்துள்ளது என்பதனை மூன்றாவதாக தெரிவிப்பதோடு (மேசையைத தட்டும் ஒலி) இவ்வறிவிப்புகளுக்கு ஒப்புதல் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல கருத்துகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இம்மாமன்றத்தில் வழங்கிய கருத்துகளையும் நான் அறிந்துகொண்டேன். ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திற்கும் பதிலளிப்பது என்பது சாத்தியமில்லை. எனவே, இம்மாமன்றத்தில் நான் ஆற்றிய பதிலுரையை ஏற்றுக்கொண்டு வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வெட்டுத் தீர்மானங்களில் உள்ள நல்ல கருத்துகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்று தெரிவித்து, தொழில் அமைதி பேணுதலையும், தொழில், தொழிலாளர் நல்லுறவு காப்பதையும் இவ்வரசு தமிழக சமுதாயத்திற்கு ஆற்றக்கூடிய இன்றியமையாத கடமையாகக் கருதுகிறது என்றும் கூறி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படியும் நான் கேட்ட தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சருக்கு தொண்டை கட்டியிருக்கிறது. நாளைக்குக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, தொழிலாளர் நலச் சட்டங்கள் என்பது பழைய சட்டத்தைத்தான் நாம் பின்பற்றி வருகிறோம். 1926 ஆம் ஆண்டு வெள்ளைக்காரர்கள் இருந்தபோது கொண்டு வந்த சட்டம், இன்றையதினமும் பின்பற்றப்படுகிறது. தொழிலாளர் தொழிற் சங்கங்களைப் பொறுத்த வரையில், ஒவ்வோர் ஆண்டும் தேர்தல் நடத்த வேண்டுமென்று ஒவ்வொரு தொழிற்சாலையிலேயும், தொழிற்சங்கத் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்து வந்திருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையில், பல இடங்களிலே, தேர்தல் நடத்தாத காரணத்தினாலே பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதேபோல, வேறு தொழில்கள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இந்தியாவிலே, பல்வேறு மாநிலங்களிலே ஏற்கெனவே தொழிற்சங்கத் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று சட்டங்கள் இயற்றியிருக்கிறார்கள். கேரளா, மேற்கு வங்கம், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், இன்னும் பல்வேறு மாநிலங்களிலே அந்தச் சட்டம் இருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலேயும், கடந்த கால ஆட்சியின்போது ஒரு சட்டமுன்வடிவ வரைவு, ஒன்று தயாரிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு நிர்ப்பந்தங்களின் காரணமாக, அந்தச் சட்டமுன்வடிவ வரைவு அமைச்சரவையினுடைய பரிசீலனைக்கு வைக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன்.

அந்தச் சட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திலோ, இறுதியில் அறிவித்திருக்கிற அறிவிப்புகளிலோ, நாங்கள் எழுப்பிய முக்கியமான பிரச்சினைகள் ஒன்றுகூட வரவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். வேலை இழந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து, கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிற கணக்கை திருப்பிச் சொன்னாரே தவிர, அதைத் திரும்பக் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? உயர்த்தித்

தருவதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா? இரண்டு, அடைத்து வைக்கப்பட்டு, வேலை வாங்குகிற கொத்தடிமை முறை, பெண் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகிற முறை இருக்கிறது. அதுகுறித்து, ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல, பஞ்சாலை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கருணாகரன், அன்றைக்கு நீங்கள் பேசினீர்கள். நீங்கள் பேசிய எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியாது. சில, அரசினுடைய பரிசீலனையில் இருக்கும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஏனென்றால் இது மிகப் பெரிய எதிர்பார்ப்போடு இருக்கக்கூடிய பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் அவர்களும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கே நீங்கள் பதிவு செய்திருக்கிறீர்கள், உங்களுடைய கருத்தை. . .

**திரு. கே.சி. கருணாகரன்:** அதேபோல, அந்த 10 (பி) ஆணையை 6 மாதம் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று நேற்றுகூட கூட்டுத் தொழிற்சங்க அமைப்புகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின்மீது பதில் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பேசிய பேச்சை அப்படியே எனக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று இங்கே நான் கேட்டிருக்கிறேன். ஆகவே, அவர் எழுப்பிய கேள்விகள், எழுப்பிய பிரச்சினைகள் அனைத்திற்கும் பதில்கள் விரைவில் தரப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அவருக்கு அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனந்திறந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் எழுப்பிய கேள்வியைத்தான் நானும் எழுப்பியிருந்தேன். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான 10(பி) ஆணை மார்ச் மாதத்தோடு முடிகிறது.



அதை நீட்டித்துத்தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். அது மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இந்த அமைப்புச்சாரா தொழிலாளர்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். 1982-லே இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறபோது, அதிலே 12 தொழில் பிரிவுகள் மட்டுமே சேர்க்கப்பட்டிருந்தன. அப்போது வாரியங்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. 1994-லே இன்றைய முதலமைச்சர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது, உடல் உழைப்புத் தொழிலாளர், கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வாரியம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதிலேகூட, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளில் இருக்கிற கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர வேண்டுமென்கிற அடிப்படையிலே அந்த வாரியமும் செயல்பட்டது. அதிலே, கிட்டத்தட்ட 25,000 உறுப்பினர்கள் இருந்தார்கள். 25 இலட்சம் ரூபாய் தொகை இருந்தது. அதற்குப் பிறகு 12 தொழில்களாக இருந்தது, 64 தொழில்களாக உயர்த்தப்பட்டன. பல்வேறு அமைப்புச்சாரா தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே 64 தொழில்கள் சேர்க்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, மானியக் கோரிக்கை மீதான விவாதம் இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்கிறேன். விவாதம் இல்லை, விவாதம் இல்லை, கேள்விதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், அதாவது பல வாரியங்களாக இருந்ததை நாங்கள்.... (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அந்த 64 தொழில்களும் சேர்க்கப்பட்டதன் காரணமாக, பல்வேறு தொழிலாளர்களிடமிருந்து வந்த கோரிக்கைகளின் காரணமாக,—ஏன் அன்று மாண்புமிகு உறுப்பினர்களாக இருந்த லட்சுமணன் போன்றவர்கள், மணி போன்றவர்கள் எல்லாம், மேலும் அதிக வாரியங்கள் வேண்டுமென்று கேட்ட காலத்திலேயே, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று,—10 வாரியங்கள் உருவாக்கப்பட்டன. அதற்கு நிதி ஆதாரங்களும் உருவாக்கப்பட்டன. ஒரே நிதி ஆதாரம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் முடிவெடுக்கப்பட்டது. ஆகவே, நிதி ஆதாரம் ஒன்றாக வைத்துக்கொண்டு, அந்தப் பத்து வாரியங்களையும் தனியாக வைத்துச் செயல்படுத்தினால்,

தொழிலாளர்களுக்கு மேலும் அதிகமாக பலன் கிடைக்கும். ஏனென்றால், 2 கோடி உறுப்பினர்கள் இதில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

**(ஆ) கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம்**—தொடர்ச்சி

**கோரிக்கை எண் 32 - சட்டத்துறை**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *3-05-2002* அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கு இணங்க, நீதி நெறிமுறைப்படி நின்று ஆட்சி செய்து மக்களை எல்லா வகைகளிலும் காப்பாற்றுகின்ற எங்கள் அன்னையே, மக்கள் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களால், அவர்களின் உள்ளங்களில் மகிழ்வோடு போற்றப்பட்டு எப்போதும் மதிக்கப்படுகின்ற எங்கள் அன்னையே.

தமிழ்நாட்டை, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக எல்லாத் துறைகளிலும் முன்னுக்குக் கொண்டு வர ஒவ்வொரு மணித் துளியும் ஓய்வின்றி இடைவிடாது பணியாற்றி வரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சட்டம் மற்றும் நீதித் துறை வெகுவேகமாக புத்துணர்ச்சி பெறுகிறது. இதுவரையில், எப்போதுமே சட்டத்துறைக்கென தனியாக மானியக் கோரிக்கை இல்லாமல் உள் துறையில் 'நீதி நிருவாகம்' என்கின்ற மானியக் கோரிக்கையில் ஒரு சிறுபகுதியாக சட்டத் துறையில் மானியக் கோரிக்கை இணைக்கப்பட்டு இருந்ததை மாற்றி, சட்டத்திற்கும் நீதிக்கும் மதிப்பளிக்காதவர்கள் கூறிய கூற்றுகள் எல்லாம் ஏற்கத்தக்கவை அல்ல என நீதிமன்றங்களே தீர்ப்பளித்து, பெரும் வெற்றி வாகை சூடிய (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் சட்டத்தின் மாண்பை முழுமையாக அறிந்த, சட்டத்தின் வழி நடக்கும் நீதி தேவதை மாண்புமிகு அம்மா



அவர்கள் சட்டத்திற்கு அதிக மதிப்பு தந்து சட்டத் துறைக்கென தனியாக மானியக் கோரிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட சட்டத் துறையையும், நீதி நிருவாகத் துறையையும் நிருவகிக்கின்ற பொறுப்பினை சாதாரண, மிகவும் பிற்படுத்தப்பட்ட மீனவக் குடும்பத்தைச் சார்ந்த எனக்கு அளித்து, மானியக கோரிக்கை விவாதத்தின்போது பதிலளிக்கின்ற வாய்ப்பினை நல்கிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் *11-00*

நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள்மீது ஏறத்தாழ பல உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், உறுப்பினர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையில் என்னுடைய பதிலுரை அமையும் என்று நம்புகின்றேன்.

அமெரிக்க நாட்டில் தலைசிறந்த ஒரு வழக்கறிஞர் ராபர்ட் இங்கர்சால் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தை இந்த மாமன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

**"A Government founded upon anything except liberty and justice cannot stand. All the wrecks on either side of the stream of time, all the wrecks of the great cities and all the nations that have passed away, all are a warning that no nation founded upon injustice can stand, for, from the marble wilderness of Athens, and so, from every fallen of crumbling stone of the once mighty Rome comes a wail, as it were, the cry that no nation founded upon injustice can permanently stand."**

"சுதந்திர உரிமை, நீதி இவற்றின் அடிப்படையில் அமையாத, நிறுவப்படாத எந்தவொரு அரசாங்கமும் நிலைத்து இருக்க முடியாது. அநீதியின் அடிப்படையில் கட்டப்பட்ட எந்த தேசமும் நிரந்தரமாக நிற்காது; நிலைக்காது" என்ற பொருளை உணர்த்துகின்ற வகையில் இங்கர்சால் குறிப்பிட்டார். எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்மீது, காழ்ப்புணர்ச்சி காரணமாக வீண்பழி சுமத்தி, பொய் வழக்குகள் புனைந்து நீதிமன்றங்களின் படியேற

வைத்தார்கள் கடந்த ஆட்சியாளர்கள். அந்த அநீதியான ஆட்சி இங்கர்சால் கூற்றுப்படி மக்களால் தூக்கி எறியப்பட்டு, வெறுத்து ஒதுக்கப்பட்டுவிட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசமைப்புச் சட்டத்தின் மூன்று தூண்களாக விளங்குகின்ற நீதி, நிர்வாகம் மற்றும் சட்டம் இயற்றுதல் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படக்கூடியவை. அப்போதுதான் அந்த நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்படும். இதில் ஏதேனும் ஒன்றுக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஜனநாயகம் ஆட்டம் கண்டுவிடும். இந்தத் துறைகளை ஒருங்கிணைத்து செல்லும் தலைமைக்கு தைரியம் - courage, உறுதி determination, வலிமை - strength ஆகிய பண்புகள் தேவைப்படுகின்றன. இந்தப் பண்புகள் நிறைந்த ஒரே தலைவி எங்கள் அன்னை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எங்கள் தலைவி, சமுதாயத்தில் தீங்கு விளைவிக்கும் சமூக விரோதிகளை வென்று, மக்களிடம் அன்பு காட்டும்போது, A leader with iron hand covered with velvet cloth என்ற கூற்று நினைவுக்கு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சமூகவிரோதிகளை இரும்புக்கரம் கொண்டு அடக்கி, ஒடுக்கி, மக்களிடத்திலே அன்பைக் காட்டும் தைரியமிக்க தலைவியாக Courageous Leder-ஆக எதிரிகளால் வீசப்பட்ட ஏச்சுக்கள், பேச்சுக்கள், பொய் வழக்குகள் ஆகியவற்றை மன உறுதியோடு ஏற்று நிரபராதியென நிரூபித்து புடம் போட்ட தங்கம் என்று நீதிமன்றங்களால் சூளுரைக்கப்பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) உறுதிமிக்க தலைவியாக Determined Leader-ஆக, மக்கள் செல்வாக்கால் உயர்ந்து நின்று, வலிமைமிக்க தலைவியாக Strong Leader என்ற பெருமைகளோடு நீதி மற்றும் சட்டத் துறைகளில் புதிய மறுமலர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டிற்கு இரண்டு கடமைகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு இரண்டு கடமைகள் என்று சொல்லும்போது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பது. இரண்டாவது கடமை, நாட்டின்கீழ் வாழுகின்ற மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 1989-91 ஆம் ஆண்டுகளிலே இந்த 2 கடமைகளை நிறைவேற்றினார்களா? அதேபோன்று, 1996-2001 ஆம் ஆண்டுகளிலே இந்தக் கடமைகளை நிறைவேற்றினார்களா?



சமுதாயத்தினுடைய இரண்டு கண்களாக இருக்கின்ற, இரண்டு கடமைகளையும் நிறைவேற்றிய ஒரே தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1989-91 ஆம் ஆண்டுகளில், அன்றைக்கு தமிழ்நாடு எந்த அளவிற்கு ஓர் அமைதியில்லாத ஒரு மாநிலமாக, ஒரு சீர்கெட்ட, ஒரு சீரழிந்த நிலையிலேயிருந்து தீவிரவாதம் எல்லாம் ஊக்குவிக்கப்பட்டது என்பது நிச்சயமாக நாடறிந்த, மக்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், எந்த ஒரு நாட்டிலும் தீவிரவாதம் வளர்த்து விடப்பட்டால், அந்தத் தீவிரவாதத்தை அடக்குவது என்பது, எந்தவோர் அரசாங்கத்தாலும் நிச்சயமாக முடியாது.

காஷ்மீரிலே, அஸ்ஸாமிலேகூட வளர்த்துவிடப்பட்ட அந்த வன்முறையை அடக்கி ஒடுக்குவது என்பது இயலாத காரியமாக, அங்கே இருக்கின்ற அரசாங்கத்தால் இருக்கிறது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தால் வளர்த்துவிடப்பட்ட அந்தத் தீவிரவாதத்தை இரும்புக் கரங்கொண்டு அடக்கி, ஒடுக்கி, தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக உருவாக்கிய தலைவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

*1996-2001* ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியைப் பற்றி, உங்களுடைய முன்னாள் அமைச்சர், ஆலடி அருணா அவர்கள், அன்றைக்கு சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு இருந்தது என்பதை மே 12, 1998 அன்று அவர்கள் உரையாற்றும்போது சொல்லியிருக்கின்றார். "நமக்கு காலையிலும், மாலையிலும் வருகின்ற பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தால் அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கும். வெட்டு, குத்து, சங்கிலிகளை அறுத்தல், தாக்குதல் போன்ற செய்திகள் எல்லாம் பரபரப்பாக வரும். நமக்கே தெரியும், நாட்டிலே சட்டம் ஒழுங்கு இல்லையோ, குற்றங்கள் அதிகரித்துவிட்டனவோ என்று மலைப்பாக நமக்குத் தோன்றும். ஆனால், வளர்ந்து வருகின்ற நாடுகளிலே குற்றங்கள் எப்படி இருக்கின்றன என்ற கணக்கைப் பார்த்துவிட்டு, நம்முடைய மாநிலத்திலே எப்படி இருக்கிறது என்ற கணக்கையும் பார்த்தால், அப்போதுதான் இந்த மாநிலம் மிகவும் சிறப்பாக, அமைதியாக, நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்க முடியும்" என்ற கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஐந்தாண்டு காலத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்குச் சீர்கெட்டு, மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லை என்ற ஒரு

சான்றிதழை உங்களுடைய முன்னாள் அமைச்சரே இந்த அவையிலே சொல்லியிருக்கின்றார்கள். இதைவிட ஒரு சான்று நிச்சயமாக இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, அந்த ஐந்தாண்டுக் காலத்திலே அவர்கள் செய்த ஒரே வேலை, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழுக்கும், நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்கின்ற வகையிலேதான், ஐந்தாண்டு காலத்தில் செயல்பட்டார்களேயொழிய, வேறு எந்தச் செயலிலே அவர்கள் ஈடுபட்டார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஒப்பீட்டை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். கருணாநிதி, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி, பொய் வழக்குகள் போடுகின்றார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவற்றை வழக்காடுமன்றத்திலே எதிர்கொண்டு புடம் போட்ட தங்கம் என்று உயர்நீதிமன்றத்தாலே இந்த உலகத்திற்கு அறிவிக்கப்படுகின்றார்கள். ஆனால், உங்களுடைய தலைவர் கருணாநிதி, அன்றைக்கு என்ன செய்தார்? (குறுக்கீடுகள்) அன்றைக்கு என்ன செய்தார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் , 'திரு' என்பதைச் சேர்த்துக் கொள்ளவும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** திரு. கருணாநிதி என்ன செய்தார், அன்றைக்கு? சர்க்காரியா கமிஷனால் அன்றைக்கு கிட்டத்தட்ட 16 குற்றங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட சூழ்நிலையில், அன்றைக்கு தன் மீதுள்ள வழக்குகளை, தானே கோப்புகளை வரவழைத்து, வாபஸ் பெற்றுக் கொண்டாரா, இல்லையா? 23-11-1989 அன்று வாபஸ் பெற்றுக்கொண்டு, அன்றைக்கு நீதிமன்றத்தைச் சந்திக்காமல், ஒரு நியாயமற்ற செயலை திரு. கருணாநிதி அவர்கள் செய்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, புகழேந்தி சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய தலைவர் அவர்களைக் குறிப்பிட்டு இங்கே கூறுகின்றபோது, ஏதோ கோப்பை அவரே வரவழைத்து வாபஸ் பெற்றுக் கொண்டதாக, ஏதோ தவறான தகவலை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) ஏற்கெனவே சர்க்காரியா கமிஷனின் அடிப்படையிலே ஏதேனும் இருக்கிறதா என்று கடந்த காலத்திலே மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதே, வழக்குகளைப் போட வேண்டுமென்று முயற்சித்தபோதே,



அதிலே எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை; ஆகவே, வழக்கு போட முடியாது என்று திருப்பி அனுப்பப்பட்டதுதான் வரலாறே தவிர, வழக்கு போடுவதற்கு .... (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப் பற்றி நான் தெளிவாக இந்த மாமன்றத்திலேயே தெரிவித்திருக்கிறேன். அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி இந்த அவையில் இல்லை என்று கருதுகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், மீண்டும் மீண்டும் அமைச்சரவைக் கூட்டத்தில், சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் வந்த விவரங்களை வைத்து, வழக்குப் போட முடியுமா என்பதைப் பற்றி விவாதிக்கப்பட்டு, எந்த முடிவும் எடுக்காமல்தான் அது அப்படியே விடப்பட்டிருந்தது. வழக்கு போட முடியாது என்று கோப்பில் எழுதவில்லை. வழக்கு போட இடம் இல்லை என்று கோப்பில் எழுதவில்லை. எந்த முடிவும் எடுக்காமல் அப்படியே விடப்பட்டிருந்தது. மீண்டும் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் ஆனபோது, அவர் அந்தக் கோப்பை வரவழைத்து, அமைச்சரவைக் கூட்டத்தைக்கூட கூட்டாமல், தன்னிச்சையாக, அவராகவே, அந்தக் கோப்பில், 'இதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை; இந்தக் கோப்பை மூடலாம்' என்று கையெழுத்து போட்டார் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது குறித்து ஏற்கெனவே பேசப்பட்டது. இது குறித்து ஏற்கெனவே இங்கு விவாதிக்கப்பட்டு பேராசிரியர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** முயற்சிகள் எடுக்கப்பட்டு, வழக்கு போட முடியாத சூழ்நிலையிலேதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்ட நிகழ்ச்சி அது. மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். தேதியோடு சொல்கின்றேன், 23-11-1989 அன்று உங்கள் தலைவர் கோப்பிலே கையெழுத்திட்டு முடித்திருக்கிறார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட விவாதத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். கோப்புகளில் எழுதுவது என்பது வழக்குகள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, இதுபற்றி நீண்ட விவாதம் இந்தச் சட்டமன்றத்திலே நடைபெற்றது. அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். முதலமைச்சர் அவர்களும் அதற்குரிய விளக்கத்தையெல்லாம் சொன்னார்கள். முடிக்கப்பட்ட விவாதம். (குறுக்கீடு) முடிக்கப்பட்ட விவாதம். அமைச்சரைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி 5 ஆண்டு காலத்திலே மக்கள் செலுத்துகின்ற, வியர்வை சிந்தி அவர்கள் உழைத்த அந்த ஒவ்வொரு ரூபாய் வரி கட்டுகிற பணம் 57 கோடி ரூபாய் செலவழித்து நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவை அழித்துவிட வேண்டுமென்று நினைத்தீர்கள். ஆனால், மக்கள் உங்களை தண்டித்தார்கள். இதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

காலம் தாழ்த்தி வழங்கப்படுகின்ற நீதி மறுக்கப்படும் நீதி என்று சொல்வார்கள். Justice delayedis Justice denied. எனவே, வழக்குகளை விரைந்து முடித்து உடனடியாக தீர்வு நல்கிட வேண்டுமென்கின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 49 Fast Track கோர்ட்டுகளை அமைத்து, அதன்மூலம் ஒரு நல்ல பலனும் கடந்த ஒரு வருடக் காலத்திலே கிடைத்திருக்கிறது. ஏறக்குறைய 2,744 வழக்குகள் விசாரிக்கப்பட்டு இறுதித் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக வழக்குகள் என்று சொல்லும்போது தமிழ்நாட்டிலே மட்டும் 11 இலட்சத்து 74 ஆயிரத்து 703 வழக்குகள் இப்போது தேக்கமாக இருக்கின்றன. அகில இந்திய ரீதியிலே ஒப்பிடும்போது, அலகாபாத் உயர் நீதிமன்றத்திலே மட்டும் ஏறக்குறைய 12 இலட்சம் வழக்குகள் தேக்கமாக இருக்கின்றன. நம்முடைய உயர் நீதிமன்றத்திலே ஏறக்குறைய 3 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. ஆனால், இதிலே என்ன பிரச்சினையென்றால், ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய சென்னை உயர் நீதிமன்றத்திலே மட்டும் ஒரு லட்சம் institution of new cases—புதிதாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்ற காரணத்தினால் ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தேக்க நிலை இருக்கிறது. எனவே, அதுகூட எதிர்காலத்திலே இருக்கக்கூடாது என்கின்ற வகையிலே



நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதி நிருவாகத்தை சிறப்பான முறையிலே செம்மைப்படுத்தி, வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று அறிவுரை சொல்லியிருக்கின்றார்கள்.

அதேபோன்று வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய அந்த டெபாசிட்டினுடைய இன்டரஸ்ட்டை புரொடெக்ட் செய்ய வேண்டுமென்பதற்காகவே அதற்கு நம்முடைய அம்மா அவர்கள் அறிவுரை கொடுத்து மொத்த வழக்குகள் 513 எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 13 வழக்குகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 389 கோடி ரூபாய் வைப்பீட்டாளர்களுக்குத் திருப்பி செலுத்தப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டு சொத்துக்களை கையகப்படுத்த 89 வழக்குகளில் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

குற்ற வழக்குகளைப் பொறுத்தவரையிலே Director of Prosecution தலைமையிலே இந்த இயக்ககம் இயங்கி வருகிறது. வழக்குகள் விரைவாக முடிக்கப்படவேண்டுமென்கின்ற அறிவுரையை ஏற்று இதுவரையில் கிட்டத்தட்ட 1 இலட்சத்து 38 ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு லட்சத்து 35 ஆயிரம் வழக்குகள் இந்த ஆண்டு மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சாட்சிகள் விசாரணை என்று சொல்லும்போது, இரண்டரை இலட்சம் சாட்சிகள் இதுவரையிலே விசாரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மதுரையில் உயர் நீதிமன்ற ஆயம் அமைத்தல் தொடர்பாக, தென் மாவட்டங்கள் பயன்படுகின்ற வகையில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏறக்குறைய 44 கோடியே 81 இலட்சம் ரூபாய் முதற்கட்டமாக மதுரை பெஞ்ச் கோர்ட்டிற்கு உலகநேரி என்ற கிராமத்தில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ள அந்தப் பணி முடிவுறும் தருவாயில் இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் மகேஸ்வரி, கோயம்புத்தூரிலே சர்கியூட் பெஞ்ச் அமைப்பதற்கு கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். இதுகுறித்து உயர் நீதிமன்றத்தினுடைய கருத்து கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Education is a Horse, Experience is the Jockey என்று சொல்வார்கள். எவ்வளவுதான் நாம் படித்திருந்தாலும்கூட அனுபவம் என்பது மிக, மிக முக்கியமாகக் கருதப்படுகின்ற சூழ்நிலையில் அனுபவம் மிக்க நீதியரசர்களைக் கொண்டு நீதித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவே Judicial Academy ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த Judicial Academy-க்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.4.5 கோடி கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்து இருக்கின்றார்கள்.

*முற்பகல்: 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6989*, திரு. அ. அசோகன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5228*, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதியில் நாகுடி, பொன்பேத்தி, சிங்கவனம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவது (upgrade) குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*12,43,79,12,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*20,26,01,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2148*, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சாத்தூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*12,43,79,12,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*20,26,01,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7097*, திரு. துரை கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5524*, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகச் செயல்படுவதால் நோய்களின் தன்மைக்கேற்ப பிரிவுகள், கட்டடங்கள் புதியதாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,43,79,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,26,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1389*, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,43,79,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,26,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7673*, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,43,79,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,26,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5250*. டாக்டர் பி. வள்ளல் பெருமான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2675*, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். அவ்வளவுதான். என்ன இது? சிக்கல் பிடித்த வேலையெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குறிஞ்சிப்பாடியில் உள்ள வட்டம் சாரா மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் பணியமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,43,79,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,26,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டு மன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

---

@783 முதல் 840 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நடந்த விவாதத்திலும், நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தின்போது நடந்த கூட்டத்தொடரிலும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய செயல்பாடு பற்றி நல்ல பாராட்டுதலைச் சொல்லி நல்ல ஆலோசனைகளையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த விவாதத்திலும் பேசவிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துறையினுடைய முன்னேற்றத்திற்கு, இந்தத் துறையினுடைய செயல்பாட்டிற்கு நல்ல ஆலோசனைகளை அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் தங்களுடைய கருத்துகளை, நல்ல ஆலோசனைகளைச் சொல்லியதற்குப் பிறகு, நான் பதில் அளிக்கிறபோது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, இந்தத் துறையிலே எடுத்த நடவடிக்கைகள் பற்றியும், தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிற திட்டங்களைப் பற்றியும், எதிர்காலத்திலே செயல்படுத்த இருக்கிற திட்டங்களைப் பற்றியும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு இந்தத் துறையின் சார்பிலே அறிவிக்கச் சொல்லியிருக்கிற புதிய அறிவிப்புகளைப் பற்றியும் இங்கே விளக்கமாக எடுத்து வைக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின் மீது விவாதம், திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். 11 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆளுக்கு 10 மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

## 7. இலங்கை சென்று திரும்பிய உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்களுக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் வெளிநாடு சென்று தாயகம் திரும்பி இருக்கிறார்கள். ஆகவே வெற்றிகரமாக பயணத்தை முடித்து தாயகம் திரும்பிய அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பிலே என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய வாழ்த்துகளோடு பேரவையின் வாழ்த்துகளையும் இணைத்துக்கொள்ளுகிறேன். ஒரு நல்ல பிள்ளைக்கு அடையாளமே சொல்லாமல் கொள்ளாமல் போவது என்று சொல்லாமல் போய்விட்டு வந்துவிட்டார்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவித்துக்கொண்டுதான், ஸ்ரீலங்கா சென்று வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றேன். மேலும் நான் அமைச்சர்களிடத்திலே எல்லாம்கூட சொல்லிவிட்டுச் சென்றேன். இன்றைய சூழ்நிலையிலே இலங்கைக்குச் சென்று அங்கே இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் பார்த்து வருகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அங்கே ஒரு நிறைவான சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பாராட்டு தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் ஸ்ரீலங்கா சென்று வந்து இருக்கிறார். அங்கே சென்று விடுதலைப் புலிகளினுடைய தலைவர் பிரபாகரனை சந்தித்தாரா? (சிரிப்பு) பேசினாரா? சமரசத்தை உருவாக்கினாரா? நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வேண்டாம், வேண்டாம்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (ஈ) கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசினுடைய போக்கினை பார்க்கின்றபோது, அதாவது இங்கே மானியக் கோரிக்கையில் கூறியவற்றைப் பார்க்கின்றபோது, ஏழை மக்களுடைய அரசாக சொல்லுகின்ற அரசு, தமிழ் மாநிலத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாகக் கொண்டுவருவோம் என்ற இந்தக் கூற்றினை நிறைவேற்றுமா என்பது இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ள நிதியைப் பார்க்கும்போது சந்தேகம் வருகிறது. காரணம் *1995-1996* ஆம் ஆண்டு இந்த அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒதுக்கிய நிதி *688* கோடி ரூபாய். தலைவர் கலைஞருடைய *5* ஆண்டு கால ஆட்சியில் *1,263* கோடியாக இரண்டு மடங்காக உயர்த்தி ஏழை மக்கள் பயன்படும் அளவுக்குப் பல சாதனைகளை நிறைவேற்றும் அரசாக இருந்தது. அதைக் குறை கூறி ஆட்சிக்கு வந்த, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் *2001-2002*-ல் *1,334* கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. ஆனால் பல குறைகளைக் கூறியவர்கள் தங்களுடைய சாதனைகளைச் செய்தார்களா என்றால் இல்லை. மீண்டும் இந்த ஆண்டு - நடப்பு ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.*1,264* கோடி. ஆனால், குறைவாக, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு குறைவாக இருப்பதைக் காட்டுவது....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், நாங்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கின்ற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை நன்றாகப் படித்துப் பார்த்து பேசிக்கொண்டு இருக்கிறார். படித்துப் பார்த்ததற்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சரியாக அதைப் படித்துப் பார்க்கவில்லையே என்ற அந்த வருத்தமும் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. காரணம் ஏதோ சென்ற ஆண்டு, நாங்கள் *1,334.72* கோடி ரூபாயை இந்தத் துறைக்கு ஒதுக்கிவிட்டு, இந்த ஆண்டு இந்தத் துறைக்கு நாங்கள் நன்மை செய்கிறோம் என்று சொல்லி *1,264.05* கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கி இருக்கிறோம், எனவே, ஒதுக்கிய தொகை சென்ற ஆண்டைவிடக் குறைவாக இருக்கிறது என்று சொல்லி, ஏதோ இந்தத் துறையின்மீது இந்த அரசுக்கு அக்கறை இல்லாததைப்போல, இங்கே ஆரம்பிக்கின்றபோதே ஏதாவது ஒரு குறையைச் சொல்ல வேண்டுமென்று, இங்கே குறையைச் சொல்லியிருக்கிறார். இவ்வளவு நுணுக்கமாகப் படித்த நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், கீழே உள்ளதையும் படித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.



முற்பகல் *11-45*

சென்ற ஆண்டு ரூ.*1334.72* கோடி என்பது பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கிய தொகையையும், E.S.I.-க்கு ஒதுக்கிய தொகையையும் சேர்த்து கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ.*1,264.05* கோடி என்று ஓர் இடத்திலே நாங்கள் கணக்கைக் கொடுத்துவிட்டு, கீழே 'குறிப்பு' என்று போட்டு, பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கை எண் *38*-ன்கீழ் ரூ.*39.35* கோடியும், மானியக் கோரிக்கை எண் *31*-ன்கீழ் E.S.I. மருத்துவமனைகளுக்கென ரூ.*88.11* கோடியும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். இவ்விரண்டையும் கூட்டிப் பார்த்தால், இந்த ஆண்டு ஒதுக்கிய தொகை ரூ.*1,391.51* கோடி. எனவே, இந்த ஆண்டு, சென்ற ஆண்டைவிடக் கூடுதலாக *56* கோடியே *78* இலட்சம் ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு கூடுதலாக இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை *56* கோடியே *78* இலட்சம் ரூபாய்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. இருந்தாலுங்கூட, அது பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி என்பதால், அதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். --

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்கு என்று நாங்கள் அந்தத் துறைக்கு ஒதுக்கவில்லை. பொதுப் பணித் துறையின் மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு உண்டான கட்டடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கியிருக்கிறோம். எனவே, அந்தத் தொகையும், இந்தத் துறையினுடைய பணம்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடை எல்லாம் கொஞ்சம் கழித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இதையெல்லாம் கூட்டிவிடுவேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அடுத்ததாக, ஏழை மக்கள் பயன்பெறுகின்ற மருத்துவமனையில் ஏழை நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பார்க்க வருகின்றவர்களும் ஏழைகள்தான். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி 1996-ல் வருவதற்கு முன்பு பார்வையாளர் கட்டணம் 2 ரூபாய் என்று இருந்ததை இரத்து செய்தார்கள். மீண்டும் ஏழைகளுடைய அரசு என்று சொல்லிக்கொண்டு வந்துள்ள நீங்கள், வந்தவுடனே, பார்வையாளர் கட்டணத்தை 5 ரூபாய் என்று விதித்து, இன்றையதினம், ஏழை விவசாயிகள், ஏழைத் தொழிலாளிகள் எல்லாம் தங்களுடைய உறவினர்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பைக் குறைத்துள்ளீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே என்னுடைய கண்டனமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இந்த மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்கின்ற துறையாக, பயன்படுகின்ற துறையாக இருக்க வேண்டுமே தவிர, இலாபத்தைக் கருதி, இந்தத் துறை இருக்கக் கூடாது என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டு.....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பார்வையாளர்களையே நோயாளிகளைப் பார்ப்பதற்கு இந்த அரசு தடை செய்துவிட்டதைப்போல மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். பார்வையாளர்களுக்கு என்று ஒரு நேரம் இருக்கிறது. அந்த நேரத்திலே பார்வையாளர்கள் இலவசமாகத்தான் அனுமதிக்கப்படுகின்றார்கள். அப்போது எந்தக் கட்டணமும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பார்வையாளர்கள் கட்டணம் மற்ற நேரங்களிலே வசூலிக்கப்படுவதனால் என்னென்ன நன்மைகள்; அதை எப்படியெல்லாம் பத்திரிகைகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் பதிலுரையிலே சொல்கிறேன். ஆனால், பார்வையாளர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்திலே பார்வையாளர்கள் இலவசமாகத்தான் அனுமதிக்கப்படுகிறார்கள். அதற்கு எதுவும் தடை இல்லை.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன இருந்தாலும், பார்வையாளர்கள் கட்டணத்தை நீங்கள் இரத்துச் செய்ய வேண்டும். இலவசமாகப் பார்ப்பது, கட்டணத்துடன் பார்ப்பது என்ற முறையை எல்லாம் படித்தவர்கள் பார்ப்பார்கள். ஆனால்,



படிக்காதவர்கள்தான் நிறைய பேர் அங்கே வருவார்கள். அதனாலே, அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் (குறுக்கீடு) இரத்து செய்ய வேண்டும். தேவையில்லாத திட்டங்களை நிறைவேற்றுவதைவிட, ஏழைகளுக்குப் பாடுபடுகின்ற அரசாகத் திகழ வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, ஒரு கருத்தைச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தனியார் மருத்துவமனைகள் அதிகமாக இருக்கின்ற வகையில், மத்திய அரசின் ஓர் அறிவிக்கையின்படி, இறக்குமதி தொடர்பான சலுகைகளைக் கோரும் தனியார் மருத்துவமனைகள் படுக்கை எண்ணிக்கையில் 10 சதவிகிதம் உள் நோயாளிகளுக்கும், 40 சதவிகிதம் புற நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்க வேண்டுமென்பது தெரிகிறது. இதன்படி தமிழ்நாட்டிலுள்ள தனியார் மருத்துவமனைகள் 10 சதவிகிதம் உள் நோயாளிகளுக்கும், 40 சதவிகிதம் புற நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கிறதா என்பதைக் கண்காணித்து, மேற்சொன்னவாறு தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளிக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், தனியார் மருத்துவமனைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற பொருட்களுக்கு சுங்க வரி வசூலிக்கப்படுவதில்லை. காரணம், ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய வேண்டுமென்ற condition அடிப்படையில் அந்தத் திட்டத்தை, மத்திய அரசு அனுமதித்துள்ளது. அதேபோன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற அப்போலோ மருத்துவமனை, இராமச்சந்திரா மருத்துவமனை போன்ற பெரிய தனியார் மருத்துவமனைகளெல்லாம் அந்தத் திட்டத்தை, அந்தச் சட்டத்தை அவர்கள் பின்பற்றுகிறார்களா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்ற எனது கருத்தைத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, பொது மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. ஆனால், சென்னையில் இருக்கிற பொது மருத்துவமனையில், அரசு பொது மருத்துவமனையில் இந்த ஆண்டு நோயாளிகளுக்கெல்லாம் இருதய அறுவை சிகிச்சை Heart Operation-க்கான வாய்ப்பு குறைக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. கேட்டால் மருந்து இல்லை என்கிறார்கள், சிகிச்சை செய்கின்ற infrastructure எந்தவிதப் பொருளும் இல்லை என்கிறார்கள். Operation Theatre

இல்லையென்கிறார்கள். 2000-2001-ல் கலைஞருடைய ஆட்சியில் ஒரு வருடத்திற்கு 1,113 நோயாளிகளுக்கு இலவசமாக Open Heart Surgery செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு இதே மருத்துவமனையில் அந்த நிலை இப்போது இல்லை. ஒரு நாளைக்கு 5, 6 நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்கின்ற ஒரு வசதி சென்னை பொது மருத்துவமனையில் இருந்தது. ஆனால், இப்போது இல்லை. வாரத்திற்கு 2, 3 செய்கிறார்கள். நோயாளிகளெல்லாம் அங்கு வந்து படுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு Heart-ல் பிளாக் இருக்கிறது என்றால், Heart Operation உடனே செய்தாக வேண்டும். வசதியுள்ளவர்கள் தனியார் மருத்துவமனைக்குப் போவார்கள். இந்த ஆபரேஷன் செய்ய வேண்டுமென்றால் 2, 3 இலட்சம் ரூபாய் செலவாகும். ஆனால், ஏழை விவசாயியோ, ஒரு தொழிலாளியோ இந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்றால், அந்த வாய்ப்பு சென்னை பொது மருத்துவமனையில் இப்போது இல்லை. அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். இந்த ஆண்டு எவ்வளவு Open Heart Surgery செய்யப்பட்டுள்ளது என்பதை நம்முடைய அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Neurology Department எங்களுடைய பகுதியைச் சார்ந்த ஒரு நோயாளி அனுமதிக்கப்பட்டு இங்கே ஆபரேஷனுக்கு வந்தால், Theatre சரியில்லை. அந்த ஆபரேஷன் செய்வதற்கு A.C. குறைவாக இருக்கிறது. A.C. இல்லை. Operation Theatre பழுதடைந்து இருக்கிறது. நோயாளி செத்துவிட்டான். இத்தகைய நிலை சென்னை பொது மருத்துவமனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே போய் பார்த்தால் lift இருக்கிறது. ஆனால் அது இயங்குவதில்லை. கேட்டால் நூறு ஆண்டு ஆகிறது என்கிறார்கள். ஒரு நாள் இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். லிப்ட் வேலை செய்யவில்லை. 4 மாடி, 5 மாடி ஏற முடியவில்லை. லிப்ட் பழுதடைந்துள்ளது. அதையும் நீங்கள் பராமரிக்க வேண்டும்.

அதேபோன்று, கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் M.R.I. Scan கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் திறந்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் சென்னை பொது மருத்துவமனையிலும், மதுரையில் இராஜாஜி மருத்துவமனையிலும் M.R.I. Scan கருவியை 10 கோடி ரூபாயில் உருவாக்கிக் கொடுத்தார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நாங்கள் செய்த சாதனையை நீங்கள் திறக்கிறீர்கள். நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் எல்லா



மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் M.R.I. Scan வருவதற்குரிய நடவடிக்கையை எடுத்தால் அது பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று Kidney stone — சிறுநீரகக் கல். இந்த நோயினால் ஏழை மக்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். வைத்தியம் செய்கின்ற கருவி இப்போது மருத்துவமனையில் இல்லை. Kidney stone-ஐ உடைக்கின்ற கருவியை சென்னை பொது மருத்துவமனையில் நீங்கள் அமைக்க வேண்டும். ஏனென்றால், தனியாரிடம் Kidney Stone-ஐ உடைக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 20 ஆயிரம், 25 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். அந்தக் கஷ்டத்தை தாங்கும் சக்தி ஏழை மக்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

அதேபோல, நம்முடைய மினி மருத்துவமனை. பேப்பரிலே செய்தி பார்த்திருக்கிறோம். கடந்த ஆண்டு 2001-2002 நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம், ஒவ்வோர் ஒன்றியத்திலும் இருக்கிற அரசு மருத்துவமனைக்கு அதிகமான படுக்கைகள், அதிகமான மருத்துவ வசதிகள், கருவிகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இன்னும் நடந்ததா என்னவென்று தெரியவில்லை. நேற்று - 3-ஆம் தேதி எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 385 பஞ்சாயத்து யூனியன்களில் மினி மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் சந்தேகமாக இருக்கிறது. இந்தத் திட்டம் ஒன்றா அந்தத் திட்டம் ஒன்றா என்பதை விளக்க வேண்டும். அதேபோல, இங்கே முதலமைச்சர் அறிவித்த முறை - தேர்தல் அறிவித்துவிட்டார்கள், இப்போது. தமிழ்நாட்டிலே தேர்தல் அறிவித்தாயிற்று. சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், 385 பஞ்சாயத்துக்களிலே மினி மருத்துவமனைகள் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படும் என்பதை முதலமைச்சர் தனியாக ஒரு விழாவில் அறிவிக்கிறார். இது என்ன முறை என்று தெரியவில்லை. சட்டமன்றத்திலே...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் .மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பட்டமளிப்புப் பேருரையாற்றுகிறபோது அறிவித்த - மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற

அறிவிப்பு - அதாவது தமிழகத்திலே இருக்கிற 385 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தரம் உயர்த்துவதற்கு 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆக்குவதற்கு அறிவித்த அறிவிப்பு, ஏதோ புது அறிவிப்பாக அல்லது புது கொள்கை முடிவாக அந்தப் பேருரையிலே அவர் அறிவிக்கவில்லை. சென்ற ஆண்டு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே அது சொல்லப்பட்டு, இப்போது அந்தத் திட்டம் நடைமுறையிலே இருக்கிறது. எனவே, நடைமுறையில் இருக்கிற அந்தத் திட்டத்தைத்தான் சொன்னாரே தவிர, புதிய கொள்கை முடிவை அவர் அறிவிக்கவில்லை. எனவே, அது எந்தவகையிலுமே இந்தத் தேர்தலைப் பாதிக்காது. (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், 15 மணித் துளிகள் ஆயிற்று. இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இப்போதுதான் 10 நிமிஷம் கிராஸ் பண்ணினேன். 10 மணித்துளிகள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிஷமா? 15 நிமிஷங்கள் ஆகிவிட்டது.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** உடம்பு வேறே சரியில்லை எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன செய்வது? அதனாலே தான் நான் அதிகம் பேசக்கூடாது என்று சொல்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடல்நலம் இல்லாமல் அதிகநேரம் பேசக்கூடாது. இரண்டு மணித் துளிகளிலே முடியுங்கள். உங்கள் உடல்நலத்தை முன்னிட்டு நீங்கள் வேண்டியவர் என்கிற காரணத்தினால், வேங்கையின் மைந்தன் என்கிற காரணத்தினால் இரண்டு மணித் துளிகளிலே முடிக்கச் சொல்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் 2001-லே அறிவித்த திட்டம் - இந்த ஓர் ஆண்டு முடிந்துவிட்டது. ஓர் ஆண்டு முடியப்போகிறது. அறிவித்த திட்டம் அறிவிப்போடு இருக்கிறதே தவிர, வருடாவருடம் நீங்கள் அறிவித்துக்கொண்டே இருந்தால், எப்போது செயல்படுத்தப்போகிறீர்கள் என்ற சந்தேகம் மக்களுக்கு வரும்; எங்களுக்கும் வரும் என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக BPT-Physiotherapist படித்த மாணவர்கள் - தங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அதிகமாக அந்தக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டீர்கள். இப்போது அதிகமாக கிட்டத்தட்ட பத்தாயிரம் மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் தடுமாறுகிறார்கள். ஆனால், இந்த அரசு இருநூறு, இருநூற்று ஐம்பது பேர்களுக்கு மாத்திரம்தான் வேலை கொடுத்திருக்கிறது. அந்த BPT Physiotherapist Course படித்த மாணவர்களை அனைத்து மருத்துவமனைகளிலும் பணி நியமனம் செய்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும்.

அதேபோல, எல்லோருக்கும் கவுன்சில் கொடுத்துவிட்டார்கள்.. Law-க்கு Bar Council இருக்கிறது. நர்சுகளுக்கு கவுன்சில் இருக்கிறது. டாக்டர்களுக்கு கவுன்சில் இருக்கிறது. ஆனால், BPT students-களுக்கு ஒரு கவுன்சில் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதை இந்த ஆட்சி நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மருந்து தட்டுப்பாடு. பொது மருத்துவமனையிலே கேட்டால் மருந்து இல்லையென்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன். கடந்த ஆட்சியிலே, எங்கள் ஆட்சியிலே 100 கோடி ரூபாய்க்கு மருந்து கொடுத்து, அதற்கு மாவட்ட அளவிலே கட்டடம் எல்லாம் கட்டிக் கொடுத்து அதன்மூலமாக ஏழை மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு மருந்துகள் கொடுத்தார்கள். இந்த ஆட்சியிலே அது தொடர்கிறதா என்பது தெரியவில்லை.

அதுபோல, எப்போது பார்த்தாலும், எங்கு பார்த்தாலும் நாய்கள் ஊர் பூராவும் நிற்கின்றன. எங்கே பார்த்தாலும் பாம்பு இருக்கிறது. குரங்குகூட இருக்கிறது. அதிகமாக எங்கே பார்த்தாலும் குரங்கு இருக்கிறது. பாம்பு கடிக்கு மருந்து இல்லை என்கிறார்கள். அதுபோல, பாம்பு கடிக்கு என்ன காரணம் என்றால் இப்பொழுது எங்கே பார்த்தாலும் அறிவிக்கப்படாத மின்வெட்டு. விவசாயிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரவிலே நான்கு மணிக்கு மேலேதான் மின்சாரம் வருகிறது. நான்கு மணி நேரம் இரண்டு மணி நேரம் மின்சாரம் வருகிறது. இதனால் விவசாயிகள் இரவிலே போய் வயலிலே நடக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் மின்வெட்டு. இந்த ஆட்சியிலே மின்வெட்டு இல்லை என்றார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் மின்வெட்டாக இருக்கிறது. கடலூர் மாவட்டத்திலே மின்சாரம் இல்லை. இதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை கவனிக்க வேண்டும். ஏனென்றால் பாம்பு கடித்து நிறையபேர் செத்திருக்கிறார்கள். அந்த பாம்பு கடிக்கு வைத்தியம் செய்கிற நிலையை உருவாக்க வேண்டும்.

அதேபோல, நாய்களைப் பார்த்தால், தெருவிலே எங்கே பார்த்தாலும் நமமைவிட அதிகமாக நாய்கள் இருக்கின்றன. (சிரிப்பு) நாய் population அதிகமாகிவிட்டது. யானைக்குக்கூட இப்போது கருத்தடை ஆப்பரேஷன் பண்ணுகிறார்கள். நாய்க்குக்கூட ஆப்பரேஷன் பண்ணலாம் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு அதைச்செய்ய வேண்டும்.

நண்பகல் 12-00

குரங்கைப் பார்த்தால் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் குரங்குகள் ஆளையே விரட்டுகின்றன. சின்னச் சின்ன பிள்ளைகள் எல்லாம் கீழே விழுந்து கையை ஒடித்துக்கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்து என் நண்பருடைய குழந்தை இரண்டு தடவை குரங்கிற்குப் பயந்து கையை ஒடித்துக் கொணடது. அதனால் குரங்கைக் கட்டுப்படுத்த வேண்டும். வனத் துறையைக் கலந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாம்பு கடித்தவர்களுக்கு நிவாரணத் தொகை கொடுக்கப்படவில்லை. அதுவும் ஒரே குடும்பத்தில் 3 பேர் செத்திருக்கிறார்கள். அதற்கு சாட்சி எல்லாம் இருக்கிறது. பாம்பைப் பிடிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால், பாம்பைப் பிடிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் அல்லது பாம்புக் கடிக்கு அதிகமான மருந்துகளைக் கொடுக்க வேண்டும். அதனால்,

அதேபோல, மருத்துவமனைகளில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் வந்து சேர்ந்து படிக்க கலைஞருடைய ஆட்சியில் கிராமப்புறத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு 15 சதவிகிதம் இடஒதுக்கீடு கொடுத்தார்கள். அதன் மூலமாக 255 மாணவர்கள் பயன் பெற்றார்கள். இந்த ஆட்சி வந்தது. நீங்கள் 15 சதவிகிதம் கொடுத்தீர்களா, நாங்கள் 25 சதவிகிதம் தருகிறோம் என்று சொல்லி முதலமைச்சர் கொடுத்தார்கள். உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணா என்று 25 சதவிகிதம் போட்டு கோர்ட்டிலே ஸ்டே போட்டு அதுவும் நின்றுவிட்டது. அதனாலே இன்னும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு உரிய வேறு முறைகளைப் பின்பற்ற வேண்டும். இப்போது கோர்ட்டிலே போட்டிருப்பீர்கள். கோர்ட்டிலே போட்டால் இன்னும் 10 வருடமாகிவிடும். அதனாலே அதற்கு வேறு முறையில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.



அதேபோல கட்டட வசதி. கலைஞர் ஆட்சியில் கட்டட வசதி செய்து கொடுத்தோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சென்னையிலே பொது மருத்துவமனையில் 2 கட்டடம் கட்டுகிறார்கள். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவு திட்டத்திலே இரண்டு அதி நவீன வசதி கொண்ட புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு கலைஞர் ஆட்சியில்தான் அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இப்போது கட்டிக் கொண்டு இருக்கின்ற காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கலைஞர் சொன்னார், நீங்கள் வந்து உங்கள் ஆட்சியிலே ஒரு விமானத்தை வாங்கி வைத்திருக்கிறீர்கள்; அதை விற்றுவிட்டு நாங்கள் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அந்த விமானத்தை விற்க முடியவில்லை. அதனால் அரசினுடைய நிதியின் மூலமாக கிட்டத்தட்ட 50 கோடிக்கு மேலே பணத்தைக் கொடுத்து 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய வாய்ப்பையும் கலைஞர் கொடுத்தார். அதற்கு ஆம்புலன்ஸ் வசதியையும் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

அதேபோல புகையிலை, குட்கா, பான் மசாலா (குறுக்கீடு) இருங்கள். பான் மசாலாவிற்குத் தடை போட்டிருக்கிறீர்கள். இப்போது சட்டமன்ற உறுப்பினர் திரு. உசேன் அவர்கள்கூட ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறார். அவருக்கு மக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் சுப்ரீம் கோர்ட் ஒரு சட்டத்தை 7 விதிமுறைகளுக்கு உட்பட்டு தடை செய்ய வேண்டும்,என்ற ஓர் உத்தரவை போட்டு இருக்கிறார்கள். அதன் மூலம் அதைச் செய்ய வேண்டும். பான்மசாலாவிற்கு சட்டம் போட்டதால் என்ன ஆயிற்று என்றால் இரண்டு ரூபாய்க்கு விற்ற பான்மசாலா இப்போது திருட்டுத்தனமாக மூன்று ரூபாய்க்கு விற்கிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே வாங்கினீர்கள்?

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நான் வாங்கவில்லை. சொல்கிறார்கள். நமக்குப் பழக்கமில்லை. (சிரிப்பு). அதனால் அதற்கு நடவடிக்கை எடுத்து நீங்கள் அதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒன்று கட்டுப்படுத்த வேண்டும் : இல்லையென்றால் விட்டுவிடவேண்டும். அடித்த பாம்பை விடக்கூடாது. அதனால் இந்த பான் மசாலா சட்டத்தை நீங்கள் தடைப்படுத்த வேண்டுமென்றால் அதை முழுமையாகத் தடைப்படுத்த வேண்டும்.

அடுத்து கொசுத் தொல்லை. எங்கே பார்த்தாலும் கொசு ஆளையே தூக்கிக் கொண்டு போகிறது. சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் பார்த்தால் ஏகப்பட்ட கொசுக்கள் இருக்கின்றன. சபாநாயகருக்குச் சொல்கிறேன், சட்டமன்றத்திலே, விடுதியிலே கொசு பயங்கரமாக இருக்கிறது. ஆளையே தூக்கிக் கொண்டு போகிறது. எங்கே பார்த்தாலும் கிராமந்தோறும், நகரந்தோறும் (குறுக்கீடு) நாங்கள் அங்கேதான் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொசு என்ன தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்துக் கடிக்கின்றதா? (சிரிப்பு)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** தமிழ்நாட்டில் கிராமந்தோறும், நகரத்திலேயும், பேரூராட்சி, ஊராட்சி, எல்லா ஊர்களிலும் இப்போது கொசு இருக்கிறது. அதற்கு ஒரு விடிவுகாலம் காண வேண்டும். இப்போது பங்களாவிலும் கொசு இருக்கும். எனவே, அதற்கு ஒரு விடிவுகாலம் காண வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர்

அதேபோல, தாம்பரம் இந்திய மருத்துவமனை. தாம்பரத்தில் இந்திய மருத்துவ ஆராய்ச்சித் திட்டம், 100 கோடி ரூபாய் திட்டத்திலே மத்திய அரசு நிதியுதவி மூலமாக கலைஞர் ஆட்சியில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதனுடைய நிலை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். பெரம்பலூரில் நம்முடைய மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் திரு. ராஜா அவர்கள் ஆட்சிக் காலத்திலே மத்திய அரசு நிதி மூலமாக 1 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு திட்டத்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அதாவது அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி ஓர் ஆணை போட்டார்கள். 1 கோடி ரூபாய்க்கு அதைத் தரம் உயர்த்த வேண்டும் என்று. அதன் நிலை என்ன ஆயிற்று என்பதை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, என்னுடைய, தொகுதி, உளுந்தூர்பேட்டையில் வேப்பூர்-சேலம் ரோடு, திருச்சி ரோடு, ஆத்தூர் ரோடு ஆகிய பகுதிகளில் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் விழுப்புரத்திலே ஒரு புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்போம் என்று அறிவித்தார்கள். எங்களுடைய ஆட்சியிலே ஐந்து மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டார் கலைஞர் அவர்கள். அதை நாங்கள் செயல்படுத்திக் காட்டினோம். விழுப்புரத்திலே நாங்கள் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்போம் என்று அறிவித்தார்கள். அதையும் - ஏனென்றால் அங்கு அதிகமாக Accidents ஆகின்றன. எல்லோரும் செத்துப் போகிறார்கள். வேறு வழியில்லை. அதேபோல, கடலூரிலும் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும். விழுப்புரத்திலும் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-05*

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை.... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். வடலூரில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நெடுஞ்சாலையையொட்டி இருக்கின்ற காரணத்தினால் அதற்கு இங்கே வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். குறிஞ்சிப்பாடிக்கு தரத்தை உயர்த்துவோம் என்கிறீர்கள். வடலூரில் அவசர சிகிச்சை பிரிவு உருவாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளீர்கள். காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் இந்த அரசு நிதியில்லை, நிதியில்லை என்று ஒரு காரணத்தைக் காட்டி, சப்பைக் கட்டி காரியத்தை குளோஸ் பண்ணுகிறீர்கள். அதனாலே கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டு முடியவில்லை, வருகின்ற ஆண்டிலாவது முடியுமா என்ற சந்தேகத்தை எழுப்பி, கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சின்னசாமி.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையே வடிவாய் திகழும் எங்களின் இதய தெய்வம், ஏழை எளிய மக்களது வாழ்வின் நம்பிக்கை நட்சத்திரம், இந்திய திருநாட்டின் ஒப்பற்ற தாய், உலகம் போற்றுகின்ற உத்தம தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் தங்கமான தமிழ்த் தாய், அன்பு, அறிவு, துணிவு ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய சரித்திரத் தாய், சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை பழனி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி இந்த மாமன்றத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததை என் வாழ்நாளில் கிடைத்ததற்கரிய பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் நினைப்பதுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் இதயப்பூர்வமான நன்றிதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)

இந்திய திருநாட்டில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக மாற்றுவேன் என்று சூளுரைத்து அதன் வழியே தமிழகத்தில் சிறப்புற ஆட்சி செய்து, எல்லாத் துறைகளிலும் தமிழகம் ஏற்றம் பெறுவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து சீரிய பணிகள் செய்து வரும் எங்களின் அன்பு தெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என் நன்றியை பணிந்து வணங்கி தெரிவித்துக்கொண்டு, என் கன்னிப் பேச்சினைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் தறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ரூ.11 கோடி செலவில் புதியதாக 200 துணை சுகாதார நிலையங்கள் கட்டவும் ரூ.8 கோடி செலவில் 25 சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தவும் கருதியுள்ள எங்களின் அம்மா அவர்களின் கருணை உள்ளத்தை நாடே போற்றுகிறது.

ஊரகப் பகுதியிலுள்ள வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் அறுவை சிகிச்சைக் கூடங்கள், X-Ray வசதிகளுடன் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்த முடிவு செய்தும், இத்தகைய மருத்துவமனைகள் தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலைகளுக்கு அருகில் இருப்பதால் அவை விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களாக செயல்படும் என்று கருதும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் சாதனைகளை அனைத்து மக்களும் பாராட்டுகின்றார்கள்.

அதேபோன்று முதியோர்களுக்கு இலவச மருத்துவ வசதி அட்டை முறை. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஏழை எளிய மக்களின் முன்னேற்றமே தன்னுடைய உயரிய இலட்சியம் என்று கருதி செயல்படும் எங்களின் வாழ்வின் தெய்வம் அம்மா அவர்களின் புனித ஆட்சியில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் பெற்று விளங்குகிறது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பழனி நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற, மருத்துவமனையை நவீனப்படுத்தி, வசதிகளுடன்கூடிய கூடுதல் கட்டடம் கட்டித் தர பணிந்து கேட்டுக்கொள்கிறேன். மேலும், பழனி நகர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்குப் போதிய Surgeon இல்லை. எனவே, புதிய Surgeon-ஐ நியமனம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதே மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளர்கள் வேண்டிய அளவு இல்லை. சுகாதார நிலை கருதி, மேலும் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு கனிவுடன் நடவடிக்கை எடுக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பழனி தொகுதியில், ஆண்டிப்பட்டி, ஆண்டிப்பட்டி ஊராட்சி, குதிரையாறு உட்பட அம்மாகுளம், புதுக்குளம், ராயகுளம் ஆகிய மூன்று குளங்களை உள்ளடக்கிய இடது பிரதான வாய்க்கால் உள்ளது. மேற்கண்ட குளங்களில் தூர் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட குளங்களை தூர் எடுப்பதால் இடது பிரதான வாய்க்கால் வழியாக தண்ணீர் சென்று 1500 ஏக்கர் நிலங்களில் சிறந்த முறையில் பாசனம் செய்து நன்கு சாகுபடி செய்ய ஏதுவாக இருக்கும்.

அதேபோல, என் தொகுதியிலுள்ள பாப்பம்பட்டி, பஞ்சந்தாங்கி குளத்தையும் தூர் எடுக்க வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட குளத்தை தூர் எடுப்பதால் 400 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசுப் பணியில் மனித ஆற்றலை தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்த, தேவையான வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து ஆய்வு மற்றும் அரசு ஊழியர்களின் பணிப் பயன்கள் குறித்து உத்தரவாதம், மாவட்டத் தொழில் மையங்களை மாவட்ட அளவிலான ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவுகளை மாற்றும் திட்டம் - இப்படி நிதிநிலையறிக்கையில் கூறும் ஒவ்வொன்றும் மக்கள் நலனே கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டம் பெரும் வரவேற்பைப் பெறுவதுடன் உண்மையிலேயே மாணவிகளுக்கு பெரும் பயனாகவும் உள்ளது. இத்திட்டத்தினை தொடர்வது உண்மையிலேயே

பெரிய சேவையாகும். இதுபோல் ஆலயங்களில் வழங்கும் அன்னதான திட்டம், ஏழையெளிய மக்களின் பசியாற்றும் அரிய வாய்ப்பினை வழங்குவது அம்மா அவர்களின் கருணை உள்ளத்தைக் காட்டுவதாக அமைகிறது.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நலனில் சேராத திட்டம் என ஒன்று கருதினால் உடனடியாக அதை மாற்றத் தயங்காத அரசு என்பதை பெருமையுடன் கூறலாம். உதாரணமாக மலிவு விலை மது திட்டம். எனவே, இந்த நிலையில், அறிக்கையின் சிறப்புகளை மிகைப்படுத்திக் கூறத் தேவையில்லை. காரணம், இவ்வளவு நெருக்கடியான நிலை மாநிலத்தில் இருக்கும்போது இதைவிடச் சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையை எவரும் வழங்க இயலாது என்பது என் தாழ்மையான கருத்து.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திலே இன்று உங்கள் முன்னிலையில் பேச வாய்ப்பு அளிப்பதில் முக்கிய பங்காற்றிய எனது பழனி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கும், கழக பொறுப்பாளர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், பழனி நகரில் பேருந்து நிலைய பிரச்சினை பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் உள்ளது. விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றுவதுடன் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வண்ணம் ஒரு செயல் திட்டம் உருவாக்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஒட்டன்சத்திரம் முதல் பழனி நகர் வரையிலான போக்குவரத்துப் பாதையில் பழனிக்கு வரும் பக்தர்களுக்கான நடைபாதை விரிவாக்கம் செய்து தர பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

பழனி தாலுகா காவல் நிலையம் தற்போது பழனி நகரில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தை பழனியில் மேற்கு பகுதியிலுள்ள ஏதாவது ஒரு கிராமத்திற்கு மாற்றித்தர பணிந்து வேண்டுகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பழனியில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரியை நிகர்நிலை அந்தஸ்துள்ள கல்லூரியாக மாற்றவும், மேலும், திருக்கோயிலின் சார்பில் ஒரு தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரியை அமைத்துத் தரவும் அம்மா அவர்களின் மலர் பாதங்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் தாழ்த்தப்பட்ட அரசு ஊழியர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பான பதவி உயர்வில் இடஒதுக்கீடு குறித்த நமது அரசின் செயல்பாட்டை அனைத்து நிலைகளிலும் விரிவுபடுத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பழனி சின்னக் காஞ்சிபுரம் பச்சையாற்றின் குறுக்கே பாலம், பாப்பம்பட்டி கோதை ஆற்றின் குறுக்கே பாலம், பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் பழனி புறவழிச்சாலை ஆகிய மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

எனது பழனி தொகுதியில் பழங்கள் அதிகமாக உற்பத்தி ஆவதால் பழச்சாறு தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஆயக்குடி பகுதியில் அமைத்துத்தர பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பழனி திருக்கோயிலில் காலியாக உள்ள பணியாளர் இடங்களை இடயொதுக்கீட்டின்படி நிரப்பவும், பழனி திருக்கோயில் மருத்துவமனையை நவீன வசதிகள் மற்றும் அனைத்து பிரிவுகளுடன் விரிவு செய்து தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். பழனி மலைக் கோயிலுக்கான தொங்கு இரயில் திட்டத்தினை அறிவித்த அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பிலும் எண்ணற்ற பக்தர்களின் சார்பிலும் பணிவான நன்றியையும், வணக்கத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்பாதங்கள் தொட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை மீதான இந்த விவாதத்தில் கலந்துகொண்டு என் கன்னிப் பேச்சை இந்த மாமன்றத்தில் வழங்க எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிப்பதுடன், என்னை வழி நடத்தி வாழ வைக்கும் கழகக் காவல் தெய்வம், சமூக நீதிக் காத்த வீராங்கனை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையில் பேசுகின்ற ஒரு வாய்ப்பினை நல்கிய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆனால், மருத்துவத் துறையில் இந்த அளவுக்கு நாட்டம் செலுத்தி அவர், முழுமூச்சோடு இந்தத் துறையை வளப்படுத்துவதற்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்டதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில நேரங்களில் உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளுக்கு எந்தெந்த மருத்துவமனைகள், என்னென்ன வசதிகள் தேவை என்பதையெல்லாம்கூட முன்கூட்டியே கேட்டுத் தெரிந்து வந்து முழுமையான பதிலை அளிக்கக்கூடிய ஒரு திறமை படைத்தவராக அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

*பிற்பகல் 12-15*

எங்களுடைய வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டு எப்படியாவது தொடங்கி, மாணவர்களை சேர்த்து, படிக்க வைக்கக்கூடிய உத்தரவினை வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் அறிவித்து, எல்லாவற்றையும் நாங்கள் சாதித்துக்காட்டினோம் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்னாலே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 3 ஆண்டுகள் நான் தொடர்ந்து வலியுறுத்தியும், எங்களுடைய வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரியை உங்களுடைய ஆட்சியில் தொடங்காமலே விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள் என்பதை நான் உங்களுக்கு இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நான் 1991-லிருந்து வலியுறுத்தி வந்து, அதற்கான அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, இன்னும் அது செயல்படாமல் இருக்கிறது. M.C.I.-க்குச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு Query போட்டிருக்கிறார்கள். அந்தக் Query-யை நீங்கள் திருத்தம் செய்து, எப்படியாவது இந்த ஆண்டு தொடங்குவதற்கு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேலூரிலே மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதிலே எதனால் காலதாமதம் ஏற்பட்டது என்பது என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இடப் பிரச்சினை காரணமாகத்தான் அது காலம் தாழ்த்திக்கொண்டே சென்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் கழிஞ்சூர் என்ற இடத்திலே ஒரு ஏரிப் பகுதியை முதலிலே அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அந்த ஏரிப் பகுதியிலே மருத்துவமனை கட்டுவதற்காக அவர்கள் இடத்தைத் தேர்வுசெய்தபோது Medical Council of India அது மருத்துவமனையிலிருந்து, மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படுகிற அந்தக் கழிஞ்சூர் இடம் 5 கிலோமீட்டருக்கு அதிகமாக இருக்கிறது என்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

மேலும், அந்தக் கழிஞ்சூர் ஏரி கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான இடம் இல்லை என்று பொதுப் பணித் துறை மறுத்துவிட்டது. எனவே, அந்தக் காரணத்தினாலே, அந்த இடத் தேர்வினால்தான் காலதாமதம் ஆனது. இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற வாரம்தான் வேலூர் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்து உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அனுப்பப்பட்ட Proposal-கள் எல்லாம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்ல, Medical Council of India-விடமிருந்து திரும்பி வந்தன என்பது உண்மைதான். எனவே, இப்போது இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், விரைவாக Medical Council of India-விற்கு அந்த முன்மொழிவுகளை அனுப்புவதற்குத் துறை வேகமாக முயன்று கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், எங்களுக்கு விரைவிலே அதற்கான Proposal-களை அனுப்பச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக அனுப்புகிறோம். காரணம் இப்போது கல்லூரி தொடங்கப்படுகின்ற நாள் நெருங்கிவிட்டது. எனவே, இந்த ஆண்டு முடியுமா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. 31-8-2002 தான் விண்ணப்பம் அனுப்ப கடைசி நாளாக இருந்தாலும், அதுவரை நாங்கள் காத்திருக்கப்போவதில்லை. அதற்கு முன்னாலே விரைவாக—இப்போது

அந்த proposal தயார் செய்யப்பட்டுக்கொண்டு வருகிறது. விரைவிலே டெல்லிக்குக் கொண்டுபோய் மத்திய அரசிடம் சேர்க்கப்படும். மத்திய அரசு, Medical Council of India-விற்கு அனுப்ப வேண்டும். அவர்கள் வந்து, இடத்தைப் பார்க்க வேண்டும். எனவே, இந்த வழிமுறைகளை எல்லாம் பின்பற்ற வேண்டியிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு முடியவில்லை என்று சொன்னாலும், முயற்சிக்கிறோம். முடியவில்லை என்று சொன்னாலும், அடுத்த ஆண்டு நிச்சயமாக அங்கு ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே எப்படியாவது நீங்கள் முழு முயற்சி செய்து ஆணையைப் பெற்றுத் தொடங்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் நீங்கள் நிச்சயமாக கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

M.M.C.- Madras Medical College புகழ் பெற்ற ஒரு கல்லூரி. ஒரு நீண்ட வரலாறு அதற்கு உண்டு. அதை ஒரு Deemed University-யாக சென்ற ஆட்சிக்காலத்திலே கொண்டு வந்தார்கள். பிறகு, அவர்களே அதை Deemed University ஸ்தானத்திலிருந்து எடுத்துவிட்டார்கள். யார் யாரோ Private College ஆரம்பித்து Deemed University என்று வைத்துக்கொண்டு அவர்கள் பணம் சம்பாதிக்க முனைந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில் அரசு, ஒரு நெடிய வரலாற்றைப் பெற்றிருக்கிற, புகழ் பெற்ற, போற்றத்தக்க இந்த Madras Medical College-ஐ Deemed University-ஆக மீண்டும் எப்படியாவது கொண்டுவந்து நீங்கள் அதன் தரத்தை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு முயற்சி எடுத்த ஒரு Dean-னே பழிவாங்கப்பட்டு அவர் இப்போது அந்த நிலையிலிருந்து தரம் இறக்கப்பட்டுவிட்டார், ரிட்டையர் ஆகிவிட்டார். சம்பளமே கொடுக்காமல் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-20*

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Deemed University வருவது தவறு கிடையாது. நீங்கள் கேட்கலாம். ஆனால் அதிலே admission மாற்றப்பட்ட நிலையில் இருக்கிறது. இப்போது பொதுவாக நடைபெறும் கல்லூரிக்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இப்போது மத்திய அரசு U.G.C.-ன் மூலமாக அகில இந்திய அளவில் அனைத்து மாணவர்களையும் நிரப்புவதற்கு முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள்



M.M.C.-ஐ அப்படி மாற்றினீர்கள் என்றால் நம்முடைய மாணவர்களுக்குக் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தரத்தை உயர்த்தி எப்படியாவது நம்முடைய மண்ணின் மைந்தர்களுக்குக் கிடைப்பதில் நிச்சயமாக நாம் குறியாக இருக்கிறோம். அந்த வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமப்புற மாணவர்களுக்கு *25* சதவிகிதம் என்று இட ஒதுக்கீடு நாம் கொடுத்து, அதைச் சென்னை உயர்நீதிமன்றம் செல்லாது என்று சொல்லி இப்போது உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றிருக்கிறது. *69* சதவிகித இட ஒதுக்கீட்டைப் பின்பற்றிய காலத்திலேயேகூட *50* சதவிகிதத்திற்கு மேல் கொடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் சொல்லிய பிறகும்கூட நாம் அந்த Seat-ஐ அதிகரித்துக் கொடுத்து, *19* சதவிகித Seat-ஐ அதிகரித்துக் கொடுத்து மாணவர்களை நாம் அந்த இடத்தில் சேர்த்து, *69* சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு எந்தவிதப் பங்கமும் விளையாத வகையிலே இப்போது admission நடந்துகொண்டிருக்கிறது. அதேபோல நீங்கள் மேல்முறையீட்டிலேகூட ஏதாவது தடையாணை பெற்றிருக்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. தடையாணை எதுவும் உச்ச நீதிமன்றத்திலே இல்லாத ஒரு காரணத்தால் நம்முடைய அரசு எப்படியாவது மீண்டும் *25* சதவிகிதத்தை மாணவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து, கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நிறைய, C.T. Scan, M.R.I. Scan என்று பல கருவிகளைப் புதிது புதிதாக வாங்கிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கருவிகளை எல்லாம் பராமரிப்பதற்கு, repair செய்வதற்கு என்று ஒரு துறையை நீங்கள் தயவுசெய்து ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், repair ஆகிவிட்டால் திரும்பவும் அந்த Company-காரன் வந்து repair செய்வதற்கு நெடுநாட்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, இதற்கென்று ஒரு துறையை நீங்கள் உருவாக்கி அந்த உபகரணங்களை எல்லாம் repair செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

King Institute-ஐ, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் *1989* ஆம் ஆண்டிலே, Society Act-லே கொண்டு வந்தார்கள். G.O. No. 1406/

dated 31-7-1990-ல் ஒரு G.O. கொண்டுவந்தார்கள். பிறகு மீண்டும் 1996-லே 26-11-1996-ல் இன்னொரு அரசாணை 506-ஐ பிறப்பித்து வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து புகழ்பெற்ற ஒரு Institute ஆக இருந்த King Institute-ஐ Society Act-லே கொண்டுவந்தார்கள். 52 ஏக்கர் நிலம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சொன்னதுபோல நாய்க் கடிக்கு, பாம்புக் கடிக்கு எல்லாவற்றுக்கும் மருந்து தயாரித்துக்கொண்டிருந்த இடம் King Institute. அந்த King Institute-ஐ Society Act-லே கொண்டுபோன காரணத்தால் அது பாழடைந்துபோய் இருக்கிறது. மீண்டும் அந்த G.O.-க்களை எல்லாம், Society Act-ன்படி கொண்டுவந்த G.O.-க்களை எல்லாம் நீங்கள் cancel செய்து அதற்கு ஒரு புது வாழ்வைக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாய்க் கடி மருந்து, பாம்புக் கடி மருந்து, (A.R.R. A.S.Vs.) போன்றவற்றையெல்லாம் மீண்டும் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். I.V. Fluid ஒரு பெரிய காரியம் இல்லை. உப்பையும் சர்க்கரையும் கலந்து தயாரிக்கிற ஒன்று. அந்த I.V. Fluid-ஐ நாமே அரசாங்கத்தின் மூலம் அந்த King Institute-ல் தயார் செய்யலாம். அதை நீங்கள் தனியாரிடம் கொண்டுபோய் கொடுத்து, கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்து மருத்துவப் பணிக் கழகங்கள் மூலமாக வாங்குவதைவிட I.V. Fluid-ஐ King Institute-லேயே தயார் செய்யலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Life-saving vaccines அதிலே நிறைய உற்பத்தி செய்துகொண்டிருந்தார்கள். அவற்றுக்கெல்லாம் இப்போது ஒரு தடை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் அதை நீங்கள் Creation of Centre for Human Bio-Chemistry என்கிற ஒரு Genome Code என்கிற ஒரு Code-ஐ—இப்போதெல்லாம் அமெரிக்கா போன்ற நாடுகளிலே Genetic Micro Biology and Bio-Chemistry இவற்றையெல்லாம் கொண்டுவந்து மனிதனையேகூட 500 ஆண்டுக் காலம் வாழவைக்க முடியும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே மனிதன் ஒரு நீண்டகால வாழ்க்கை வாழ்வதற்கு இந்த Genome Code-ஐ—முழுமையாக ஆராய்ந்துகொள்வதற்கு ஏற்றவகையில் ஒரு Genome Code Centre-ஐ நீங்கள் அந்த இடத்திலே உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 12-25*

அதேபோல Geriatric Department, Geriatric Medicine and surgery - முதியோர்களுக்காக நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட சொல்லியிருக்கிறீர்கள். இதுவரையில் இந்தியாவில் வேறு எங்குமே இல்லை. ஆசியாவிலேயே 1984ஆம் ஆண்டு நம்முடைய தமிழக அரசால் புதுப்பிக்கப்பட்ட அந்த முதியோர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்ற முறை-இந்த முதியோர்களெல்லாம் புறக்கணிக்கப்படுகிற காரணத்தினாலே அவர்களுக்கு ஒரு நல்ல ஆதரவைக் கொடுத்து, முதியோர் அட்டையைக் கொடுத்து, நீங்கள், அவர்களுக்கு Heart Operation-ஆ Kidney Transplantation- B.P., Sugar, எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பார்ப்பதற்கு ஓர் அற்புதமான ஓர் திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, அந்த Geriatric Medicine and Surgery Department-லே டாக்டர் சிவராமன் அவர்கள் முழு முயற்சியோடு, Head of the Department-ஆக இருந்து சிறந்த முறையிலே இப்போது M.M.C.-யிலே செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் துறையை Centre of Excellence என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து 70 இலட்சம் முதியோர்கள் தமிழகத்தில் இருக்கிறவர்கள் பயனடையக்கூடிய வகையில் பல்வேறு இடங்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து Haemophilia என்ற ஒரு நோய். சில பேருக்கு, யாருக்குமே address-ஸே தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இரத்தக் கசிவு நோய். ஏதாவது அடிபட்டாலோ அல்லது operation செய்தாலோ, சில பேருக்கு blood வந்துகொண்டேயிருக்கும். அது உறையாது. அப்படி உறையாமலிருந்து கொண்டிருக்கும். அந்த மாதிரியான நோய் தமிழ்நாட்டிலே 6,000 பேருக்குத்தான் இருக்குமென்று சொல்கிறார்கள். அந்த Haemophilia நோய் வந்தவர்களுக்கு மாதத்திற்கு 25,000 ரூபாய் மருந்துச் செலவுகளுக்குச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அந்த Haemophilia நோய் வந்துவிட்டால் அது ரொம்பக் கொடுமை. பாவம், அவர்கள் எந்தவிதமான வசதியும் இல்லாதவர்கள் 25,000 ரூபாய் மாதம் ஒன்றுக்கு மருந்துக்குச் செலவழிக்க முடியாது. இதிலே இன்னொரு பிரச்சினை. எங்களுடைய C.M.C.-யிலே—40 ஆண்டுக் காலமாக அதற்கு வேலூர் கிருத்துவ மருத்துவமனையிலே சிகிச்சை அளிக்கிறார்கள். ஆனால், அதற்கு மருந்து ரொம்ப Costly-ஆக இருக்கிற காரணத்தினால், அவர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்த மருந்தை donation-ஆகப் பெறுகிறார்கள். அவர்கள் 2 வருடம் 3 வருடம் expiry

இருக்கக்கூடிய மருந்தைக் கொடுக்கமாட்டார்கள். 3 மாதமோ அல்லது 4 மாதமோ expiry இருக்கக்கூடிய மருந்துகளை donation-ஆகக் கொடுக்கிறபோது நம்முடைய customs-லே clear பண்ணப் போனால், நம்முடைய Drug Controller என்ன சொல்கிறார்கள். என்றால் 6 மாதம் expiry-க்கு முன்னாடி இருக்கிற மருந்தாக இருந்தால்தான் நாங்கள் clearance கொடுப்போம் இல்லாவிட்டால் கொடுக்கமாட்டோம் என்று சொல்லி மறுத்துவிடுகிற காரணத்தினாலே, பிச்சை எடுக்கக்கூடிய அந்த மருந்துகளைக்கூட customs-லேயிருந்து clear செய்ய முடியாமல், ஏழைகளுக்கு உதவி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, இந்த Haemophilia-வுக்கு ரொம்ப costly மருந்து அது. அந்த மருந்து இப்போது, பிரேசில், தென்னாப்பிரிக்கா, ஈஜிப்ட் போன்ற நாடுகளிலே அரசே அதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அவர்களே செலவுகளை மேற்கொள்கிறார்கள். நம்முடைய இந்தியாவிலேகூட மஹாராஷ்டிராவிலும், டில்லியிலேயும் அதற்காக ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து Haemophilia நோய்க்கு முழுச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள், நம்முடைய அரசு ஏற்றுக்கொள்வதற்கும், முதலமைச்சர் நிவாரண நிதி கிடைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, pacemaker வைப்பதற்கு Government servant-க்கு reimbursement பண்ணுவது எல்லாம் இல்லாமலிருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தாருக்கு யாருக்காவது இந்த pacemaker வைக்க வேண்டுமென்று சொன்னால் வெளிநாட்டிலேயிருந்து இந்த pacemaker-ஐ 45,000 ரூபாய் கொடுத்து வாங்கி, operation எல்லாம் முடிய 80, 85,000 ரூபாய்க்கும் மேலே செலவாகிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்த pacemaker-க்கான செலவுகளை முழுவதுமாக அரசே ஏற்றுக்கொள்வதற்கு, reimburse செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Kidney Transplantation செய்கிறவர்கள் இன்று ஏழை எளியவர்களெல்லாம் தனியார் Hospital-லில் சரியாகப் பண்ணுவார்கள் என்கிற காரணத்தினாலே, சாய் பாபா போன்ற மருத்துவமனைகளிலே எல்லாம் போய் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் ஆண்டு முழுவதும் மருந்து சாப்பிட வேண்டும். சைக்ளோஸ்போரின் என்ற அந்த மருந்து (குறுக்கீடு) ரொம்ப costly-யான மருந்தாக இருக்கிற காரணத்தினாலே அரசே முழுவதுமாக நம்முடைய மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலமாக அந்த மருந்தையெல்லாம் வாங்கிக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். Haemophilia நோய்க்கான A.H.F. என்கிற அந்த



மருந்தும் வெளிநாடுகளிலேதான் கிடைக்கிறது. அந்த மருந்தைக்கூட நீங்களே வாங்கி இலவசமாக Haemophilia நோயாளிகளுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Medical Fitness Certificate கொடுக்கிறபோது Government servants-க்கு இப்போது ஹரியானாவிலே எல்லாம் தொப்பை விழுந்த போலீஸ்காரர்களுக்குகெல்லாம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஒவ்வொரு வருடமும், 'நீ ஓடு, ஓடு, வயிற்றைக் குறைத்தாய் என்றால் தான் மீண்டும் நீ service-லே இருப்பாய்' என்று சொல்கிறார்கள் ஹரியானாவிலே. அதே மாதிரி நம்முடைய அரசு ஊழியர்களுக்கு, அதுவும் குறிப்பாக இந்த Police department-லே இருக்கிறவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் Medical Fitness வேண்டும்; தொப்பை இருந்தால் நீ out என்று நீங்கள் அவரை dismiss செய்வதற்கு அல்லது தொப்பையைக் குறைத்துக்கொண்டு வந்தால்தான் மீண்டும் பணியிலே சேர்க்க வேண்டுமென்று அந்த ஒரு நியதியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு குழந்தைக்கு மேலே யாரும் பெற்றுக்கொள்ளக்கூடாது. அரசாங்கம் சொல்கிறது--ஒன்றுக்கு மேலே வேண்டாம் என்றுதான் தாரகமந்திரத்தைச் சொல்கிறார்கள். ஆனால், நிறையபேர் நிறைய பெற்றுக்கொள்கிறார்கள். நான் ஒன்றே பெற்று ஒளிமயமாகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். அந்தப் Policy-ஐக் கொஞ்சம் M.L.A.-க்கள், மற்ற மந்திரிகள் மற்றும் இருக்கக்கூடிய சகோதரர்கள் எல்லோருமே Follow பண்ணுகிற வகையிலே அதை வேண்டுமானால் ஒரு சட்டமாகவே ஆக்கிவிடலாம். இல்லாவிட்டால் 2 வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். இரண்டுக்கு மேலே இருக்கிறவர்களுக்குச் சட்டமன்றத்திலே இடமும் கிடையாது; M.P.-க்களுக்கு சீட்டுகள் கிடையாது, அரசு ஊழியர்களுக்கு வேலை கிடையாது என்கிற ஒரு நியதியை உருவாக்குவதற்கு ஒரு சட்டத்தை நாமே இயற்றலாம்; அல்லது மத்திய அரசையும் வலியுறுத்தலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Dean Appointments-லே எல்லாம், ஏற்கெனவே 5 ஆண்டுகளுக்கு மேலே—Professor-ஆக வேலை செய்திருந்தால் அவர்கள் D.M.E. ஆக-Director of Medical Education ஆக வரலாம் என்று இருக்கிறது. ஆனால், கோவிந்தன் என்ற ஒரு சிறந்த நிபுணர், அவருக்கு--அந்த Rules-லே--5 வருடம், 8 வருடம் service இருந்தாலுங்கூட Dean ஆக வர முடியாத அளவில் இருக்கிறது. அந்த Rules-ஐ கொஞ்சம் தயவுசெய்து

யாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் amend செய்து நல்லவர்களுக்கு, திறமையானவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, M.B.B.S. Seat. இப்போது 1055 சீட்டுகள்தான் கொடுக்கிறோம். அதை நீங்கள் அதிகரித்து ஒவ்வொரு கல்லூரியிலேயும் double-ஆக சேர்க்கலாம். ஏனென்றால் தனியார் கல்லூரியிலே நிறையப் பேரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பணத்தை எல்லாம் தமிழ்நாட்டு ஆட்கள் கொண்டுபோய், கர்நாடகாவிலேயும், ஆந்திராவிலேயும், மணிப்பால் போன்ற இடங்களிலேயும் கொட்டிக் கொடுத்து M.B.B.S. Seat-ஐ வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய கல்லூரிகளிலேயே இருக்கக்கூடிய M.B.B.S. Seat-ஐ 2,000 seat-ஐயாவது கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோல, M.Sc., M.D., போன்ற படிப்புகளுக்கு ஒரு கல்லூரிக்கு 2, 3 சீட்டுகள் என்று அவ்வளவு கம்மியாக வைத்திருக்கிறீர்கள். அதை தயவுசெய்து நீங்கள் உயர்த்த வேண்டும். ஏன் என்றால், எல்லோருமே அமெரிக்கா போக முடியாது. ஆஸ்திரேலியா போக முடியாது. வெளிநாட்டில், லண்டனிலே போய் படிக்க முடியாது ஏழை மாணவர்கள். ஏன் என்றால் இப்போது M.B.B.S. என்பது S.S.L.C. மாதிரி ஆகிவிட்டது. அதற்கு யாரும் மதிப்பு கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஏதாவது 'Speciality' படித்திருக்கிறாயா, அப்பொழுதான் நான் வருவேன் என்று நோயாளிகளே சொல்லக்கூடிய அளவிற்கு, M.S., M.D., இருந்தால்தான் உள்ளே வருவேன் என்று strike பண்ணக்கூடிய காலமாக மாறிவிட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வரோடு கலந்து ஆலோசித்து M.S., அதேபோல, M.D., போன்ற படிப்புகளை குறைந்தபட்சம் ஒரு கல்லூரிக்கு 50 சீட்டுகள் என்று உருவாக்கி நிறைய 'Post Graduate Doctor'-களை தயவுசெய்து உருவாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய ஊரிலே மீனாட்சி என்ற ஒரு பெண். அவள் S.C. அவளுடைய அப்பா S.C., அம்மா ஒரு கருணீகர் கம்யூனிட்டி. அந்தப் பெண்ணுக்கு திருச்சி கல்லூரியிலே இடம் கொடுத்து, ஓராண்டு முடித்துவிட்ட பிறகு, சில பேர் அந்தப் பெண் S.C. இல்லை என்று Petition போட்டதினால், பாவம் அந்தப் பெண்ணை வீட்டிற்கு அனுப்பி



விட்டார்கள். அந்தப் பெண் Municipality-யிலே யாராவது மனு கொடுத்தால், எழுதிக் கொடுத்து தினமும் 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருக்கிறாள். மாண்புமிகு முதல்வர் அவர்களே, முதல்வராவதற்கு முன்னால், சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு என்று கருதுகிறேன், 1 இலட்சம் ரூபாய் நிதியை அந்தப் பெண்ணை அழைத்து, அவளுடைய பரிதாபத்தைப் பார்த்து, முதல்வராக இல்லாத அந்தக் காலக்கட்டத்திலேயே கொடுத்து ஆதரவு தெரிவித்தார்கள். அவளுடைய அப்பா S.C. என்பதற்கு Certificate வைத்திருக்கிறாள். அவளுடைய அப்பா சக்திவேல், S.C. எங்களுடைய காகிதப் பட்டறை, வேலூர் டவுனைச் சேர்ந்தவர். அந்தப் பெண் இன்று நடு ரோட்டிலே அழுது கொண்டிருக்கிறாள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களோ, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோ அந்தப் பெண்ணுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அக்பர் கௌசர் அவர்கள் காசினிக் கீரையில் ஒரு பெரிய மகத்துவத்தில் இன்று சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். காசினிக் கீரை என்ற அந்த கீரையை எங்களுடைய ஊரிலே எல்லாம் 'போண்டா கீரை' என்று சொல்லுவோம். அந்தக் கீரையைச் சாப்பிட்டால் கிட்னி நோய் வரக்கூடியவர்களை, அதாவது ஓரளவு kidney transplantation-ஐ தவிர்த்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. 'பிளாக்' ஏற்பட்டு heart attack வருவதைத் தடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. புற்றுநோய் வராமல் தடுப்பதற்குரிய குணமும் இருக்கிறது. சாதாரண அந்த போண்டா கீரை என்று எங்கள் வாணியம்பாடி பகுதியிலே சொல்லப்படுகிற அந்தக் கீரைக்கு அவ்வளவு மகத்துவம் இருக்கிறது என்பதை நம்முடைய டாக்டர் அக்பர் கௌசர், வாணியம்பாடியைச் சார்ந்தவர், கண்டுபிடித்து அதை Avinasilingam Deemed University-யினுடைய Chancellor, இப்பொழுது மறைந்துவிட்ட அமரர் ராஜம்மாள் பி. தேவதாஸ் அவர்கள் ஒரு பெரிய ஆராய்ச்சி செய்து அதிலே இந்த சிறுநிரகத்தில் ஏதாவது கல் இருந்தால் போக்குகிற, அல்லது சிறுநீரகத்தில் அடைப்பு ஏற்படக்கூடிய நோய்யைக் குணப்படுத்துகிற, அல்லது heart attack வராமல் காப்பாற்றுகிற, புற்று நோயைத் தடுக்கிற அத்தனை குணாதிசயங்களும் இருக்கின்றன என்று ஆராய்ச்சியிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தச் காசினிக் கீரையை சத்துணவுக் கூடங்களிலேகூட நீங்கள் கொடுக்கலாம். ஏன் என்றால். ரொம்ப cheap அது. ஒவ்வொரு குழந்தைக்கும் கீரையை வாங்கிக்

கொடுத்தீர்கள் என்றால் ரொம்ப தாராளமாக சத்து வரும். அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். இதுபோன்ற டாக்டர்களை நீங்கள் ஊக்குவித்து ஓர் அங்கீகாரத்தை கொடுத்து, அவர்களுக்கு ஏதாவது விருதை கொடுக்கலாம். அவர் 'யுனானி' புத்தகங்களைக்கூட எழுதியிருக்கிறார். அவை இன்னும் வெளியிடப்படாமல் இருக்கின்றன. அந்தப் புத்தகங்கள் போன்றவற்றை எல்லாம் நீங்கள் கல்லூரியிலே பாடமாக வைக்கலாம் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

ஆஸ்பத்திரிகள் எல்லாம் இப்பொழுது நன்றாக நடந்து கொண்டிருக்கின்றன. நான் இல்லை என்று சொல்ல வரவில்லை. இருந்தாலும்கூட Government Hospital என்றால் சில பேருக்கு அதற்குள்ளே போகலாமா, வேண்டாமா என்கிற ஒரு தயக்கம் இருக்கக்கூடிய அளவில்தான் நாம் நம்முடைய நிலையை வைத்துக் கொண்டிருக்கிறோம். நாம்--ஒரு M.L.A. அடிபட்டோம் அல்லது ஒரு பெரிய V.I.P. அடிபட்டார் என்றால் நாங்கள் அப்போலோவிற்குப் போக மாட்டோம், மலருக்குப் போகமாட்டோம். விஜயா ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டோம், நாங்கள் G.H.-க்குத்தான் போவோம் என்கிற அளவிற்கு தரத்தை உயர்த்திக்காட்ட வேண்டும். நீங்கள் எப்படியாவது அந்த நம்பிக்கையை you must inspire the confidence of the people— ஏற்படுத்துகின்ற அளவிற்கு தரத்தை உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு, அந்த M.M.C., ஸ்டேன்லி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளினுடைய Hostels எல்லாம் மிக மோசமாக இருக்கின்றன. அந்தக் காலத்திலே கட்டியவை. அதற்கு அப்புறம் அரசு ஏனோ அதில் நாட்டம் செலுத்தாமல் இருக்கிறது. நீங்கள் அந்த Hostel facilities-ஐக் கூட்ட வேண்டும். அந்த latrine போன்றவை எல்லாம் மோசமாக இருக்கின்றன. ஆஸ்பத்திரியிலே--Labour Ward--லே latrines எல்லாம் மோசமாக இருக்கின்றன. அவற்றை மட்டும் புதுப்பிப்பதற்குத் தனியாக ஒரு திட்டத்தைத் தீட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பி.ஆர். சுந்தரம்):** *20 நிமிடங்கள் ஆகிவிட்டது.*



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல் மருத்துவக் கல்லூரியினுடைய விடுதிகள் நல்ல முறையிலே பராமரிக்கப்படாத நிலைமை இருந்தது என்பதை அறிந்து, அது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குச் சென்று, இந்த ஆண்டு அந்த மருத்துவக் கல்லூரி விடுதிகளை எல்லாம் சீரமைக்க, பராமரிக்க, பழுதுபார்க்க நிதியை வழங்கி, அவையெல்லாம் இப்பொழுது பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** *21 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரேயொரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த நகராட்சி, மாநகராட்சி, இவற்றினுடைய நிர்வாகக்குறைவுதான் இந்த நோய்கள் வருவதற்கான பாதி காரணம். குப்பைகளை சரியாக அள்ளுவதே இல்லை. சில பேர் union strike பண்ணிக்கொண்டு, அல்லது நிர்வாகம் சரியாக இல்லாத காரணத்தினால் எங்கு பார்த்தாலும் குப்பை; நம்முடைய வேலூரிலே பார்த்தீர்கள் என்றால், அது வேலூரா அல்லது ஒரு பன்றிப் பண்ணையா என்று சொல்லக்கூடிய அளவிற்கு பன்றிகள்; இப்படியெல்லாம் இருக்கக்கூடிய நிலையை மாற்றியமைக்கவேண்டும். ஏனென்றால் இப்பொழுது மலேரியா--எங்கு பார்த்தாலும் கொசு, அதனால்தான் மலேரியா--பைலேரியா போன்ற நோய்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. நகராட்சியும், மாநகராட்சியும் இவற்றிற்கு பொறுப்பேற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதைப்போல, பெருந்துறையில் இருக்கக்கூடிய ஐ.ஆர்.டி.-யினுடைய மருத்துவக் கல்லூரி அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்து--கொண்டிருக்கிறது. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்றால், அங்கேயிருக்கிற ஆஸ்பத்திரி, ஈரோடு போன்ற ஆஸ்பத்திரி, தலைமை ஆஸ்பத்திரிகளைக் கொடுத்தீர்கள் என்றால், மாணவர்கள் அங்கே போய் experience gain பண்ணுவார்கள். ஐ.ஆர்.டி.-யினுடைய தரத்தை அரசு வளப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல முனிசிபாலிட்டி டாக்டர்கள். அதைப்போல, பள்ளியிலே 2,000 ரூபாய்க்கு

Consolidated Pay-ல் இப்போது டாக்டர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு C.E.O. control-லிலும் 4 டாக்டர்கள், 5 டாக்டர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறார்கள். பாவம் 15 வருடங்களாக, 10 வருடங்களாக ரூ.2,000 சம்பளத்திற்கு M.B.B.S. டாக்டர்கள் பணியாற்றிக் கொண்டிருப்பதை நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன்.

அதைப்போல நகராட்சியிலே ரொம்ப டாக்டர்கள் மருந்தே இல்லாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. ஆர். சுந்தரம்):** திரு. ஞானசேகரன், பேச்சை முடியுங்கள் (குறுக்கீடு) இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Point of Order. மூத்த உறுப்பினர்கள், அனுபவமிக்க உறுப்பினர்கள் சுருங்கச்சொல்லி, விளங்க வைக்கலாம். ஆளுங்கட்சித் தரப்பிலே இன்னும் 10, 15 சட்டமன்ற உறுப்பினர்கள் கன்னிப்பேச்சையே தொடங்க முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மூத்த உறுப்பினர்கள் வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும். வாய்ப்பினைத் தருவார்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ஏற்கெனவே 22 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். பேசி முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** இது மாதிரி பேசச் சொல்லாதீர்கள். கொறடாவிற்கு என்ன வேலை இருக்கிறது இதிலே? It is my time. (Interruption) It is my time. How can he say?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** அவர் request-ஆகச் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் request-ஆகச் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரைக்கு வாருங்கள். (குறுக்கீடு) நீங்கள், ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்திற்குள் பேசி முடிக்கிறீர்கள் நீங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்திற்குள் பேசி முடிக்கிறீர்கள் நீங்கள்.



**திரு. பி.எம். நரசிம்மன்:** I am on a Point of Order.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே இரண்டு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது. தற்போது அதை ஒரு நாளாகக் குறைத்துவிட்டீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** 22 நிமிடங்கள் பேசி இருக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதில் எப்படி Point of Order வரும்?

**திரு. பி.எம். நரசிம்மன்:** அவர் சொல்கிறபோதே 10 நிமிடங்கள் என்று சொன்னார்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கொறடா எப்படிக் கேட்கலாம்? அவர் --Point of Order raise--பண்ண முடியாது. (Interruption) It is not a Point of Order. It is for the Chair to decide.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** உறுப்பினர்கள் உட்காருங்கள். திரு. ஞானசேகரன், ஒரு நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உரையை 12.14-க்கு ஆரம்பத்தீர்கள். தற்போது பேச ஆரம்பித்து 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடத்திற்குள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தக் கொறடாவும், இன்னொரு கட்சி உறுப்பினருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்று....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இல்லை, இல்லை. அவர் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. பி.எம். நரசிம்மன்:** வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** திரு. ஞானசேகரன், ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** திரு. ஞானசேகரன், தயவுசெய்து ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு..

**திரு. சி. ஞானசேகரன்:** I am not yielding. (குறுக்கீடு) It is not a Point of Order. (Interruption) It is not a Point of Order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** சரி, சரி. ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தலைவரிடம் கேட்டுவிட்டுத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் இன்னும்—C.A.G. report— கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்தத் துறையிலே எவ்வளவு காரியங்கள் நடக்காமல் இருக்கின்றன. எவ்வளவு முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பனவற்றை நான் வைத்திருக்கிறேன். நான் கேட்டுவிட்டு வந்திருக்கிறேன். இவ்வளவு விஷயங்களையும் நாங்கள் சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறோம், உங்களுக்கு வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறோம். I will close the speech.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** நீங்கள் சொல்லுங்கள். ஆனால் அதற்காக எல்லாவற்றையும் பேச வேண்டுமென்பதற்காக 25 நிமிடங்கள், 30 நிமிடங்கள் என்று கொடுக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எல்லாவற்றையும் பேச வேண்டுமென்றபதற்காக 25 நிமிடங்கள் கொடுக்க முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்த டாக்டர்கள், அதேபோல நகராட்சியிலே மருந்தே இல்லாமல் நிறைய டாக்டர்கள் இன்றைக்கு waste-ஆக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கொண்டுபோய், நீங்கள் அரசு மருத்துவமனையிலே Government Doctors -ஆக மாற்றி amalgamate செய்யவேண்டும். தற்போது அந்த முனிசிபாலிட்டி வருமானம் இல்லாமல் இருப்பதால் சம்பளம் கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அரசு டாக்டர்களாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பான் மசாலா, பான் பராக், குட்கா போன்றவற்றை எல்லாம் தடை செய்வதற்கான முயற்சியை எடுத்திருக்கிறீர்கள். இதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். ஏற்கெனவே Food Adulteration Act -இலே 1954 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்திலேயே இதற்கு வழிவகை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்கிறபோது, 2690 கிலோ மட்டுந்தான் கைப்பற்றப்பட்டதாகவும், 16 வகையான பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும், 20 கேஸ்கள் மட்டுமே இதிலே தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே 1134 உள்ளாட்சி அமைப்புகள் இருக்கின்றன. இதிலே 139 Food Inspectors-கள் மட்டும்தான் இருக்கிறார்கள். C.A.G. Report-இல் சொல்கிறபோதே 1200 Food Inspectors தமிழ்நாட்டில் இருந்தால்தான் ஓரளவிற்கு இதுபோன்ற உணவு கலப்படச் சட்டங்களை...



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** பேசி முடியுங்கள். பேசி முடியுங்கள். கடைசியாகச் சொல்லி முடியுங்கள். முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கொடுக்க முடியும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த mineral water-ல் இருக்கக்கூடிய கலப்படம், பாலில் இருக்கிற கலப்படம், அதேபோல இந்தப் பான் மசாலா போன்றவற்றை எல்லாம் தடுப்பதற்கு நீங்கள் Food Inspector-களை வைத்து இப்போது செய்ய முடியாத நிலை இருக்கிற காரணத்தினாலே, காவல் துறைக்கும் இதற்கு அதிகாரத்தைக் கொடுத்து, அவர்களே வந்து இவற்றைக் கைப்பற்றி, வழக்குத் தொடுப்பதற்கான ஒரு திருத்த சட்ட முன்வடிவை இந்த அவையிலே கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Additional P.H.C.--இலே இப்போது எல்லாம் சம்பளம் கொடுப்பதில்லை. Main P.H.C.-க்குப் போய்த்தான் சம்பளம் வாங்க வேண்டுமென்று V.H.N. போன்றவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தால், பல இடர்பாடுகள். ஏற்கெனவே கடந்த 10 ஆண்டு காலமாக ஒரு Junior Assistant-ஐ வைத்து Additional P.H.C.-இலே சம்பளம் கொடுத்ததைப் போலவே நீங்கள் அவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ராகிங் இப்போது பல மெடிக்கல்..

பிற்பகல் 12-40

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ஞானசேகரன், நீங்கள் சொன்ன நேரத்திற்குமேல் 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்துவிட்டேன். ராகிங் என்பது எல்லா மெடிக்கல் காலேஜ்லேயும் இருந்து கொண்டிருக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ பல மாணவர்கள் அதனால் பாதிப்புக்குள்ளாகி, இன்றைக்கு அவர்கள் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைக்குப் போகிறார்கள். சில நேரங்களிலே அவர்களுக்குள் சண்டையே வந்து, சில கல்லூரிகளிலே கொலையே நடந்திருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் தடுக்கவேண்டும் என்று சொன்னால், ராகிங்-ஐ நீங்கள் தடுப்பதற்கு முழு முயற்சி எடுக்கவேண்டும்.

இந்த Waste Land Project-ஐ நீங்கள் கொண்டு வந்திருப்பதால் அவற்றில் மூலிகைகளை வளர்க்க வேண்டும். நம்முடைய தமிழகத்திலே மூலிகைகளுக்குப் பஞ்சமே இல்லை. சென்ற முறை நான் இந்த இடத்திலே, இதே துறையிலே பேசுகின்றபோது, எந்தெந்த மூலிகைகள் எப்படியெல்லாம், உதவுகின்றன என்று சொல்லியிருக்கிறேன். இந்த மூலிகைத் தாவரத்தை நீங்கள் தமிழகத்திலே அதிகமாக உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற 5 ஆண்டு காலத்தில் C.A.G. Report-ல் நிறைய கொடுக்கப்பட்டிருக்கிற பணம், கார்ப்பரேஷனிலே மருந்து வாங்குவதற்கு பணம் கொடுக்கப்பட்டதிலே பல கோடி ரூபாய்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆ கோவிந்தசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இல்லை. நீங்கள் சொன்னதற்குமேல், 27 நிமிடங்களாகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, C.A.G. Report-லே கொடுக்கப்பட்டிருக்கிற பணம் எல்லாம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது என்பது பற்றி நிறைய விளக்கமாக சென்ற ஆண்டு கொடுத்த C.A.G. Report-லே, 52-வது பக்கத்திலேயிருந்து தொடர்ந்து 10 பக்கங்களில் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, கடந்த 1994-லேயிருந்து, 2000 ஆம் ஆண்டு வரை, இருக்கக்கூடிய ஆண்டுகளிலே, கொடுக்கப்பட்டிருக்கிற பணம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைப் பற்றியும், Food Inspectors-சரியாகப் பணியாற்றவில்லை



என்பதைப் பற்றியும், அதேபோல, இந்த V.H.N. போன்றவர்கள் எல்லாம் சரியாக ரெக்கார்டையெல்லாம் maintain செய்யவில்லை என்பது குறித்தும் சில முறைகேடுகள் இங்கே நிறைய சொல்லப்பட்டிருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தினாலே, C.A.G. Report-லே சொல்லியிருக்கிற விஷயங்களை நான் தனியாக அமைச்சர் அவர்களிடம் விவாதிக்கிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, "நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழிக்கிணங்க மக்களின் நல்வாழ்வானது தனி மனிதனுடைய செழிப்பைப் பெருக்குவதோடு தேசிய வளத்தையும் பெருக்குகிறது. மக்கள் நல்வாழ்விற்கும், பொருளாதார நிலைக்கும் ஒரு நெருங்கிய நேரடித் தொடர்புள்ளது. இதனை உணர்ந்த தமிழக அரசு மக்கள் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது.

தற்போதைய அரசு, மக்கள் நல்வாழ்விற்கும், குடும்ப நலத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது பாராட்டத்தக்கது. மேதகு ஆளுநர் உரையில் அறிவித்துள்ள 15 அம்சத் திட்டத்தில் ஐந்தாவது அம்சமாக "சுகாதாரப் பாதுகாப்பு" -Health Security-சேர்க்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையில் மக்கள் நலத் துறையில் அடையவேண்டிய இலக்குகளை நிர்ணயித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். 11.00 கோடி ரூபாய் செலவில் புதியதாக 200 துணை சுகாதார நிலையங்களைக் கட்டவும், ரூ.8.00 கோடி செலவில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக மாற்றவும், தாம்பரத்திலுள்ள அரசு மருத்துவமனையை மேம்படுத்தவும், சித்தா, யுனானி, ஆயுர்வேதா, போன்ற இந்திய மருத்துவ முறைகளை வலுப்படுத்தவும், மருத்துவ வசதி அட்டை முறையை அறிமுகப்படுத்தவும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தேனி, இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏலாமையுற்றவர்களுக்கு -disabled- மறுவாழ்வு அளிக்கும் தேசிய திட்டத்தைச் செயல்படுத்தவும், நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள அறிவிப்புகள் வரவேற்கத்தக்கவை. மேலும், இத்துறைக்கான மொத்தச் செலவை சென்ற ஆண்டிலிருந்த ரூ.1232 கோடியிலிருந்து, ரூ.1264 கோடியாக உயர்த்தியதும் வரவேற்கத்தக்கது.

சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் பக்கம் 29-ல், "ஆரம்ப சுகாதார மையங்கள், படிப்படியாக 30 படுக்கைகளுடன் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட சிறிய மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படும்" என்று கூறப்பட்டுள்ளது. அதே திட்டத்தை இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையும் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டு எத்தனை மருத்துவமனைகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன? சென்ற நிதியாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவ ஊர்தி பிரிவுகள் எத்தனை தொடங்கப்பட்டன? எத்தனை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன? எத்தனை செவிலியர் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? எத்தனை விபத்துக் காய மையங்கள்—Accident Trauma Centres ஏற்படுத்தப்பட்டுள்ளன? இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை. வெறும் அறிவிப்புகளாகவே இருந்தால், அதனால் மக்களுக்கு என்ன பயனாகப் போகிறது?

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான மொத்தச் செலவு, சென்ற ஆண்டில் ரூ.1,356 கோடியாக இருந்தது. அது இந்த ஆண்டு ரூ.1382 கோடியாக உயர்ந்துள்ளது. வளர்ச்சி விகிதம் 1.9 சதவிகிதம். இது மக்கள் தொகை வளர்ச்சியின் (Growth Rate of Population) விகிதமான 1.95-ஐ விடவும் விலைவாசி உயர்வு (Inflation rate) சதவிகிதத்தை விடவும் குறைவாக உள்ளதால், இந்த ஆண்டின் நிதி ஒதுக்கீடு உண்மை நிலையிலும், உண்மை விலையிலும் கண்டிப்பாகக் குறைவாகவே இருக்கிறது. இதனால் தனிநபர் நலத் துறைச் செலவு -per capita expenditure on health- உயர்வதற்கான வாய்ப்பில்லை. இந்த ஆண்டின் தனிநபர் மக்கள் நலச் செலவு ரூ.230 ஆக தமிழ்நாட்டில் இருந்தாலும், அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது, இது அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது இது குறைவாக இருக்கிறது. இந்த ஆண்டின் செலவாகிய ரூ.1382 கோடி அரசின் மொத்தம் செலவில், 5.5 சதவிகிதமாக இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதை கவனிக்கவும்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** ஆனால், 2001-ல் வகுக்கப்பட்ட தேசிய மக்கள் நலக் கொள்கையின் (National Health Policy, 2001) அடிப்படையில் 7 சதவிகிதமாகவாவது கண்டிப்பாக உயர்த்தியிருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, இந்த அரசு செலவின் தொகையை ரூ.1,755 கோடியாக உயர்த்தி இருக்கவேண்டும்.



இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தச் செலவான ரூ.1,382 கோடியில், ரூ.1,323 கோடி, அதாவது 96 சதவிகிதம் வருவாய்ச் செலவிற்கும். 4 சதவிகிதம் மட்டும், அதாவது ரூ.59 கோடி மட்டும்தான் மூலதனச் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (ஆதாரம்: வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்பு பக்கங்கள் 56, 58, 59, 61) வருவாய்ச் செலவு அதிகமாக இருக்கும்போது, மருத்துவ நிலையங்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்குப் போதுமான நிதி இல்லாமல், அவை சம்பளங்கள், ஓய்வூதியங்கள் போன்ற நடைமுறைச் செலவிற்குத்தான் செலவு செய்யப்படும். மருந்துகள் வாங்குவதற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் கண்டிப்பாக அது காணாது. மொத்த வருவாயில் ரூ.207 கோடி மட்டும்தான் மருத்துவமனைகள் மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது 0.77 சதவிகிதம்தான். (ஆதாரம்: நிதிநிலைக் குறிப்பு பகுதி-1-ல் 2002-2003, பக்கங்கள் 48,51) மேற்கூறிய ரூ.207 கோடியில் மருந்துகளுக்கு ரூ.160 கோடியும், நோயாளிகளின் உணவிற்கு 14 கோடி ரூபாயும், உடைகளுக்கு 3 கோடி ரூபாயும், மருத்துவச் சாதனங்களுக்கு 19 கோடி ரூபாயும், கருத்தடை மானியங்களுக்கு 11 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைந்த அளவிலான செலவுத் தொகையை உயர்த்துமாறு அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 23-ல் இந்தத் துறையின் இலக்கு, பத்தாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதிக்குள் 1000-க்கு 19.3 என்ற அளவிலுள்ள பிறப்பு விகிதத்தை (Birth Rate) 1000-க்கு 15 என்றும், 1000-க்கு 52 என்ற அளவிலுள்ள சிசு இறப்பு விகிதத்தை (Infant Mortality Rate) 1000-க்கு 28 என்றும், ஒரு இலட்சம் பிறப்பிற்கு 140 இறப்பு என்ற அளவிலுள்ள பேறுகால இறப்பு விகிதத்தை (Maternal Mortality Rate) ஒரு இலட்சத்திற்கு 100-க்குக் குறைவாகவும், 1000-க்கு 8 என்ற அளவிலுள்ள இறப்பு விகிதத்தை (Death Rate) 1000-க்கு 6 என்றும் குறைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய இலக்குகளை இன்னும் ஐந்தாண்டிற்குள் அதாவது 2007-க்குள் அடைய வேண்டுமென்று நிதிநிலை அறிக்கை இயம்புகிறது. ஆனால், பெரும்பாலான இந்த இலக்குகளை 2002, அதாவது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள் அடைய வேண்டுமென்று அந்த நகல் கூறுகிறது. (ஆதாரம்: தமிழக அரசின் திட்டத் துறை அளித்துள்ள ஒன்பதாவது ஐந்தாண்டு கால திட்ட அறிக்கை, பக்கம் 365 (Ninth Five Year Plan, Tamil Nadu 1997—2002, State Planning Commission July 1998). இது உண்மையெனில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கப்பட்ட

இலக்குகளை நாம் அடையவில்லையா? அல்லது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சரியானவை இல்லையா? இதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பிறகு, (குறுக்கீடு) இப்போது வேண்டாம்.

தற்போது, தமிழக நல அந்தஸ்தை உயர்த்துவதில் பல பிரச்சினைகளும், சிரமங்களும் இருப்பதை உணர்ந்து அவற்றைப் போக்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

Health Status Indicators குழந்தை இறப்பு விகிதம், வாழும் வயது, இறப்பு விகிதம், தாய் இறப்பு விகிதம், பிறப்பு விகிதம் ஆகியவை. தாய் இறப்பு விகிதம் குஜராத்தில் 28 ஆக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 79 ஆக இருக்கிறது. இறப்பு விகிதம் கேரளாவில் 6.4 ஆகவும், பஞ்சாபில் 7.4 ஆகவும், மகாராஷ்டிராவில் 7.5 ஆகவும் இருக்கும்போது, தமிழகத்தில் அது 8 ஆக இருக்கிறது. பிறப்பு விகிதம் கேரளாவில் 18 ஆக இருக்கும்போது தமிழகத்தில் அது 19.3 ஆக இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இந்த காரணிகளின் போக்கை மாற்றி, நல அந்தஸ்தில் தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு கோடி மக்கள் தொகையும், 1,30,058 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் உள்ள தமிழகத்தில் 10,616 மருத்துவ நிலையங்கள் தான் இருக்கின்றன. இது 12.2 சதுர கிலோமீட்டருக்கு ஒரு மருத்துவ நிலையமும், 5,652 மக்களுக்கு ஒரு மருத்துவமனையும் என்ற கணக்கில் இருக்கின்றது. அதுபோல், 1,155 மக்களுக்கு ஒரு படுக்கையும், 6,300 மக்களுக்கு ஒரு மருத்துவரும், 3,436 மக்களுக்கு ஒரு செவிலியரும் இருக்கின்றனர். இந்த புள்ளிவிவரங்கள் தமிழகத்தின் மருத்துவமனைகளிலுள்ள அகக் கூட்டுமானம் குறைவாக இருப்பதையே காட்டுகின்றன. (Infrastructure facilities) அதுபோல, தமிழகத்தின் மக்கள் பெருக்கத்திற்குத் தகுந்தாற்போல மருத்துவ வசதிகள் பெருகவில்லை. தமிழகத்தில் நோயின் அளவும், இறப்பு விகிதமும் அதிகமான அளவிலே இருக்கின்றன. சமீப காலத்தில் மலேரியா நோய் தமிழகத்தில் காணப்படவில்லையென்றாலும்கூட Filaria Disease-க்காக Heterazan மாத்திரைகள் தமிழகம் முழுவதும் கொடுக்கப்பட்டன. அந்த மாத்திரைகள் கொடுப்பதிலே சில சிக்கல்கள் இருந்தாலும், சில மருத்துவப் பிரச்சினைகள் வந்தாலும் வரவேற்கக்கூடிய திட்டம். Prevention is better than cure-தடுப்பு முறை சிறந்தது என்று கூறுவது போல அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய கொசுவை ஒழிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.



பிற்பகல் 12-50

அதைப்போலவே எய்ட்ஸ் நோய் அதிகமாக வளர்ந்து வருகிறது. எய்ட்ஸ் என்பது H.I.V. (Human Immuno deficiency Virus) அந்த வைரஸ்-ஆல் ஏற்படக்கூடிய வியாதி. கீழ்த்தட்டிலுள்ள மக்கள்தான் மிக மோசமான இந்த வியாதியால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு இந்நோய் வராமல் தடுப்பதற்காக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தை எல்லா துறைகளிலும் முதன்மையான துறைகளாக்கலாம், நீங்கள். ஆனால், இந்தத் துறையிலே வேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக சில கருத்துகளை நானும் எங்களது டாக்டர் ஐயா அவர்களும் மருத்துவத் துறையில் இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் உங்களுக்கு ஆலோசனைக் கேட்டால், கூற இருக்கின்றோம்.

Physiotherapist, B.Sc. Nursing, Staff Nurse, Pharmacist, X-ray Technicians ஆகிய காலிப் பணியிடங்களை உடனே அரசு பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

எனது விருத்தாசலம் தொகுதியிலுள்ள அரசு தாலுகா மருத்துவமனையில் Orthopaedic Surgeons-எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவிற்கு நிபுணர் போடப்படவேண்டும். (குறுக்கீடு) பண்ருட்டிக்கும் வேண்டுமா, சரி.

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்கின்ற நோயாளிகளுக்கு குறைவான படுக்கை வசதியே தற்போது உள்ளது. இதனால் அறுவை சிகிச்சை செய்த தாய்மார்களை தரையில் படுக்க வைக்கவேண்டிய நிலையுள்ளது. எனவே, இவர்களுக்கென்று தனி வார்டு அமைத்துத் தர வேண்டும்.

இருதய சிகிச்சைப் பிரிவிற்கு எம்.டி.டி. எம். கார்டியாலஜி படித்த ஒரு முதுநிலை மருத்துவரை பணி நியமனம் செய்ய வேண்டும். இந்த விருத்தாசல பெரிய மருத்துவமனைக்குத் தேவையான அத்தியாவசிய பணியாளர்களான, (மணியடிக்கப்பெற்றது) 5 நிமிடங்கள் கொடுங்கள் ஐயா.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-55

நானும் Stanley மருத்துவக் கல்லூரியிலே பிறகு Madras Medical College-லே மருத்துவம் பயின்ற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய உள் அமைப்புகள், வெளி அமைப்புகள், மக்கள் எப்படி பாதிக்கப்படுகின்றார்கள், நோயாளிகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற கண்கூடான உண்மையைக் கண்டறிகின்ற முறையிலே—மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே ஒரு இரண்டு நிமிடம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இரண்டு நிமிடம் இல்லை. ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** நல அந்தஸ்து மற்றும் நோய்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை சிறந்த ஆய்வு முறைகளின் அடிப்படையில்..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** சேகரித்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும். உணவு மற்றும் மருந்து ஆகியவற்றின் தரத்தை உயர்த்தும் வகையில் ஆய்வுக் கூடங்களின் வசதி இருக்க வேண்டும். குடும்ப நலத் துறையிலே சிறப்பாகச் செயல்படுவதற்கு Small family norms, குடும்ப மாதிரியை ஏற்றுக்கொள்ள மக்களைத் தூண்ட வேண்டும். இந்த முயற்சியில் சமூக சேவை நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஒன்றுபட்டு செயல்படும் நிலையை உருவாக்க வேண்டும். சிசு இறப்பு விகிதத்தை infant mortality rate மேலும் குறைப்பதற்கு முயற்சிகள் எடுத்தால்தான் மக்கள் எல்லாம் குடும்பக் கட்டுப்பாட்டினை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். இப்பொழுதெல்லாம் 2 குழந்தைகள் வைத்திருக்கக்கூடியவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு பயந்துகொண்டு செய்யமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் குழந்தைகள் இறந்த பிறகு recanalisation அதுவே Specialised technique. எவ்வளவு முயன்றும் recanalisation மூலம் குழந்தைகள் பெறுவதற்கு வாய்ப்புகள் இல்லையென்ற முறையிலே ஒரு குழந்தையோடு தாய் நிறுத்துவதற்கும், இரண்டு குழந்தையோடு நிறுத்துவதற்கும் (மணியடிக்கப்பெற்றது) கண்டிப்பாக அச்சப்படுகிறார்கள்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** அந்த Sentence உடன் முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் (குறுக்கீடு). . நன்றி சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபட ஒரு பெரிய சமூக சேவை இயக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், புதிய மையங்கள் தொடங்குவதற்காகவும் அதிக நிதி நிவாரணம் அரசு ஒதுக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மேற்கொள்ளும் குடும்பக் கட்டுபாடு நடவடிக்கைகளுக்கு ஏற்ப ஊக்கங்களும், உதவிகளும் அளித்து குடும்பக் கட்டுப்பாட்டு இலக்குகளை அடையும் பொறுப்பை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்கம் கொடுக்கப்படவேண்டும் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

## 8. அறிவிப்பு

### 7-5-2002 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ஒரு நிமிடம் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 7-5-2002 அன்று செவ்வாய்க் கிழமை ராஜ்பவனில், மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வசதியைக் கருத்தில் கொண்டு, மாலை 7.30 மணிக்குப் பதிலாக, 8.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

## 6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ஈ) கோரிக்கை எண் 18- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை—தொடர்ச்சி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** திரு. எச்.எம். ராஜு:

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை எண் 18-இல் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சில கருத்துகளை காங்கிரஸ் கட்சியின் சார்பாக சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மாநிலம், சீரும் சிறப்புமாக திகழ்வதென்றால், மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பாக விளங்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான மருத்துவ வசதி கிடைக்க வேண்டும். Prevention is better than cure என்று சொல்வார்கள். அந்த வகையிலே, நோய்கள் வருமுன்பாக காக்கப்படவேண்டும். எல்லா கிராமப்புறங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். நமது புதிய தேசிய நல்வாழ்வு கொள்கையின்படி, பொது முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும். நம் நாட்டில், 17.3 சதவீதம் மட்டும்தான் இத்துறைக்குச் செலவிடப்படுகிறது. சீனாவில் எடுத்துக்கொண்டால், 24.9 சதவீதம், அமெரிக்காவில் 44.1 சதவீதம், ஸ்ரீலங்காவில் 45.4 சதவீதம், இங்கிலாந்து நாட்டில் 96.9 சதவீதம் செலவிடப்படுகிறது. ஆகவே, நமது நாட்டில் தற்பொழுது உள்ள 5.5 சதவீதம் என்பதை அடுத்த இரண்டு ஆண்டுகளில் 7 சதவீதம் ஆக செலவு செய்ய வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளி மாணவர் நலத் திட்டத்தின்கீழ் நாம் பார்க்கும்பொழுது மாணவர்களுக்கு 10.23 சதவீதம் பல் சொத்தையும், வயிற்றுப்பூச்சி 8.72 சதவீதமும், சுவாசக்கோளாறு 8.63 சதவீதமும், இரத்தசோகை 5.59 சதவீதம் என்றும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆக பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தயவுசெய்து இந்தத் துறை எவ்வளவு நல்ல முறையில் இந்த நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டுமோ அந்த முறையில் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். மேலும் யானைக்கால் நோய், போலியோ, மலேரியா, எய்ட்ஸ், காசநோய், மூளைச்காய்ச்சல், புற்றுநோய் போன்ற முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்த சிறப்புத் திட்டங்களை நமது அரசு தீட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கோத்தகிரி, குன்னூர், கூடலூர் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள பதவிகளான ஆண், பெண் மருத்துவர்களும், செவிலியர்களும் உடனடியாக நிரப்பப்படவேண்டும். ஏற்கெனவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பேசியிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட ஒரு மருத்துவ சங்கம் சென்னையிலே



இருக்கிறது. உதகைக்கு எந்த ஒரு மருத்துவரையும் அனுப்ப விரும்புவது இல்லை. அவர்கள் சீனியாரிட்டி முறையை பார்க்கிறார்கள். உதகையிலே மருத்துவர்கள் அதிக அளவிலே இருக்கிறார்கள். ஆனால், அவர்களை சீனியாரிட்டி இல்லாததினால் அனுமதிக்கமாட்டோம் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கத்தினுடன் பேசி, ஏதாவது ஒரு வகையிலே, 6 மாதம் அளவிலாவது மருத்துவர்கள் நீலகிரியில் தங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

கோவை மருத்துவமனையிலிருந்து 12 சிறப்பு மருத்துவர்களை எல்லாம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீலகிரிக்கு மாதம் இரண்டு முறை வருவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அது இன்னும் செயல்படவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மாதம் இருமுறை மருத்துவர்களை அனுப்பிவைத்தால் அந்த மக்கள் எல்லாம் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படவேண்டும். கீழ்குந்தா பேரூராட்சியில், மஞ்சூர் என்னும் ஊரில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்கப்படவேண்டும். போதிய அளவு மருந்துகள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிக அளவில் மருந்துகள் இருக்கும் சுகாதார நிலையங்களிலிருந்து மருந்துகளை அந்த மருந்துகள் இல்லாத இடங்களுக்கு அனுப்புகிற திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெர்மன் நாட்டு ஓமியோபதி மருத்துவர் 1790-ல் டாக்டர் ஹானிமேன் என்பவர் மலேரியா நோய்க்கு ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார்கள். அதேமாதிரி, நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டம், தொட்டபெட்டா போன்ற பகுதிகளில் சின்கோனா மரங்கள் அதிக அளவில் இருந்தன. கொனைன் என்ற மருந்து மலேரியா போன்ற நோய்களை சரிசெய்வதற்கும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கும் அது அதிக அளவில் உபயோகப் படுத்தப்பட்டது. சின்கோனா மரப்பட்டை மூலம் தயாரிக்கப்படும் கொனைன், பல நோய்களுக்குப் பயன்படுகிறது. மலேரியா போன்ற நோய்களைத் தடுக்கும் இந்த ஹோமியோபதி மருந்துகளுக்கு மீண்டும் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

ஊட்டி அரசு மருத்துவமனைக்கு மின்னாக்கி என்று சொல்லப்படுகிற ஜெனரேட்டர் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. சுற்றுலா அம்சங்கள் நிறைந்த ஒரு மாவட்டம் நீலகிரி. மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் தேவையிருக்கிறது என்பதால் அதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மனநல மருத்துவத் திட்டம் என்பது ஒரு முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மருத்துவமனையிலும்—அதாவது மாவட்ட மருத்துவமனைகளில் ஒன்று அல்லது இரண்டு படுக்கைகள் கொண்ட மருத்துவமனைப் பிரிவு அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டி சட்டமன்றத் தொகுதியில், மேலூர் ஊராட்சியில் உள்ள கொலக்கம்பை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் ஒன்று தேவைப்படுகிறது. காசநோய்ப் பிரிவு ஒன்று மீண்டும் ஊட்டி மருத்துவமனையில் ஆரம்பிக்கப்படவேண்டும். கண்தான மருத்துவப் பிரிவு என்பது மிக முக்கியமான பிரிவு. மக்கள் எல்லாம் கண்ணைத் தானமாகத் தருகிறார்கள். இறந்த 6 மணி நேரத்திற்குள்ளாக கண்களை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு, ஊட்டி போன்ற தூரமான இடங்களுக்கு எல்லாம் மருத்துவர்கள் சென்று, அந்த 6 மணி நேரத்திற்குள் கண்களை எடுத்து கோவைக்கு கொண்டுவந்து கொடுக்க முடியாது. ஆகவே ஊட்டி மருத்துவமனையில் கண்தானப் பிரிவு உடனடியாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சிப் பள்ளியும் எங்களுடைய மாவட்டத்திற்கு வேண்டியிருக்கிறது. செவிலியர் பயிற்சிப் பள்ளி ஊட்டியில் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊட்டியில் அமரர் பரிசோதனை, மாலை 5.30 மணி வரைதான் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிரேதத்தை வாங்குவதற்காக அங்கே தாய்மார்கள் எல்லாம் பனியிலும், மழையிலும், இரவு நேரங்களிலும் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. தயவுசெய்து அந்த நேரத்தை மாற்றி, இரவு 10 மணி வரைக்கும் என்று நீட்டிக்கவேண்டும். நான் ஏற்கெனவே அதுகுறித்து குறுகியகால வினா ஒன்றில் கேட்டுக்கொண்டதுபோல, இதைப் பரிசீலிக்கவேண்டும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், விபத்துகள் மூலம் இறப்பு ஏற்படும்போது, தயவுசெய்து இரவு 10 மணி வரைக்கும் பரிசோதனை கண்டிப்பாகச் செய்யலாம். தற்கொலை போன்ற சாவுகள் ஏற்படும்போது, அதை வேண்டுமானால் மாலை 5.30 மணி வரைக்குள் பரிசோதனை செய்து முடிக்கலாம் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சாலை விபத்துகள் நீலகிரி மாவட்டத்தில் அதிகம் ஏற்படுகின்றன. வாரத்திற்கு 1,2 என்ற வகையிலே சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. அதற்காக கல்லட்டி காட் ரோட்டில் ஊட்டி எச்.பி.எப்.-க்கு அருகிலே சாலை விபத்து சிகிச்சைப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுகாதார நிலையங்களில் மாதம் ஒரு முறையாவது பெண் மருத்துவர்கள் எல்லா கிராமங்களுக்கும் சென்று, குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, ஊட்டி சட்டமன்றத் தொகுதியில் அதிகரட்டி பேரூராட்சியில், தாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையமும், கீழ்குந்தா பேரூராட்சி கெத்தை, முள்ளிகூர் ஊராட்சி, கோரகுந்தாவில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிக்கட்டி பேரூராட்சி, பிக்கட்டியில் மருத்துவர்கள், செவிலியர்கள் குடியிருக்க வசதியில்லை. அந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அனுபவம் மிகுந்த அலோபதி மருத்துவர்களுக்கு நமது அரசு, மருத்துவம் செய்ய அனுமதி வழங்கவேண்டும்.

மருத்துவக் கல்வித் துறையில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கான காலி பணியிடங்களை நிரப்பி, அந்தப் பணியாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும். அரசு பயிற்சிப்பெற்று பணி நியமனத்திற்காகக் காத்திருக்கும் பல்நோக்கு ஆண் சுகாதார பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும். பெண் சிசுவதை ஒழிப்புத் திட்டம், சமூக நலத் துறையிலிருந்து மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மாற்றப் பட்டால் சிறப்பாகச் செயல்படும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண், பெண் குழந்தைகள் இறப்பு சதவீதம் தனித்தனியாகக் கணக்கெடுக்கப்படவேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று அறிய ஸ்கேன் என்ற முறையைக் கண்டிப்பாக எந்த மருத்துவரும் உபயோகிக்கக் கூடாது. ஸ்கேனில் பெண் குழந்தை என்று தெரிந்தவுடன் அந்தக் குழந்தையை அழிக்கப் பார்க்கிறார்கள். எனவே, ஸ்கேன் முறையை உபயோகப் படுத்தக்கூடாது என்பதை கண்டிப்பாக அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் அரசு மருத்துவனையில், சிறப்பு சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் முழு நேர அடிப்படையில் நியமனம் செய்யப்படவேண்டும். அரசுக் கல்லூரிகளில் Physiotherapy-க்கு முதுநிலை பட்ட மேற்படிப்பு

ஒன்றை உருவாக்கவேண்டும். தமிழ்நாட்டில் Physiotherapy Council ஒன்றை உருவாக்கவேண்டும். பூவிருந்தவல்லி தாலுக்கா மருத்துவமனையில் தாய் சேய் நிலையமும், ஆவடி நகர மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு மருந்து கொடுக்கும் மருத்துவர் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்யவேண்டும். இருதய சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை மாற்று சிகிச்சை வசதி செய்யவேண்டும். சிறுநீரக அறுவை சிகிச்சை செய்தபிறகு, "சைக்ளோஸ்பிரின்" என்ற மருந்து முக்கியமாக, கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும். அந்த மருந்திற்கு மிகவும் அதிகமாகச் செலவாகிறது. அதை இலவசமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வாழ்க பாரதம், வளர்க பாரதம்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ரொம்ப நன்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், திரு. ராஜு மாதிரி பேசுங்கள்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கான வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலேயும், நிதிநிலை அறிக்கையிலும், மருத்துவத் துறையிலே ஏற்படக்கூடிய மேம்பாடு சம்பந்தமான பல விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், ஏற்கெனவே, பல மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, நிதி மூலதன வருவாய் என்பது மிகவும் குறைந்த அளவிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகளும், 35 மருத்துவக் கல்லூரி இணைப்பு மருத்துவமனைகளும், தாலுக்கா மருத்துவமனைகள் 162-ம், தாலுக்கா அல்லாத மருத்துவமனைகள் 79-ம், இதர மருத்துவமனைகள் 38-ம், இது அல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1410-ம் இருக்கக்கூடிய நம்முடைய மாநிலத்திலே, ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிதி போதுமானதாக இருக்காது. எதிர்வரும் காலத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, 7 சதவிகிதமாக நிதியை ஒதுக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, கடந்த ஆண்டு, டிசம்பர் மாதத்தில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய நோயாளிகளைப் பார்க்கச் செல்லக்கூடிய பார்வையாளர்களுக்கு, 5 ரூபாய் கட்டணம் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டு, இப்போது மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலே அந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சாதாரணமாக, உழைப்பாளி மக்கள், ஏழையெளிய மக்கள் கூடுதலாகச் செல்லக்கூடிய அரசு மருத்துவமனைகளில், பார்வையாளர்களுக்கு விதிக்கக்கூடிய அந்தக் கட்டணம் ஒரு பெரிய வருவாயை ஈட்டித் தருவதாக இருக்காது; நிச்சயமாக, மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலே 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 4 ஆயிரம் ரூபாய் வரையில்தான் வருமானம் தினமும் கிடைக்கக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது. எனவே குறைந்த வருமானம் உள்ள அந்தப் பார்வையாளர்களுக்கான கட்டணத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டிலே C.T. Scan, M.R.I. Scan சென்னை மருத்துவமனையிலும், மதுரை மருத்துவமனையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. C.T. Scan பல மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலே அமைக்கப்பட்டிருக்கிறது. M.R.I. Scan -ஐப் பொறுத்தவரை, கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில், M.R.I. Scan அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற Scan அமைக்கப்படும்போது, C.T. Scan, M.R.I. Scan-களிலே இப்போது பிரச்சினை எழவில்லை என்றாலுங்கூட, பல மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலே, தாலுகா மருத்துவமனைகளிலே இருக்கக்கூடிய பல்வேறு கருவிகள் அடிக்கடி repair ஆகக்கூடிய நிலைமை, மருத்துவமனை ஊழியர்களாலேயே உருவாக்கப்படுகிறது என்ற அச்சம் இப்போது மக்கள் மத்தியிலே இருக்கிறது. அப்படிப்பட்ட அச்சத்தைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருப்பதில், முழுஉடல் பரிசோதனைக்கு nominal fees வசூலிக்கப்படுகிறது. அதேபோன்று, C.T. Scan எடுப்பதற்கு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று இருக்கிறது. கொள்கைக் குறிப்பிலே, முதலிலே மாதம் ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்பதுபோல, ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் குறைவாக இருக்கக்கூடிய மக்களுக்கும், அந்த C.T. Scan வசதி, இலவசமாக எடுப்பதற்கும், அதுபோல, முழு உடல் பரிசோதனைக்கு nominal fees குறைந்த வருமானம் உள்ள மக்களுக்கு

வாங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இப்போது பல்வேறு மருத்துவமனைகளிலே தாலுகா மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, மாவட்ட மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, மருத்துவமனைக்குச் செல்லக்கூடிய நோயாளிகளிடம் அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் பணம் வசூல் செய்யக்கூடிய நிலைமை பல மருத்துவமனைகளிலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைத் தடுக்க வேண்டுமென்ற முயற்சி இந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டாலுங்கூட, இப்போதும் பல மருத்துவமனைகளிலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைத் தடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இப்போது மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கக்கூடிய, இந்த அரசு மருத்துவமனைகளிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள்—நான் ஒட்டுமொத்தமாக மருத்துவர்களைச் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. மருத்துவர்களிலே ஒரு சிலரிடம் இப்போது மனித நேயம் என்பது குறைந்துவிட்டதோ என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக, நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்குப் பிரசவத்திற்காக சென்ற ஒரு பெண், வயிற்றில் இருக்கக்கூடிய குழந்தை இறந்து விட்டதாக மருத்துவமனையில் இருக்கக்கூடிய டாக்டர்கள் சொன்னதனால், அவர் மீண்டும் ஊருக்குத் திரும்புவதற்காக பஸ் நிலையம் சென்றபோது, அங்கே பிரசவம் ஏற்பட்டு, நல்ல ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. முறையான பரிசோதனைகூட இப்போது பல இடங்களில் செய்யப்படாமல் திருப்பி அனுப்பக்கூடிய நிலைமை என்பது நீடித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், கடந்த காலத்திலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது, எப்படிப்பட்ட நோய்கள் எல்லாம் வந்தன என்பது நமக்குத் தெரியும். அந்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநகராட்சி குறிப்பிட்ட காலத்திலே மருந்துகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தைப் போடாததனால் குறிப்பிட்ட நோய்களைக் கட்டுப்படுத்த



முடியவில்லை என்ற விவாதம்கூட நம்முடைய மாமன்றத்திலே நடந்திருக்கிறது. வரக்கூடிய 2, 3, மாத காலத்திலே, சென்னை மாநகரத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது என்று நாம் நினைத்து இருந்தாலுங்கூட, ஒருவேளை அப்படிப்பட்ட நிலைமை சென்னை மாநகரத்திலே ஏற்பட்டால், மீண்டும் கடந்த ஆண்டிலே ஏற்பட்ட நோய்கள் வராமல் தடுப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு பல அறிவுரைகளை வழங்குவதற்கான முயற்சிகளையும், தேவையான நிதியைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இப்பொழுது சென்னையிலே இருக்கக்கூடிய M.M.C. ஆக இருந்தாலும் சரி, Stanley Medical College-ஆக இருந்தாலும் சரி, கூடுதலாக நோயாளிகள் வந்து செல்லக்கூடிய மருத்துவமனைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்த மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே புறநகர் மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டன. அவை புரசைவாக்கத்தில் இருக்கக்கூடிய பெரியார்நகர் மருத்துவமனை, தண்டையார்பேட்டையிலே இருக்கக்கூடிய மருத்துவமனை. அதேபோன்று, உழைப்பாளி மக்கள் கூடுதலாக வாழக்கூடிய வியாசர்பாடி பகுதியிலே புறநகர் மருத்துவமனை ஒன்றை நிறுவுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, இன்றைக்கு மாநகராட்சி சார்பாக நடத்தப்படக்கூடிய பல்வேறு மகப்பேறு நிலையங்களாக இருந்தாலும் சரி, மற்ற மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, அந்த மருத்துவமனைகளில் தேவை அடிப்படையிலே போதுமான டாக்டர்கள் இல்லாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட எந்த ஒரு நோயாளிக்காவது மருந்து வசதி செய்து கொடுக்கப்படுகிறதா என்றால், செய்து கொடுக்கப்படாத நிலைமைதான் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. நான் குடியிருக்கக்கூடிய சர்மா நகர்ப் பகுதியிலும், அதேபோல் கணேஷ்புரம் பகுதியிலும், பெரம்பூர் பகுதியிலும் இருக்கக்கூடிய மாநகராட்சியால் நடத்தப்படக்கூடிய மருத்துவமனைகளிலேகூட போதுமான வசதிகள் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று ஆட்சியாளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அவசர சிகிச்சைப் பிரிவு உருவாக்குவதற்காக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 19 இலட்சம் ரூபாய் செலவு செய்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. கட்டி முடிக்கப்பட்ட 2 ஆண்டுகளுக்குப் பின்னால்கூட, அவசர சிகிச்சைப் பிரிவு அங்கே தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்த குழித்துறை அரசு மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்களை வழங்கி, போதுமான டாக்டர்களை நியமித்து, அந்த அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாக தொடங்குவதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்திலே இருக்கக்கூடிய அரசு பொது மருத்துவமனையில், இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இப்பொழுது இளம் நீரிழிவு நோயாளிகளுடைய எண்ணிக்கை தமிழகத்தில் கூடுதலாக வந்து கொண்டிருக்கிறது. இந்த இளம் நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தவரை, இன்சுலின் ஊசி பயன்படுத்தப்பட்டால்தான் வாழ்க்கையைத் தொடர முடியும் என்ற ஒரு நிலைமை இருக்கக்கூடிய காலத்தில், தொடர்ச்சியாக ஒரு மாத காலத்திற்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்றாலும், 2 ஆயிரம் ரூபாய் வரை ஒரு குடும்பத்திற்கு செலவாகக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மருந்தினுடைய விலை இப்பொழுது படிப்படியாக உயர்ந்து கொண்டே இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இரண்டு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** இப்பொழுது சாதாரண குடும்பங்களிலே இருக்கக்கூடியவர்கள் அந்த இன்சுலின் ஊசியைப் பயன்படுத்த முடிகிறதா என்றால், முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, அரசு மருத்துவமனைகளில் அந்த மருந்துகளைக் கொண்டு வருவதற்கோ, அல்லது இன்சுலின் விலையைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கான முயற்சியையோ நாம் மேற்கொள்ள வேண்டுமென்று முதலிலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோன்று, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, Physiotherapy படித்தவர்கள் 10 ஆயிரம் மாணவர்கள் படித்து முடித்துவிட்டு வெளியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு மருத்துவமனைகளில் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப்போல இருக்கக்கூடிய 1749 மருத்துவமனைகளிலே, 180 Physoitherapists மட்டும்தான் இப்பொழுது பணியிலே அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். வருடத்திற்கு 2000 மாணவர்கள் வெளி வரக்கூடிய இந்தத் துறையிலே இன்னும் கூடுதலாக அனைத்து மருத்துவமனைகளிலும் Physoitherapy படித்த மாணவர்களை பணியமர்த்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1997 ஆம் ஆண்டு தமிழகத்தில் தொழுநோய் ஒழிக்கப்பட்டதாகக் கூறி, தொழுநோய் தடுப்புத் துறை என்பது பொது சுகாதாரத் துறையோடு இணைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இதே துறையிலே பணியாற்றக்கூடிய இந்தத் துறையல்லாமல், தொண்டு நிறுவனங்கள் மூலமாக தொழுநோய் தடுப்பு, தொண்டு நிறுவனங்களிலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் இப்பொழுது அரசு பணியிலே அமர்த்தப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. 1962 ஆம் ஆண்டு இதேபோன்று தொண்டு நிறுவனங்களிலே பணியாற்றிய தொழுநோய் தடுப்பு ஊழியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அதேபோன்று எதிர்வரும் காலத்திலும் அப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும்,

காலத்தின் அருமை கருதி தலைவர் அவர்கள் ஐந்தே நிமிடங்கள் என்று கட்டளையிட்டிருக்கிறார். முன்னாலே பேசியவர்களுக்கு ரொம்ப வசதியான நேரம், இது பின்னால் பேச வருகின்றவர்களுக்கு மிகச் சிரமத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தாலும், குறிப்பாக நான் முன்னதாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கை. மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு 500 படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சென்ற ஆட்சிக் காலத்திலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 7½ கோடி ரூபாய் செலவிலே கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது நிலுவையிலே இருந்தது.

சென்ற ஆண்டும் அந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்தி இந்தச் சட்டமன்றத்திலே பேசியபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது இருக்கிற நிதிநிலையைக் கருத்திலே கொண்டு 150 படுக்கை வசதிகளுடன்கூடிய, கிட்டத்தட்ட 3½ கோடி ரூபாய் செலவிலே அந்த மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், மறுபடியும் இந்த மானியக் கோரிக்கை வந்த நிலையிலேகூட அதற்கான நிதி ஒதுக்கீடோ, அதற்கான ஏற்பாடுகளோ எதுவுமே அறிவிக்கப்படவில்லை என்று அந்தப் பகுதியினுடைய பொது மக்கள் வருத்தப்படுகிறார்கள். எனக்கும் கடுமையான வருத்தம்தான். இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டு திட்டத்திலேயே இணைத்து அதற்கான நிதியொதுக்கீடு செய்து, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் தன்னுடைய பதிலுரையிலே இதற்கு விளக்கமாக பதிலையளித்து ஒரு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே பல்வேறு நோய்கள் வந்திருக்கின்றன. அதிலே, மலேரியா ரொம்ப பிரபலமான நோயாக இருக்கிறது. டெங்கு காய்ச்சல், பிறகு எலி ஜுரம் என்றவொரு ஜுரம் வந்திருக்கிறது. இப்படி பல்வேறு நோய்கள் வருவதைத் தடுப்பதற்கான முயற்சி அரசு சார்பில் எடுக்கப்படுகிறது என்று சொன்னால்கூட, உரிய கவனம் செலுத்தி, எந்த வகையிலே அது வருகிறது என்பதையெல்லாம் மிகத் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமிருப்பதாக கருதுகிறேன். குறிப்பாக, கொசுத் தொல்லை, குடிநீர்ப் பிரச்சினை, இது இரண்டின் மூலமாக வருகிறது



என்று ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி அந்த ஆய்வின் மூலமாக கிடைத்திருப்பதை வைத்து, இப்படிப்பட்ட நடவடிக்கைகளின் மூலமாக இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எந்த வகையில் எடுக்கிறோம் என்பதைப் பார்த்துச் சொல்கிறபோது, சில செய்திகளைச் சொன்னால்கூட அது போதுமானதாக இல்லை. ஆகவே, அவற்றைத் தடுப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். ஏனென்றால் கொசுக்களை ஒழிக்கிறோம் என்று சொல்கிறோமேதவிர, நாளுக்குநாள் கொசுக்களினுடைய எண்ணிக்கை அதிகரிக்கிறது; அதைவிட அதனுடைய பருமன் அதிகரிக்கிறது. அதைப் பார்த்தால் ஜெட் விமானம் வருவதைப்போல வந்து கொண்டிருக்கிறது. வேகமாகப் பறந்து வந்து தாக்குகிறது. ஆகவே, இது கொசுவாக இல்லை. மிகப் பெரிய ஒரு பிராணியைப்போல, வௌவால் வருவதுமாதிரி, பருந்து வருவது மாதிரி, பறந்து வந்து மனிதர்களைத் தாக்குகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். வெறும் நகர்ப்புறத்தில் மட்டும் இருந்த நிலைமாறி, குக்கிராமங்கள் வரையில்கூட அது வந்துவிட்டது. ஆகவே, இதை ஆராய்ச்சிபூர்வமாக ஒழிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல வசதிகள் இல்லை. அது குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது, வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகள் இருக்கிறது என்று. இருந்தாலும் பிரசவம் பார்ப்பதற்குக்கூட சில முயற்சிகள், அதற்குரிய வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலையிலே சாதாரண ஏழையெளிய மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அங்கே அதற்குரிய தேவையான வசதிகள், அல்ட்ரா சவுண்டு வசதிகள் போன்ற எல்லா வசதிகளையும்கூட ஆரம்ப சுகாதார நிலையத்திலே வைக்கலாம். அதேபோல, 24 மணிநேர மருத்துவமனையிலும் வைக்கலாம்; வட்ட மருத்துவமனையில் வைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குறிப்பாக விஷக்கடிக்கு ஆளாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான மருத்துவத்தைப்பற்றி இங்கே பேசினோம். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலேயும், செயல்திட்டத்திலேயும் கிண்டியில் தயாரிக்கப்படுகிற மருந்து, அந்த நிறுவனத்தின் மூலமாக பாம்புக் கடிக்கு உரிய மருந்து, அதேபோல நாய்க் கடிக்கு உரிய மருந்து தயாரிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அப்படியென்றால்

பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுமே? அப்படிப்பட்ட பாதிப்புகளை தடுப்பதற்கான வேறுவகையான முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதை மிக முக்கியமான விஷயமாக நான் கருதுகிறேன். ஆகவே, அந்த நச்சுமுறிவு தன்மையுடைய மருந்துப் பொருட்கள், அவற்றைத் தயாரிப்பதற்கான ஆலை, அதற்குரிய தயாரிப்புப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதாக சொல்லப்படுவது என்பது ஓர் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதன்மீது தகுந்த விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*பிற்பகல் 1-20*

சித்த வைத்தியத்திலே நம்பிக்கை தெரிவித்திருக்கிறீர்கள். அப்படியென்றால், வேறு வைத்தியத்தைப் பற்றிய கேள்வி என்ன? அப்படியென்று இருந்தால்கூட, சித்த வைத்தியத்தின்மீது இருக்கிற நம்பிக்கையை மேலும் சிறப்பாக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். காரணம், நச்சுத் தன்மை இல்லை, அதிகச் செலவு கிடையாது, பக்க விளைவுகள் கிடையாது என்ற காரணத்தைச் சொல்லி, அந்த மருத்துவத்தின் மீது மக்களுக்கு மிகப் பெரிய ஓர் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மேலும் வளர்ப்பதற்கான முயற்சி எடுக்கலாம். சித்த வைத்தியத்தினுடைய அந்த குணத்தின் அடிப்படையிலே பார்த்தால் சில பொருட்களை உட்கொள்வதிலேயே சில பிரச்சினைகள் இருக்கிறது, நச்சுத் தன்மை இருக்கிறது. குறிப்பாக மது அருந்துவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை எல்லாம் நாம் பேசி இருக்கிறோம். ஆகவே, அந்த மது அருந்துவதாலே ஏற்படுகின்ற தீங்கைப் போக்க வேண்டுமென்று சொன்னால், கள் சாப்பிட்டால் அது கூட சித்த வைத்தியத்தின் மூலமாக கூட நச்சுத் தன்மை இல்லை. பக்க விளைவுகள் இல்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறதே. அதை நம்முடைய சுகாதாரத் துறையின் மூலமாக ஆய்வு செய்து. அதை அரசுக்கு சிபாரிசு செய்து, கள் கடைகளைத் திறப்பதற்கான முயற்சிகளை, எடுத்தால் பல கோடி ரூபாய் வருமானமும் வரும், உடல் நலம் பாதிப்பிலிருந்து மீள்வதற்குரிய வாய்ப்பும் மக்களுக்கு ஏற்படும். அதையும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை ஆய்வு செய்து அதை அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பாக மன நல காப்பகங்கள், ஏர்வாடியிலே, இராமநாதபுரத்திலே மூடப்பட்டதற்குப் பின்னாலே அதனுடைய நிலைகள் என்னவென்றே தெரியவில்லை. அதனாலே மாவட்டந்தோறும் ஒரு மன நலக் காப்பகத்தை அமைக்கலாம். அதுபோல, அதிலே அந்த நோயாளிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, முதியோர் இல்லங்களையும் இதையும்கூட இணைத்து நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்கலாம். மக்கள் நல்வாழ்வுத் துறையும், சமூக நலத் துறையும் இணைந்து எடுத்தால் அதை சிறப்பாகச் செயல்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், முதியோர் இல்லங்களில் தங்கக்கூடிய முதியோர்களுக்கு சரியான உணவு, தங்குகின்ற இடவசதி போதுமானவை இல்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. அப்படிப்பட்ட முதியோர்கள்கூட 10 நாள் அரசு மருத்துவமனையில் வந்து நல்ல சாப்பாடு, நல்ல படுக்கை, நல்ல வசதி இருக்கிறது என்று தங்குகிற ஒரு பழக்கம் இருக்கிறது என்று எல்லாம் மருத்துவர்களே சொல்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் அமல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநில அளவில் Physiotherapy council அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. கிட்டத்தட்ட 10,000 பேர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அநேகமாக 150 பேர்களுக்கு மட்டும்தான் நாம் வேலை கொடுத்து இருக்கிறோம். நிறைய கல்லூரிகளைத் திறந்துவிட்டோம். படித்து பட்டம் பெற்று வெளியே வருபவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் இருப்பதை போக்குவதற்கான முயற்சியாக மாவட்ட அளவில், நகராட்சி, மாநகராட்சி, தாலுகா மருத்துவமனைகளில் எல்லாம் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சுகாதார செவிலியர்களுக்கு, சுகாதாரப் பார்வையாளர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். சீருடைப் படி வழங்குவதிலே வித்தியாசம் இருக்கிறது. சென்ற ஆட்சியிலே அப்படிப்பட்ட வித்தியாசத்தைப் போட்டு இருக்கிறார்கள். கிராம சுகாதார செவிலியர்களுக்கு 250 ரூபாயில் இருந்து இப்போது 500 ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பகுதி கிராம சுகாதார செவிலியர்களுக்கு 400 ரூபாயிலிருந்து இன்னும் உயர்த்தப்படவே இல்லை. ஆகவே இரண்டு

பட்டுப் புடவையிலேகூட போலியான ஜரிகைகள் போடப்பட்டு இருக்கின்றன என்பது பத்திரிகையின் வாயிலாகத் தெரிய வருகின்றபோது, நம்முடைய மரியாதை, கௌரவம், நாணயம், அத்தனையும் பாழ்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றது. நல்லவேளை தங்க ஜரிகை என்று சொல்லி, அது இப்பொழுது stock இருந்ததனாலே, கொஞ்ச நாள் கழித்து அது வெள்ளியாக மாறி இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்; பித்தளையாக மாறியிருந்தால் என்ன பண்ணுவது என்று. இதையெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. தாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே இருக்க வேண்டியவர்கள் இந்தத் தவறுகள் எப்படி ஏற்பட்டன; இனி வருங்காலத்திலே ஏற்படாத வண்ணம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவேதான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றேன். பெண்கள் போய் பட்டுப் புடவை வாங்கும்போது இது நல்ல ஜரிகையா என்று கேட்பார்கள். நல்ல ஜரிகைதான் என்று சொல்லுவார்கள். நல்ல ஜரிகை என்று சொன்னால் கொஞ்சம் கூட விலையாக இருந்தால்கூட வாங்கிக்கொள்வார்கள். ஆனால், இப்போது அந்த ஜரிகையும் போர்ஜரி ஜரிகை என்று நினைக்கும்போது, எந்தப் புடவையை வாங்குவது என்று தெரியாமல் இன்றைக்கு பெண்கள் மத்தியிலே, தாய்மார்கள் மத்தியிலே ஒரு சந்தேகம் ஏற்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது என்பதை நான் நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், கைத்தறி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நான் மீண்டும் கேட்டுக்கொள்வதெல்லாம், கைத்தறி துணி மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்கின்ற இந்த நேரத்திலேயே, பட்டுப் புடவைக்கு 3 ரூபாய் வரி ஏற்றி இருக்கிறீர்கள்; அம்மா அவர்கள் தயவுசெய்து அதை மறுபடியும் consider பண்ண வேண்டும்; 3 ரூபாய் வரி என்பது ஒரு பெரிய வரியல்ல; அதேபோல கைக்குட்டைக்கும் வரி 4% போட்டு இருக்கிறீர்கள். 100 ரூபாய்க்கு 3 ரூபாய் வரி; எந்தப் பட்டுப் புடவையும் ஆயிரம் ரூபாய்க்கு கம்மியாக இல்லை; ஆகவே ஆயிரம் ரூபாய்க்கு பட்டுப் புடவை வாங்கும்போது 30 ரூபாய் வரி தானாகப் போய்விடும். அதுபோல் கைக்குட்டைகளுக்கும் 4 சதவீதம் வரி என்று இருக்கிறது. அந்த நிலைமைகளை நீங்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு) பக்கத்தில் இருப்பவருக்கு பட்டுப் புடவை விலை நன்றாகத் தெரிகிறது; எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)



**திரு. ஐ. கணேசன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கத்தை படித்ததனாலேதான் தெரியுதேயொழிய; பெண்களுக்கு இருக்கக்கூடிய திறமை சேலை எடுப்பதிலே எனக்கு இல்லை என்பதை தயவுசெய்து தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-00

**திருமதி டி. யசோதா:** நான் தொடக்கத்திலிருந்தே 3 ரூபாய், 3 ரூபாய் என்று சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். 3 சதவிகிதம் வரி இருக்கிறது. பட்டுப் புடவைக்குக் கேளுங்கள், கேளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். கதர் இரகங்களுக்கு வருடத்திற்கு, தமிழகத்தில் உள்ள மத்திய கதர் ஆணைக் குழுவால் சான்றளிக்கப்பட்ட கதர் நிறுவனங்களுக்கு ரூ.5 கோடி என நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை கருணையுடன் பரிசீலித்து, வருடத்திற்கு ரூ.10 கோடியாக உயர்த்த வேண்டுமென மத்திய அரசாங்கத்திடம் கேட்டு அம்மையார் அவர்கள் இதற்குரிய ஆணையைப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும், கதர், பட்டு, பாலி இரகங்களுக்கு மட்டும்தான் தமிழக அரசின் தள்ளுபடி கொடுக்கலாம் என்பதை மறுபரிசீலனை செய்து வழக்கம்போல அனைத்து மாநிலங்கள் மூலம் பண்டமாற்று முறையில் வாங்கி சில்லறையாக விற்பனை செய்யப்படும் கதர்,பட்டு, பாலிவஸ்திரா, கம்பளி ஆகிய இரகங்களுக்குத் தொடர்ந்து தள்ளுபடி கொடுக்க அரசு அனுமதிக்க வேண்டும். இதனால் கதர் வாங்கும் வாடிக்கையாளர்கள் திருப்தி அடைவார்கள்; வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்; சுதேசி எழுச்சியும், இந்திய பொருளாதாரம் மேம்பாடு அடையவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் மகாத்மா காந்தி அடிகளால் தொடங்கப்பட்ட இந்த கதர் வேலைகள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் இன்னும் அதிகமாகவும் வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. இந்த நிலையில் தமிழக அரசு மூலமாக ரூ.43 கோடி வரவேண்டிய நிலையில் கதர் உற்பத்தி, விற்பனை, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் சரிபாதிக்கும் கீழே குறைந்து விட்டது. நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தும் நமது அரசு, கதர், கைத்தொழில் வேலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் தள்ளுபடியாக கொடுத்த ரிபேட் தொகையை வெகுவிரைவில் கதர் நிறுவனங்கள் பெற தமிழக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

உத்திரவாதம் செய்ய வேண்டும். மதுரையில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குச் சொந்தமான காலி மனைகளை விற்பனை செய்வதன் மூலம் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடனை நேர் செய்ய முடியும். பகிரங்க டெண்டர் மூலம் விற்பனை செய்ய உடனடியாக அனுமதி வழங்க வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டது. சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். அதேபோல் மதுரையிலும் பிற பகுதியிலும் உள்ள மாஸ்டர் வீவர்கள் அதாவது. தொழில் நடத்தக் கூடியவர்களை அழைத்து அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவர்களின் நியாயமான, சரியான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்கள் அவர்களுக்கு கூலி உயர்வு இல்லாமல் நீண்ட நெடுங்காலமாக துன்பப்பட்டு வருகிறார்கள். அதனையும் உறுதிப்படுத்தி கூலி உயர்வு வழங்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் உற்பத்தி செய்யப்படும் கதர் பாலிவஸ்திரா மற்றும் பட்டு ரகங்களுக்கு அரசால் வழங்கப்படும் 30 சதவிகித தள்ளுபடியினை ஆண்டு முழுவதற்கும் வழங்க உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் கதர் அங்காடிகளை புதிதாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கதர் வாரியத்தில் பணியாற்றும் உடனாள் நிலை - 2 பதவியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பதவி உயர்வும், அரசால் வழங்கப்படும் சலுகைகளும், உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவை மாவட்டம், சோமனூர், பல்லடம், அவிநாசி போன்ற பகுதிகளில் சுமார் 1½ இலட்சம் விசைத்தறி நெசவாளர்கள் கடந்த 12 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் 3 இலட்சம் பேர் மொத்தமாக பாதித்துள்ளனர். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும். மின் கட்டண உயர்வை எதிர்த்து நடைபெறக்கூடிய இந்தப் போராட்டத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் தொகை 500 ரூபாயாக இருப்பதை மேலும் உயர்த்த வேண்டும். செல்லூர், அவுனியாபுரம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நெசவுத்



தொழில் நடத்தக்கூடியவர்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய பல்வேறு நிபந்தனைகளுக்கு ஆளாகி நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். நிலைமையை அவர்கள் மூலம் கண்டறிந்து பொருத்தமான வழிவகைகளைக் கண்டு தொழில் நடத்தப்படுவதற்கும், தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுவதற்கும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** 'பூமகள் பெருமையும், நாமகள் இனிமையும் பூமியில் வந்தது பெண்ணாக' என்ற இனிய வரிகளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கி, அன்பு, பாசம், தியாகம் யாவும் ஒன்றாய் நின்று, ஆறரை கோடி தமிழ் மக்களும் அன்றாடம் தொழுது போற்றும் தூய திருவடியாய் விளங்கி, ஒன்றல்ல இரண்டல்ல, ஒப்புவுமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில் என்று அன்று கவிஞர் பாடியதன் அர்த்தத்தை இன்று நாம் கண்டு மகிழும் விதத்தில் பொழுது புலரும் போதெல்லாம், புதுப்புது திட்டங்கள்தனை அன்றாடம் தந்து பல அற்புதங்களை நிகழ்த்தி, தமிழகத்தின் சிறப்பை தரணிக்கே உயர்த்திக் கொண்டிருக்கும், இமயத்தைப் பணிய வைக்கும் துணிவையும், இல்லாதவர்க்கு உதவும் கனிவையும் ஒரு சேரப் பெற்ற 'தர்மத்தின் சங்கொலி முழங்கிடுவோம், தமிழ்த் தாயின் மலரடி வணங்கிடுவோம்' என்ற கவிதை வரிகளுக்கு ஏற்ப தர்மத்தின் நாதமாக ஒலிக்கும், எங்களை வாழவைக்கும் தெய்வம், எங்கள் அம்மா அவர்களின் தாமரைத் திருவடி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2002-2003 ஆம் ஆண்டு கைத்தறி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தங்களுக்கும், இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த காங்கேயம் தொகுதிவாழ் மக்களுக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொண்டு, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை பெற்று சமூக நீதி காத்த வீராங்கனை எங்கள் அம்மா அவர்களை முதலமைச்சராக அமர்த்திய ஆண்டிப்பட்டி தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றிகூறி, தமிழகம் செய்த நற்தவப்பயனால் வந்துதித்த எங்கள் தர்மத் தாயே, நின்புகழ் இன்று இமயமென நெடிதுயர்ந்து நிற்குதம்மா. மக்கள் மனங்களில் மணம் வீசும் மனோரஞ்சிதமே, வீரத் திருப்பார்வையால் வெற்றிக் கனியை மட்டும் பறிக்கும் எங்கள் வீரத்தின் விளைநிலமே, உங்கள் வருகையால் இன்று வீழ்ந்து கிடந்த தமிழகம் வாழ்கிறது. வளர்கிறது தாயே.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, உழுது கொண்டிருக்கிற உழவர் சமுதாயம் என்றென்றும் அடுத்தவரை தொழுது செல்லக்கூடாது என்று, 65 வயது முதிர்ந்தவர்களுக்கு, ஓய்வூதியத் திட்டத்தை அளித்து, வாழ்க்கையில் ஒளியேற்றியதோடு, இலவச மின்சாரத்தை எந்தக் காலத்திலும் இரத்துச் செய்யமாட்டோம் என்பதையும் இந்த மாமன்றத்தில் நிலைநாட்டிய தாயின் பெருமையை எடுத்துக்கூறுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-15

இந்த ஆட்சி ஏழைகளுக்காக, ஏழைகள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஆட்சி என்பதைச் சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

அம்மா, ஈரோடு மாவட்டம், கைத்தறி நெசவுத் தொழிலை நம்பி ஆயிரமாயிரம் குடும்பங்கள் வாழ்கின்ற பகுதி. இப்பகுதியில் 200-க்கும் மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் பெட்ஷீட், துண்டு, தலையணை உறை, சால்வை, ஜக்கார்டு பெட்ஷீட்கள், ஜமுக்காளங்கள், பாலியஸ்டர் மற்றும் பர்னிஷிங் பீஸ் ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக என்னுடைய காங்கேயம் தொகுதியில், சென்னிமலையில் மட்டும் நிறைய கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மேற்படி உற்பத்தியில் பெருமளவு கோ-ஆப்டெக்ஸ்-க்கு விற்பனை செய்யப்படுகின்றன. எஞ்சியவற்றை சங்கங்களே ஷோரூம்கள் மூலமாகவும், நேரிடையாகவும் விற்பனை செய்து வருகின்றன.

தீபாவளி, பொங்கல் பண்டிகைகளுக்குப் பிறகு கோ-ஆப்டெக்ஸ் மேற்படி ரகங்களை கொள்முதல் செய்வதில்லை. இதனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் இருப்புத்தேக்கம் அதிகரித்துள்ளது. தற்போது ஈரோடு சரக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 34 கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளிகள் தேங்கிக் கிடக்கின்றன. கடும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க இயலாத சூழ்நிலையும் உள்ளது.



மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் அமைந்துள்ள நம்முடைய அரசு, தொழிலாளர், நெசவாளர் நலன் காக்கும் அரசு. எனவே, நெசவுத் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நெசவாளர் சங்கங்களின் இருப்புத் தேக்கமுள்ள ஜவுளிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்துகொள்ள அம்மா அவர்கள் கருணைகூர்ந்து ஆவன செய்திட பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் ஈரோடு சரகத்தில் உற்பத்தி செய்யப்படும் பெட்ஷீட், தலையணை உறை, துண்டு, சால்வை, ஜக்கார்டு ரகங்கள் மற்றும் பாலியஸ்டர் ரகங்கள் தேக்கமின்றி விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் தங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக சென்னிமலைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பெட்ஷீட் ரகங்கள், காலத்தின் நாகரீக வளர்ச்சிக்கேற்பவும், மக்களின் ரசனைக்கேற்பவும், புதிய வடிவமைப்புகளோடு தயாரிக்கப்படுவதால், அவை உடனுக்குடன் தேக்கமின்றி விற்பனை செய்யப்பட்டுவிடுகின்றன. எனவே, மேற்படி ரகங்கள் கோ-ஆப்டெக்ஸ் கிடங்குகளில் போதுமான அளவு இருப்பு இல்லை என்ற விவரத்தையும் தங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து சங்கம் பெறும் காசுக் கடனுக்கு அரசு வழங்கும் 3 சதவிகித வட்டி மானியத் தொகை 1-1-1998-லிருந்து அரசிடமிருந்து வரவேண்டியுள்ளது. இத்தொகையினை விரைவில் பெற்று வழங்க வேண்டுமென அம்மா அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காசுக் கடன் பெற அரசு அளித்துள்ள உத்திரவாதத்திற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய அரை சதவிகிதப் பொறுப்புத் தொகை, செலுத்தாமல் இருக்க விதிவிலக்கு அளிக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ள உறுப்பினர் 60 வயது அடையும்முன் காலமாகிவிட்டால், அவரது வாரிசுதாரருக்கு காப்பீட்டுத் தொகையாக ரூ.50 ஆயிரமும், கோ-ஆப்டெக்ஸ் நல்வாழ்வுத் தொகையாக ரூ.15 ஆயிரமும், ஆக மொத்தம் ரூ.65 ஆயிரம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும் காப்பீட்டுத் தொகை, மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நல்வாழ்வுத் தொகை இரண்டையும் சேர்த்து ரூ.1.00 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டுமாய் அம்மா அவர்களை பணிவோடு வேண்டுகிறேன்.

சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள ஒரத்தப்பாளையம் அணையில் தேங்கும் தண்ணீர் திருப்பூர் சாயக் கழிவு நீரினாலும் சாக்கடைத் தண்ணீராலும் தேங்கிக்கொள்ளும் அணையாக மாறிவிட்டது. கிட்டத்தட்ட ஐயாயிரம் ஏக்கர் பரப்பளவு நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படாமலும் கால்நடைகளை வளர்ப்பதற்குக்கூட மிகவும் சிரமப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடைசியில் நிலத்தடி நீரும் கெட்டு, இங்கு குடிநீருக்கே மிகவும் அவதிப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது, தாயே. விவசாயிகளின் விடிவெள்ளியே, இந்த அணைக்கு வரும் தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்து தந்தால் எங்கள் பகுதியில் இருக்கும் கிட்டத்தட்ட ஐயாயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பயனடையும். தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் கருணைகொண்டு திருப்பூரிலிருந்து வரும் சாயக் கழிவுநீரைக் கட்டுப்படுத்தி சுத்திகரிப்பு செய்து அனுப்பவேண்டுமாய் பணிந்து வேண்டுகிறேன், அம்மா.

சென்னிமலையில், காங்கேயத்திற்கு, சித்த மருத்துவமனைகள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றையும் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, எங்கள் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கடந்த ஆட்சியில் Ortho-பிரிவுக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கும் கட்டடங்கள் மட்டும் கட்டப்பட்டு சும்மா கிடக்கின்றன. அவற்றுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கி உதவி செய்து தருமாறு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிகரற்ற தமிழகத்தில் தழைத்தோங்கிய தங்கத் தலைவியே, தளராது உழைத்த உழைப்பின் உன்னதமே, ஓராண்டுகால ஒப்பற்ற ஆட்சி நிறைவுபெறும் இன்னும் ஓரிரு நாளில் எங்கு பார்த்தாலும் திரும்பிய திக்கெல்லாம் வெற்றி வெற்றி என்று வெற்றியின் திசை நோக்கி வீரநடை போட்டு, நின்றால் தென்றல், புறப்பட்டால் புயல், பொங்கினால் பூகம்பம் என்று சொல்லக்கூடிய அளவில் திகழும் நம்முடைய காக்கும் கடவுள் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வர இருக்கின்ற மூன்று தொகுதிகளில் பெற இருக்கின்ற இடைத்தேர்தல் வெற்றி மேலும் வெற்றி மகுடத்திற்கு ஒரு கோஹினூர் வைரத்தைப் பதிக்கக்கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கும். இங்கே வாயாடிக்கொண்டு வசை பாடிக்கொண்டிருக்கின்ற புல்லர்களுக்கும், எத்தர்களுக்கும் இந்நாட்டு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என்பதை ஒட்டுமொத்த குரலாக ஒலிக்க விரும்புகிறேன். திராவிடப் பாரம்பரியத்தின் திருவிளக்கு, திக்கற்றோரின் ஒளிவிளக்கு, தீய எண்ணம் கொண்டவர்க்கு சிம்ம சொப்பனம். தேன் மதுர முத்தமிழுக்கு நான்காம் தமிழாக அறிவியல் தமிழ்கண்ட தமிழ்த்தாயே, என்றும் வற்றாத கருணை கடலே, ஆலயங்களின் தீபம் தாங்கள்தான்



தாயே. தமிழ்த் திரை உலகின் தவத்தாய், ஏழை மற்றும் அனைத்து மக்களும் போற்றி வாழ்த்திடும், வணங்கிடும் ஏந்தலே, தொட்டில் குழந்தை நின் புனித ஆட்சிக் கட்டிலின் அச்சாரம் தாயே. தமிழ்நாட்டின் விடிவெள்ளியே, அரசியல் உலகின் சகாப்தம் தங்களுடைய பொற்கால ஆட்சியில் நாங்கள் வாழ்ந்து வருவதே எங்களின் பிறவிப்பயன் தாயே என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி கதர் வாரியத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில விளக்கங்களை வைக்க நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே கைத்தறி ஒரு முக்கியமான தொழில். கோடிக்கணக்கான படித்த மக்களும், படிக்காத மக்களும் குடும்பத்தோடு பணியாற்றக்கூடிய, தொழில் செய்யக்கூடிய ஒரு மாபெரும் தொழில் நம்முடைய கைத்தறித் தொழில், நசிந்து கொண்டிருக்கிற இந்தத் தொழிலைப் பாதுகாக்க நமது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் முதலிலே பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கைத்தறித் தொழிலுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த 22 இரகங்களிலே இன்றைக்கு ஒரு மிகப்பெரிய பாதிப்பு வந்திருக்கிறது. குறிப்பாக, புதிய பொருளாதாரம், உலகமயம், இந்தக் கொள்கையால் இன்றையதினத்திலே இந்தத் தொழிலுக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேலாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் கைத்தறித் தொழில் நாளுக்கு நாள் பாதாளத்திலே சென்று கொண்டு இருப்பதிலிருந்து பாதுகாப்பதற்கு நமது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களை இப்போது மூடிக் கொண்டிருக்கக்கூடிய அவலமான நிலைமை, தொழிலாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய ஏக்கத்தை இப்போது உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 6-25*

கைத்தறித் தொழிலை இப்போது பாதுகாப்பதற்கு நெசவாளர் நலன்களை பாதுகாப்பதிலே நமது அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். உதாரணத்திற்கு அம்மாப்பேட்டை கூட்டுறவுச் சங்கத்தை இப்போது எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், சுமார் 8 இலட்சம் ரூபாய்

பிற்பகல் 6-30

அதேபோன்று ஒரு Tribunal அமைக்கப்பெற்றது. அந்த Tribunal-லே என்ன அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது? அந்த Tribunal-னுடைய சிபாரிசு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தருமபுரி மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு நெசவுத் தொழிலில் அநேகமாக துணித் தொழிலில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு அந்த மாவட்டத்திலே இயங்கி வந்திருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய்க்கு மேலே இன்னும் அந்த Co-operative Society-யிலிருந்து பணம் வழங்கப்படாத காரணத்தினால் அந்த நிறுவனமே இன்றைக்கு மூட வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு இன்னும் பணம் வழங்கப்படவில்லை. அரசு உடனடியாக இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து பணத்தை அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நெசவுத் தொழிலாளர்கள் மிகப் பெரிய வேலையில்லாத பாதிப்பிலே ஆட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நெசவுத் தொழிலிலே சிட்டா நூலினுடைய தன்மையின் அடிப்படையில் நேரடியாக அதற்கு கொடுக்கக்கூடிய கடன்களை வட்டியில்லாத கடனாகக் கட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம், அதற்குரிய முயற்சிகளிலே ஈடுபட்டு வட்டியைத் தள்ளுபடி பண்ணி, அவர்கள் பெற்றிருக்கிற கடனை, வட்டியில்லாத கடனாக அவர்கள் திருப்பிச் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கைத்தறித் தொழிலிலே ஒரு லைட், மின் பல்புகள், கேட்கிறார்கள். விவசாயிகளுக்கு வழங்குகிறபோது எங்கள் கைத்தறியிலே அந்த ஒரு லைட் அந்த குண்டு பல்பு, ஒரு லைட்டுக்கு இலவசமாக நீங்கள் மின்சாரம் வழங்க வேண்டுமென்று கைத்தறியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற தொழிலாளர்கள் அந்தக் கோரிக்கையை



வைத்திருக்கிறார்கள். அதையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று இந்த 11 ரகங்கள் இன்றைக்கு கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற ரகங்களை விசைத் தறிகளுக்கு முத்திரை தடை போடாத காரணத்தினால் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. ஆகையினால் கைத்தறிகளுடைய முத்திரையை விசைத் தறிகளுக்கு அளிக்கப்படுவதனால் அவர்களுடைய தொழில் நிறைய பாதிக்கப்படுகிற காரணத்தினால் அதை உடனடியாக தடுக்க வேண்டுமென்று அவர்கள் நிறைய கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுபற்றி அமைச்சரிடத்திலே நேரடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையும் தடுத்து நிறுத்தி அந்தத் தொழிலுக்கு இருக்கிற மரியாதையை நீங்கள் உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பல்வேறு மாநிலங்களில் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய இந்த மின்சாரக் கட்டணம் என்பது 85 பைசா ஆனால் இங்கே 3 ரூபாய் 75 பைசாவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே வந்து தன்னுடைய கைத்தறிகளுக்கு ஆர்டர் வாங்கிக்கொண்டு போய் அங்கே உற்பத்தி செய்து இங்கே வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட பாதிப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் நெசவுத் தொழிலுக்கு வழங்கக்கூடியது போன்று எங்களுக்கும் வழங்க வேண்டுமென்று இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் கைத்தறித் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இந்த வாரிசுதாரர்களுக்கு கொடுக்கக்கூடிய, இறந்து போனால் அந்தக் குடும்பத்திற்கு வழங்கக்கூடிய நிவாரணம் 350 ரூபாய், முறையாக பல மாதங்களாக பணம் இல்லாத காரணத்தினால் வழங்கப்படவில்லை. அங்கே அவர்களுக்கு வழங்கக்கூடிய இடத்தில் கேட்கிறபோது போதுமான நிதி எங்களுக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். இறந்து போனவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வழங்கக்கூடிய அந்த 10 மாதங்களுக்கு அந்தப் பணத்தை, 350 ரூபாயை வழங்க வேண்டும். அதை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே அதை உயர்த்தி வழங்க வேண்டும்.

இரண்டு நாட்களுக்கு முன்னாலே நான் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே உரையாற்றுகிறபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியான ஒரு செய்தியைச் சொன்னார்கள். பட்டுப் புடவைகளை எல்லாம் ஏலத்தில் விற்று அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுடைய கஷ்டத்தைப் போக்க இருக்கிறேன் என்கிற உத்தரவாதத்தினை இந்த மாமன்றத்திலே தந்தார்கள். அதுபோல் இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுடைய கஷ்டத்தை, தொழிலாளர் குடும்பங்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களிடத்திலே ஒரு வேடிக்கையான பழக்கம் என்னவென்று சொன்னால் இந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாது. ஒரு விவசாயி இருக்கிறார் என்று சொன்னால், அவருக்குக்கூட ஒரு துணைத் தொழில், ஒரு உபதொழில், விவசாய காலத்திற்குப் பின்னாலே செய்கிற பழக்கம், வழக்கம் உண்டு. விவசாய காலங்கள் முடிந்ததற்குப் பின்னாலே அந்த விவசாயி தன்னுடைய உழவு மாட்டு வண்டியை வைத்துக்கொண்டு, பக்கத்திலே இருக்கிற நகரத்திற்கு 10 மூட்டை நெல்லை ஏற்றிக்கொண்டு போய் அல்லது 10 மூட்டை காய்கறியை ஏற்றிக்கொண்டு போய் அதிலே 100 ரூபாய் வருமானம் ஈட்டுகின்ற வகையெல்லாம்கூட விவசாயத் தொழிலிலே உண்டு. ஆனால், இந்தக் கைத்தறி நெசவிலே இருக்கிற வேடிக்கை என்ன என்று சொன்னால், கைத்தறி நெசவாளர்களுக்கு வேறு தொழிலே தெரியாது என்கிற ஓர் அடிப்படை உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே, கைத்தறித் தொழிலை நம்பியிருப்பவர்களை நாம் காப்பாற்றுவது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-40

பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே பல்வேறு விதமான சலுகைகளையெல்லாம் அந்த மாநில அரசு கைத்தறி நெசவாளர்களுக்காகத் தந்திருப்பதாக இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்கள் எங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னதைப்போல் மின்சாரத்தை, வெறும் 87 பைசாவிற்கு பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உத்தரவைக்கூட நான் கையிலே வைத்திருக்கிறேன்.



``Category IV cottage industries applicable for supply of energy for bonafide small cottage industries like powerlooms having connected line not exceeding 5 H.P." என்ற ஓர் உத்தரவை ஆந்திரப் பிரதேச மாநிலத்திலே போட்டிருக்கிறார்கள். அதேபோன்ற ஓர் உத்தரவை நம்முடைய தமிழகத்திலே இருக்கிற தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கைத்தறி நெசவாளர்கள் பல்வேறு சங்கங்களிலே கடன் பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கடன் பெற்றவர்கள், அவர்களாலே திருப்பிக் கட்ட முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்குகின்ற வகையிலே, யாரும் செய்ய முடியாத, ஒரு சாதனையாக 311 கோடி ரூபாய் வட்டியை விவசாயிகளுக்காக சலுகை அளித்த முதல்வர் அவர்கள் இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு, இன்றைக்கு எல்லாம் 50 கோடி, 60 கோடி ரூபாய்தான் வரும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்தச் சலுகைகளைத் தரவேண்டும் என நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே கடன் பெற்றிருக்கிறார்கள். கூட்டுறவு நிலவள வங்கி, பள்ளிப்பட்டு, திருவள்ளூர் மாவட்டத்திலே கடன் பெற்றிருக்கிறார்கள். கூட்டுறவு நிலவள வங்கி, திருத்தணியிலே கடன் பெற்றிருக்கிறார்கள். காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை பள்ளிப்பட்டு, இவை போன்ற இடங்களிலே எல்லாம் அவர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். அவர்களாலே கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. குறைந்தபட்சம் எப்படி விவசாயிகளுக்கு வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தீர்களோ, அதேபோன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டங்களை எண்ணிப் பார்த்து அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றுகிற வகையில் இந்தக் கைத்தறி நெசவாளர்கள் பெற்ற கடனுக்கு உரிய வட்டியை, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, கைத்தறித் தொழில் மிக உன்னதமான தொழில், அந்தத் தொழில் மீண்டும் தமிழகத்திலே சிறப்பாக நடைபெற முதல்வர் அவர்கள் உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

உத்திரமேரூர். இத்தொகுதிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடிமுடி தெரியாத என்னை அறிமுகப்படுத்தி சட்டமன்ற உறுப்பினராக்கினீர்கள். தொடர்ந்து என்னை அமைச்சராக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்ன மதி கொண்டோர், குடிலன் குணம் கொண்டோர், சூழ்ச்சி வலை பின்னியவர்கள், ஏற்றிவிட்ட ஏணியை உதைத்தவர்கள், பொய் வழக்குகளைப் போட்டவர்கள், முதலமைச்சராக அமரக் கூடாது என கங்கணம் கட்டியவர்கள், அம்மா அவர்களை சிறைப்படுத்தினால் இவ்வியக்கத்தினை அழித்துவிடலாம் என்று நினைத்தவர்கள் எல்லாம் இன்று கூனிக் குறுகி, முக்காடு போட்டு மூலையிலே உட்கார்ந்த காட்சியையும் காண்கிறோம். இவ்வவைக்கு வரவேண்டியவர்கள் எல்லாம் லாபியோடு வந்துபோகும் நிலையை உருவாக்கிய எங்கள் தாயை வணங்குகிறேன். குன்றுகள் பல கூச்சல் போடும், கோடி கோடியாய் கொள்ளை அடித்து மக்களை ஏமாற்றி, நல்லாட்சி செய்தோம் நாங்கள் என்று சில குள்ளநரிகள் ஓரணி என்று ஊளையிடும். குன்றுகளின் பாச்சா எல்லாம் இனி மக்களிடம் பலிக்காது. ஏனென்றால், அம்மா நீங்கள் சிகரம். எந்த சதிக்கும் அஞ்சாதவர் நீங்கள், எந்தப் படைக்கும் அஞ்சாதவர் நீங்கள், விரோதிக்கும் அஞ்சாதவர் நீங்கள், துரோகிக்கும் அஞ்சாதவர் நீங்கள். ஏன் விடுதலைப் புலிகளுக்கும் அஞ்சாதவர் நீங்கள், வஞ்சகர் பழிக்கும் அஞ்சாதவர் நீங்கள். தாயே தங்களின் பாதம் தொட்டு பணிகிறேன் தாயே.

சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளை எல்லாம் சரித்திரமாக்கிய தலைவி நீங்கள்தான் அம்மா. மக்கள் வேதனைகளைத் தீர்த்து வெற்றிகளைக் குவித்தீர்கள். அகில உலகத்தையே அதிர வைக்கும் உங்கள் முழக்கம், கருத்து கப்பல்களுக்கு நீங்கள் கலங்கரை விளக்கம்.

பிற்பகல் 6-50

சிங்கத்தின் சீற்றமும், சிந்தனை மாற்றமும், தங்கத்தின் தோற்றமும், தரணியாளும் ஆற்றலும் இருப்பதால், பொல்லா மனம் கொண்ட பொறாமைக்காரர்கள், தங்கள் உயர்வைப் பார்த்து பொசுங்கிப் போகிறார்கள். தங்களை நல்லவர்கள் பாராட்டுகிறார்கள்; வல்லவர்கள் பாராட்டுகிறார்கள்; உழைப்பவர்கள் பாராட்டுகிறார்கள்; கல்வியாளர்கள் பாராட்டுகிறார்கள். தாயே! வாழ்ந்தவர்களின் வரலாற்றைப் படித்திருக்கிறேன், தாயே! ஆனால், வரலாறே வாழ்ந்துகொண்டு இருப்பதை நேரில் காண்கிறோம் தாயே! எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், எத்தனை தடைகள் வந்தாலும், எந்த ரூபத்தில் வந்தாலும் தனக்கு வரும் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, மக்களின் நன்மைக்காக புன் சிரிப்புடன் புரட்சித் திட்டத்துடன் தன் அரசியல் பயணத்தை நடத்தி வருகின்ற தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பில் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையின்மேல் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு தங்களின் மேலான கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையினைப் பற்றிப் பாராட்டிப் பேசிய உறுப்பினர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்கள் புதுப்பட்டு உடுத்தினால் எவ்வளவு ஆனந்தம் வருமோ அதுபோல் உங்கள் பாராட்டு எங்கள் துறைக்குப் புத்துணர்ச்சியூட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் இதயத்தில் இடம் அளித்து அவர்கள் கூறிய குறைகளை எந்த மூலையில் தவறு நடந்தாலும் 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாக, அவற்றை உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசுக்கு இக்குறிப்புகள் பேருதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, கைத்தறியாய் இருந்தாலும் என் துறைக் கொள்கைகளை விசைத்தறி போலே அவையின் முன் வேகமுடன் நெய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'செய்யும் தொழிலை சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை காண்'

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம்
225164.
சென்னை-600 009

வந்தனர். இதய தெய்வம் அம்மா ஆட்சியில் 31-3-2002 முடிய சுமார் 8,207 பயனாளிகள் பயனடைந்து உள்ளார்கள் என்று மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நெசவாளர்கள் நல்வாழ்வு செறிவுத் திட்டம்:** நெசவாளர் நெசவுத் தொழிலினால் ஏற்படக்கூடிய நோயிலிருந்து காப்பாற்றக்கூடிய அடிப்படை வசதிகளுடன் கூடிய நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ் மருத்துவ செலவிற்காக வருடம் 1 முறை ரூபாய் 1,500-ம், கண் பரிசோதனை மற்றும் கண் கண்ணாடி வாங்குவதற்கு ரூபாய் 190-ம், பெண்களுக்கு பேறுகால உதவியாக ரூ.500-ம் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதற்கு ஊக்கத் தொகையாக ரூ.100-ம் இதுவரை மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது. நெசவாளர் மீது அக்கறை கொண்டுள்ள அம்மா அவர்கள் மேற்கண்ட தொகைக்கு இணையாக மாநில அரசும் வழங்கும் என ஆணையிட்டு அது செவ்வனே நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் எம்.ஜி.ஆர். நல்வாழ்வு அறக்கட்டளை:** நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுத் தொகை, கல்வி உதவித் தொகை நெசவாளர்களின் மேல்நிலைக் கல்வி பயில்வதில் ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 80 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இந்த நெசவாளர் குடும்பத்தில் உள்ள மாணவர்களுக்கு M.D., M.S., M.Tech., மற்றும் Hotel Management போன்ற மேற்படிப்புக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7-00*

சிறந்த நெசவாளர்களுக்கும், சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கும் பரிசு வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகின்றது. நெசவாளர்களை இத்துறையில் ஊக்குவிப்பதற்கும் தனது திறமைகளை வெளிப்படுத்துவதற்கும், புத்தம் புது வடிவமைப்புகளை உருவாக்குவதற்கும், மக்கள் ரசனைக்கு ஏற்ப பல வண்ணங்களிலே ஆடைகள் நெய்வதற்கும்



ஊக்குவிக்கும் வகையில் இப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதிகமாக கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கும் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது என்பதனை இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட்.:** இந்த சரிகை ஆலை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையிலே தரமான சரிகை வழங்க நிறுவப்பட்ட நிறுவனமாகும். 2001-2002-ஆம் ஆண்டு இந்த ஆலை, தோராயமாக 64.30 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2000-2001-ஆம் ஆண்டில் ரூ. 45.83 இலட்சங்கள் மட்டுமே இலாபம் ஈட்டியுள்ளது. தி.மு.க. ஆட்சியைவிட, அம்மாவின் ஆட்சியில் இந்த ஆலை தோராயமாக ரூ. 18.47 இலட்சங்கள் அதிகமாக இலாபம் ஈட்டியுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆலையின் மூலமாக அரசு பங்கு மூலதனத்திற்கு ஈவுத் தொகை செலுத்தி வருகிறது. இவ்வாலை ஈட்டிய இலாபத்திலிருந்து, 35 சதவீத ஈவுத் தொகையாக, ரூபாய் 12.04 இலட்சங்கள் அரசுக்கு வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவையில், தங்களின் வாயிலாக தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்தார்கள். தமிழகத்தில் கைத்தறித் துணிகளின் விற்பனையில் தேக்க நிலையினைப் போக்க வேண்டியதன் அவசியத்தை பல்வேறு உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இந்தத் தேக்கத்திற்கு யார் காரணம் என்பதையும் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் ஏழை நெசவாளப் பெருமக்களுக்கு இழைத்த மாபெரும் துரோகத்தினையும் இம் மாமன்றத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவுத் தொழில் தெரியாத போலி உறுப்பினர்களை அச்சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்கள் நாற்காலியில் அமர வேண்டும் என்பதற்காக, தலைவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக, அரசாங்கப் பணத்தை தவறான வழியிலே பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, அவர்கள் பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்பதற்காக, சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக, போலி உறுப்பினர்களைக் கைத்தறிச் சங்கங்களில் சேர்த்து பல்வேறு தவறுகளைச் செய்துள்ளார்கள்.

உதாரணத்திற்காக, இங்கே மாண்புமிகு காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் பேசியபோதுகூட சொன்னார்கள். காஞ்சிபுரம் சங்கத்திலே பல்வேறு போலி உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார்கள் என்பதை இங்கே

இந்தத் தேக்கத்திற்குக் காரணம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, இந்த 2001-2002ஆம் ஆண்டில், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்களை அழைத்து, பல்வேறு ஆலோசனைகளைக் கூறி, மக்கள் ரசனைக்கு ஏற்ப, நீங்கள் அந்தச் சேலைகளை உற்பத்தி செய்யவேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். அதன் அடிப்படையிலே, இந்த ஆண்டு, 2001-2002 ஆம் ஆண்டில் மட்டும், சுமார் 97 கோடியே, 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டு, அந்த உற்பத்தி செய்யப்பட்ட சேலைகளிலே 60 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்து, இன்றைக்கு 62 விழுக்காடு அளவிற்கு, துணிகள் தேக்கமின்றி விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால், தேங்கியுள்ள துணிகளையெல்லாம், இதய தெய்வம் அம்மா அவர்கள் விற்பனையை அதிகரிக்க பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதன் அடிப்படையிலே, இப்போது பழைய தேக்கத்திலிருந்த துணிகளில், சுமார் 10 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையாகி உள்ளன என்பதையும் இந்த நேரத்திலே நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்புள்ளிவிவரங்கள் மூலமாக, கடந்த கால தி.மு.க. ஆட்சியாளர்கள் திட்டமிட்டு உற்பத்தியை மேற்கொள்ளாததால், அவர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டினால், சங்கத்தினால் தங்களுக்கு எவ்வளவு இலாபம் என்று எதிர்பார்த்தார்களே தவிர, ஏழை நெசவாளர்களின் குடும்பங்களின் துயர் துடைக்க மறந்து செயல்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டது. என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 7-10*

இதய தெய்வம் அம்மா அவர்களின் முந்தைய ஆட்சியின்போது, தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே 851 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வந்தன. ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டினால், 320 கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இலாபத்தில்



இயங்கி வந்தன. அதுமட்டுமல்லாமல், இதய தெய்வம் அம்மா அவர்கள், மீண்டும் ஆட்சி அமைத்த பிறகு எடுக்கப்பட்ட முயற்சிகளினாலும், நிர்வாகத் திறமையினாலும், இப்போது 338 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2001ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சியில், நட்டத்தில் இயங்கிய சங்கங்களின் எண்ணிக்கை 865 ஆகும். கடந்த கால தி.மு.க. ஆட்சியின்போது, நிர்வாகக் குழுக்கள் செய்த பல்வேறு ஊழல்களுக்காக, 96 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் இருப்புக் குறைவு மற்றும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, முழு மூச்சில் விசாரணை நடைபெற்று வருகிறது. மேற்கண்ட ஊழல் குற்றத்திற்காக சம்பந்தப்பட்டவர்கள்மீது, விசாரணை அடிப்படையில், குற்றவியல் மற்றும் சிவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்தகால தி.மு.க. ஆட்சியின் ஊழலையும், அவர்களின் நிர்வாகச் சீர்கேட்டினையும், அரசு பணத்தினை வீணாக விரயம் செய்த விவரத்தினையும், இம்மாமன்றத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியது போல, “தவறு என்பது தவறிச் செய்வது, தப்பு என்பது தெரிந்து செய்வது; தவறு செய்தவர்கள் திருந்தப் பார்க்கணும்; தப்பு செய்தவர்கள் தண்டனையை அடைந்தேயாகணும்” என்பற்கு இணங்க, தி.மு.க. ஆட்சியில் தப்பு செய்திருக்கிறார்கள். அதுவும் தெரிந்தே செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அவர்கள் தண்டனைக்கு உள்ளாகும் காலம், வெகு தொலைவில் இல்லை என்பதனை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில் நடந்த ஒரு முறைகேட்டினை, இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இந்த பட்ஜெட்டிலே விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது; பல்வேறு நிலையிலே விலைவாசி ஏற்றம் அடைந்துள்ளது என்று கூறியிருந்தார்கள். ஆனால், கடந்தகால தி.மு.க. ஆட்சிக்கும், இன்றைய எங்களுடைய அம்மா ஆட்சியினுடைய நிலைமைக்கும் உள்ள வேறுபாட்டை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முந்தைய ஆட்சிக் காலத்திலே, இலவச வேட்டி சேலை

ரூ. 92 கோடி அளவிற்கு மட்டுமே ஏற்றுமதி செய்துள்ளார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, தன்னுடைய நிர்வாகத் திறமையினால், 2001-2002ஆம் ஆண்டில் சுமார் ரூ. 125 கோடி அளவிற்குக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, சுமார் 146 கோடியே 25 லட்சம் ரூபாய்க்குத் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாண்டில் அம்மாவின் அரசினால் ஏற்றுமதி விற்பனைக்குச் சுமார் ரூ. 175 கோடி குறியீடு நிர்ணயித்து திட்டமிடப்பட்டு உள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, பல்வேறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேக்கம் அடைந்துள்ள பட்டு மற்றும் பருத்தித் துணிகளை விற்பனை செய்வதற்காக, ஓர் ஆண்டு மற்றும் ஈராண்டிற்குமேல் இருப்பிலுள்ள பட்டுத் துணிகளை விற்பனை செய்வதற்கு, முறையே 45% மற்றும் 55% சிறப்புக் கழிவு வழங்கியும், பருத்தித் துணிகளுக்கு 30% மற்றும் 45% சிறப்புக் கழிவு வழங்கியும் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதையும், சென்னை, தி.நகர், புரசைவாக்கம், மயிலாப்பூர், வண்ணாரப்பேட்டை, அண்ணாநகர் போன்ற இடங்களிலே சேலம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு உட்பட முக்கியத்துவம் வாய்ந்த 20 இடங்களில் துறை மூலமாகவும் சிறப்புக் கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக, கைத்தறித் துணிகளை விரைந்து விற்பனை செய்து நெசவாளர்களின் துயர் துடைக்கும் அரசாக அம்மாவின் அரசு இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7-20*

நெசவாளர் வீடு கட்டும் திட்டம்: 1998-99 ஆம் ஆண்டுக்கான வீடு கட்டும் திட்டத்தில், ஒதுக்கீடு செய்யப்பட்ட 920 வீடுகள் மற்றும் 1996-97-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் 28 வீடுகள் ஆகியவற்றிற்கு கடந்த 4 ஆண்டுகளாக HUDCO கடன் பெறுவதற்கான அரசு உத்தரவாதம் Government guarantee வழங்கப்படாமல் இருந்தது. இதனால் மேற்குறிப்பிட்ட வீடுகள் முழுவதும் கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாகவே பல்வேறு நிலைகளிலே இருந்து வந்தன. கடந்தகால தி.மு.க. ஆட்சியினால் அரசு உத்தரவாதம்கூட தரமுடியாத நிலையிலே அவர்கள் ஆட்சி இருந்தது. தற்போது, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், நெசவாளர் துயர் துடைக்கும்வண்ணம் மேலே



குறிப்பிட்ட வீடுகளை விரைந்து கட்டி முடிப்பதற்காக அரசு உத்தரவாதம் Government guarantee வழங்கி, ஏப்ரல் 2002-லே ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட அரசு உத்தரவாதம் மூலம் ரூபாய் 379.20 இலட்சம் மதிப்புக்கு HUDCO மூலம் கடன் பெற்று, கடந்தகால தி.மு.க. ஆட்சியிலே Government guarantee -கூட கொடுக்க முடியாத அந்த நிலையிலே இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு, அந்த நெசவாளர்களுக்காக இப்போது ரூ.379.20 இலட்சம் மதிப்புக்கு HUDCO மூலம் கடன் பெற்று வீடுகள் விரைந்து கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள், உண்ண உணவு, உடுக்க உடை இருந்தால் மட்டும் நெசவாளர் பிரச்சினை தீர்ந்துவிடாது என்று எண்ணி, அந்த ஏழை நெசவாளர் தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதைப்போல் 'உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே' என்ற தத்துவத்திற்கு இணங்க, அந்த ஏழை நெசவாளர்களுக்கு இந்த ஆண்டு 550 தறிக் கூடத்துடன்கூடிய வீடுகள் கட்டிக்கொடுக்க, இதய தெய்வம் அம்மா அவர்கள் 2 கோடியே 52 இலட்சம் ரூபாயை தாராள மனம் கொண்ட அம்மா அவர்கள், ஏழை நெசவாளர்களின் ஏற்றமிக்க வாழ்க்கைக்குத் துணை செய்ய, இந்த நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'கோ-ஆப்டெக்ஸ்'—தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கம், 1935-லே நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே, கைத்தறித் துறையின்கீழ் இயங்கிவரும் தாய் சங்கமாகிய 'கோ-ஆப்டெக்ஸ்' தனது அங்கத்தினர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை, நாடு முழுவதும் பரவியுள்ள 268 விற்பனை நிலையங்கள் மூலமாக, விற்பனை செய்து வருகிறது. பிரதம சங்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தியில் 'கோ-ஆப்டெக்ஸ்' 40 முதல் 50 விழுக்காடு வரை கொள்முதல் செய்து, பரந்து விரிந்துள்ள தனது சில்லறை விற்பனை நிலையங்கள் வாயிலாக, விற்பனை செய்கிறது.

"சின்ன சின்ன இழை பின்னிப் பின்னி வர
சித்திர கைத்தறி சேலையடி
நம் தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் சேலையடி"

என்று சொன்ன பட்டுக்கோட்டையார் பாடலுக்கேற்ப, நாம் உடுத்துகின்ற புடவைகள் காலத்திற்கேற்ப, கைவண்ணம் மிகுந்த அழகிய வடிவுங்களில், மக்கள் விரும்புகிற இரகங்களிலே, புதுமையை விரும்பும் பூவையர் மத்தியில்

இந்தச் சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்ட 9.2 சதவிகித கலால் வரியை நீக்க, பாரதப் பிரதமர் அவர்களுக்கு, முதன்முதலாக கடிதம் அனுப்பியது, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தவருக்கு அழகான ஆடைகள், உடைகள் நெய்து கொடுத்து, தான் மட்டும் நெய்த நூலைவிட, தைத்த நூலே அதிகம் என்று சொல்லும்படி ஆடை உடுத்தி வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான நெசவாளர் குடும்பத்தில், ஒளி விளக்கு ஏற்றிவைத்து, அவர்கள்தம் உள்ளங்களிலே தெய்வமாய் வாழும் ஒப்பற்ற தலைவியாக அம்மா அவர்கள், சங்கத்திலே தமிழ் வாங்கி, தங்கத்திலே எழுதி வைக்கும் வகையிலே, நாட்டில் நல்லாட்சி கண்டு, கார் மேகத்திற்கும் கருணையைக் கற்றுக் கொடுக்கும் கருணைத் தாய் நீங்கள்; உங்கள் காலத்தில் வறுமையில் வாடும் நெசவாளர் குடும்பங்கள் செழிப்படையும்; பட்டினியில் வாடும் நெசவாளர் குடும்பங்களுக்குக் காக்கும் கடவுளாக அம்மா, நீங்கள் இருக்கிறீர்கள் என்ற எண்ணத்தில் என் உரையை முடிக்கிறேன்.

அறிவிப்புகள்—(1) மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து, வருவாய் ஈட்டும் வகையில், 5 ஆயிரம் மகளிர் நெசவாளர்களுக்கு தையல் மற்றும் இதர வேலை வாய்ப்புகளுக்கான பயிற்சி அளிக்கப்படும். மைய அரசின் உதவியுடனும், மாநிலத்தின் சமூக நலத் துறையின் மேற்பார்வையுடனும், தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டமாக இப்பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மகளிர் நெசவாளர்கள் பெருவாரியாக இருக்கின்ற ஆண்டிப்பட்டி மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகள் மற்றும் தென் மாவட்டங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-30

(2) பாரம்பரியமான விசைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக இரண்டு விசைத்தறிகள் வரை சொந்தமாக வைத்துள்ளவர்களின் விசைத் தறிகள் ரூ. 10,000/- செலவிலே நவீனப்படுத்தப்படும். இதில் ரூ. 2,000/-, விசைத்தறி பதிவு நிதியிலிருந்து மானியமாகவும், எஞ்சிய தொகையினை நெசவாளர்கள் தமது பங்காகவும் செலுத்துவார்கள். மாநிலம் முழுவதுமுள்ள விசைத்தறி நெசவாளர்கள், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.



(3) தற்போது, வெளிச் சந்தையில் நிலவி வரும் ஆயத்த ஆடைகளுக்கான வரவேற்பைக் கருத்தில்கொண்டும், 2005 ஆம் ஆண்டிலிருந்து உலகச் சந்தையில் நம் நாடு, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிடையே போட்டி போடக்கூடிய ஒரு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், தமிழகத்தில் இரண்டு "ஆயத்த ஆடை பூங்காக்கள்" உருவாக்கப்படும். மைய அரசினுடைய 75 சதவிகித நிதி உதவியுடன் அமைய இருக்கும் இந்த இரண்டு பூங்காக்கள், ஒன்று, சென்னைக்கு அருகிலும், மற்றொன்று மதுரைக்கு அருகிலேயும் அமைக்கப்படும். இந்த இரண்டு பூங்காக்களும் ரூ. 48 கோடி செலவில் 200 தொழில் முனைவோரால் 20,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையிலே செயல்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தமிழகத்தில் நெசவுத் தொழில் மையங்களான காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் நகரங்கள், பெருமளவில் பயன்பெறத்தக்க அளவிலே ரூ. 80 கோடி செலவிலே ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும். இதற்காக, மைய அரசின் நிதி 50 சதவிகிதம் பெறப்படும். மீதி 50 சதவிகித உதவி, கால முறைப்படி மாநில அரசால் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) கைத்தறி நெசவாளர்கள் தமது வருவாயைப் பெருக்கிட உதவியாக, வடிவமைப்பு மற்றும் ஆடை அலங்கார தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்குத் தேவைப்படும் நிதியான ரூ. 7 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய நிதியிலிருந்து பெறப்படும். இத்திட்டத்தின்கீழ் பயனடைய 1000 நெசவாளர்கள் தமிழகமெங்கிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மூலம் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, நடப்பாண்டு முதல் பல் மருத்துவக் கல்லூரியில் பயிலும் நெசவாளர்களின் இரு குழந்தைகளுக்கு தலா ரூ. 3000/- வீதம் ரூ. 6000/- வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, ஆந்திர மாநிலம், வேங்கடகிரி மற்றும் கர்நாடகா மாநிலம் கடக் நகரில் உள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பக் கல்லூரிகளில் தமிழகத்தைச் சேர்ந்த

*1. ராஞ்சி (ஜார்கண்ட் மாநிலம்), 2. டேராடூன் (உத்ராஞ்சல் மாநிலம்), 3. ராய்பூர் (குறுக்கீடு) டேராடூன் என்றுதான் சொன்னேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஊர்தான், எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** *3. ராய்பூர் (சத்தீஸ்கர் மாநிலம்) மற்றும் 4. போபால் (மத்திய பிரதேச மாநிலம்).*

(18) இதுவரையில் மக்கள், சந்தையில் உள்ள சேலைகளில் பிடித்ததை தேர்ந்தெடுத்து வாங்கி வந்தனர். வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்பவும் மற்றும் தேவைக்கேற்பவும் அமையும் வகையிலே தங்களின் சேலைகளை தாங்களே வடிவமைக்கும் திட்டத்தினை கோ-ஆப்டெக்ஸ் நடப்பு நிதியாண்டில் அறிமுகப்படுத்துகிறது. சென்னையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் உள்ள கணினி வடிவமைப்பு மையத்திற்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையான வடிவமைப்புகளை வடிவமைக்கலாம். வருங்காலத்தில் இந்த வசதி மதுரை மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

(19) வளர்ந்துவரும் போட்டிகளிடையே, மக்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பலவித வண்ணங்களில், புதிய வடிவமைப்புகள் பொருந்திய தயாரிப்புகள் என்பது இன்றைய முக்கிய தேவை. இதனைக் கருத்தில்கொண்டு தேசிய அலங்கார ஆடை வடிவமைப்பு நிறுவனம், சென்னை மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம், அஹமதாபாத்/ பெங்களூர் உதவியோடு வண்ணமிகு பட்டு மற்றும் பருத்தி சேலைகளில் புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

(20) அரசின் ஆணைக்கேற்ப கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இப்போது விசைத்தறி துணிகளையும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. பலவிதமான துணிவகைகளை தேவைகளின் அடிப்படையில், சில்லறை விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு, விசைத்தறி துணிகளை விற்பனை செய்ய பிரத்தியேக விசைத்தறி விற்பனை நிலையம் ஒன்று சென்னை மாநகரில் ஆரம்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் என்னுடைய கருத்துகளை முடிந்த அளவிற்கு எடுத்துரைத்து இருக்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள் தந்த மாண்புமிகு



மாமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, கொஞ்சம் டைம் கொடுங்கள். ஒரு Clarification கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய விளக்கம் சொல்லிவிட்டார். இல்லை. எஸ்.ஆர்.பி. கேட்கட்டும்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை பற்றி அமைச்சர் எதுவுமே சொல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது. தமிழ்நாட்டிலே அமைச்சர் கொடுத்து இருக்கிற கணக்குப்படி பதிவு செய்த விசைத்தறிகள் 3,25,000 இருக்கின்றன. ஆனால் அந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே கொடுத்து இருக்கிற கணக்கு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. எப்படி இருந்தாலும், மஹாராஷ்டிராவிற்குப் பிறகு அடுத்தபடியாக மிக அதிகமான அளவிற்கு தமிழ்நாட்டிலேதான் விசைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். விசைத்தறிகள் இங்கே அதிகமாக இருக்கின்றன. இந்த விசைத்தறி நெசவாளர்கள், குறிப்பாக, கோவை மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர் சங்கம் கடந்த 22ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்து வருகிறது. அவர்களுக்கு மின் கட்டண உயர்வினால் நெய்வது கட்டுப்படி ஆகவில்லை எனக் கூறி கடந்த 12, 14 நாட்களாக வேலை நிறுத்தத்தை செய்து வருகிறார்கள். அந்த வேலை நிறுத்தத்தாலே பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கின்ற அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள், சைசிங் தொழிலாளர்கள், விசைத்தறி தொழிலாளர்கள், பிரிண்டிங், டையிங், பிளீச்சிங் தொழிலாளர்கள், பேக்கிங் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள், ஜவுளி முடிக்கும் தொழிலாளர்கள், வண்டி, வாகன தொழிலாளர்கள் என்று பலதரப்பட்ட நடுத்தர மற்றும் அரிஜன மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற துறையிலே பல லட்சம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கும் ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. அரசுக்கு அந்நியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கிறது. இங்கே இதுகாறும் குறைவாக இருந்த மின் கட்டணம் இப்போது 3 ரூபாய்க்கு அதிகமாக வசூலிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? ஞானசேரகன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் அரியூர் கூட்டுறவு நூற்பாலை, 1996-இல் மூடப்பட்டுவிட்டது. சென்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைப்பற்றியெல்லாம் தனியாகப் பேசுவோம்.

*விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 16—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், பிறகு. தனியாகக் கொடுங்கள். இப்போது உடனே அமைச்சரிடம் கேட்டால், எப்படி பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.*

*பிற்பகல் 7-45*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Policy Note-ல் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவு நூற்பாலை...(குறுக்கீடுகள்) இந்த மாதிரி கத்துவதனால் நீங்களே நடத்திக் கொள்ளுங்கள் சார். (குறுக்கீடுகள்) இதைக்கூடப் பேசவிடவில்லை என்றால் what right we have got now?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள்?

**THIRU C. GNANASEKARAN:** All ruling party people, they are going on attacking me like this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள், என்ன சொல்லுங்கள்?

**THIRU C. GNANASEKARAN:** They must keep some silence. Otherwise, how could we even tell our point?

**திரு. கா.பூ. முனுசாமி:** Point of order *(குறுக்கீடு).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் சொல்லி முடிக்கட்டும்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவு நூற்பாலையை வேலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துக்கொண்டு, கட்டடத்தையும், நிலத்தையும் பயன்படுத்தலாம் என்று முதலிலே ஒரு கொள்கை முடிவு எடுத்து, பிறகு அது Societies Act -ல் வருகிறது என்ற காரணத்தால், கூட்டுறவுச் சங்கத்தைக் கலைப்பதற்காக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அரசு மருத்துவக் கல்லூரிக்கு அந்த இடம் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டுவிட்டதாக காலையிலே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் file-ஐ clear செய்துவிட்டார்கள், அந்த இடம் கடனில் இருக்கிறது, அது வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டதாகச் சொன்னார்கள். ஆகவே, இப்போது அது அரசு மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துக்கொள்ளப் போவதில்லை. இந்த நிலையில், இந்தக் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் அந்த இடத்திலே தொடங்க அரசு முன்வருமா அல்லது வேறு ஏதாவது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த வேலூர் கூட்டுறவு நூற்பாலை 1-11-1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதனுடைய நிறுவப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அவர்களே, அந்த இடத்தை திரும்ப நீங்களே எடுத்துக்கொள்கிறீர்களா இல்லையா என்றுதான் அவர் கேட்கிறார். உங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால், பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(உ) கோரிக்கை எண். 16 கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல்.

[2002 மே 6

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

158. 2000-2001 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

310. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

311. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. (2001-2002)

312. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

313. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2001-2002)

314. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2001-2002)

315. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2001-2002)

316. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

317. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2001-2002)

318. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2001-2002)

319. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2001-2002)

320. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)



2002 மே 6]

321. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2001-2002)

322. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

323. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

324. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

325. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2001-2002)

326. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

327. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2001-2002).

328. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002).

329. மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002)

330. மனுக்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

331. மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002).

332. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

333. கால்நடை பராமரிப்பு குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

2002 மே 6]

# இணைப்பு-I

*(573ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண்-18

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

## அத்தியாயம்-I

**முன்னுரை**

"தமிழக மக்களின் வறுமையைக் களைந்திடவும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் அவர்தம் இல்லங்களுக்கு அனைத்து சுகாதார வசதிகள் தங்கு தடையின்றி அளித்திடவும் உறுதி பூண்டுள்ளேன்."

**டாக்டர் ஜெ ஜெயலலிதா,**
தமிழக முதல்வர்.

வளமான வாழ்க்கைக்கு நலமான வாழ்வே அடிப்படைத் தேவையாகும். சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு நல்வாழ்வே அடிக்கல்லாக அமையும். மேலும், எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, நடுநிலை நேர்மை இலக்கு, திறமை, தரம் மற்றும் நுகர்வோரின் மனநிறைவு ஆகியவையே ஆற்றல்மிக்க பயனுறுதியுள்ள சுகாதார வசதித் திட்டத்தினை நிர்ணயிக்கும் அளவுகோல்கள் ஆகும். எனவே, மேலே வரையறுக்கப்பட்டுள்ள நோக்கத்தின் அடிப்படையில் விரிவான சுகாதார வசதிகளைத் தமிழக மக்கள் அனைவருக்கும் ஏற்படுத்தித் தருவதே தமிழக அரசின் முதன்மையான குறிக்கோளாகும்.

2. பல்நோக்கு அணுகுமுறை மூலம் தரமான சுகாதார வசதிகளை மக்களுக்கு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த அணுகுமுறை மூலம் ஏற்கெனவே உள்ள கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் தொண்டினை மக்கள் பெருமளவில் பயன்படுத்தவும், மேலும் வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் தனியார் பங்கேற்பினை ஊக்குவிக்கவும், மக்களுக்கு மாற்று மருத்துவ சிகிச்சை வசதிகளை ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்படும். தற்போது தமிழ்நாட்டில் 8682 துணை சுகாதார நிலையங்களும், 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 79 வட்டம் சாரா மருத்துவமனைகளும், 162 வட்ட மருத்துவமனைகளும்,

[2002 மே 6

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு, கோரிக்கை எண் 18-ன்கீழ் 2002-2003 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1264.05 கோடி தொகையின் விவரம் வருமாறு:-

(ரூ. கோடியில்)

| மானியம். (1) | திட்டத்தில் சேராதது. (2) | மாநிலத் திட்டம். (3) | திட்டப்பணிகள் மத்திய அரசு பொறுப் பேற்பவை. (4) | திட்டப்பணிகள் மத்திய அரசின் நிதி உதவி பெறுபவை.. (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் | 908.51 | 64.65 | 215.81 | 68.28 | 348.74 |

(ரூ. கோடியில்)

| மானியம். (1) | திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது. (7) | திரும்ப வசூலிக்கப் பட்டவை கூட்டப்பட வேண்டியது. (8) | மொத்தம். (9) |
|---|---|---|---|
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் | 1257.25 | 6.80 | 1264.05 |

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் உள்ள பல்வேறு இயக்ககங்களுக்கு கோரிக்கை எண் 18-ன்கீழ் 2002-2003 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 324.43 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் | 25423.66 |
| 3. | மருத்துவக் கல்வி இயக்ககம் | 38904.27 |
| 4. | பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் | 42045.49 |
| 5. | குடும்ப நல இயக்ககம் | 11445.14 |
| 6. | மருந்து கட்டுப்பாடு இயக்ககம் | 459.25 |
| 7. | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 4660.63 |
| 8. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை | 817.33 |
| 9. | டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்டம் | 639.72 |
| 10. | பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் | 1685.21 |
| | மொத்தம் | 126405.13 |



2002 மே 6]

குறிப்பு:

1. அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களுக்காக ரூ. 39.35 கோடி பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கை எண் 38-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
2. ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்கென ரூ. 88.11 கோடி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை எண் 31-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.
4. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் மற்றும் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

[2002 மே 6

| | மொத்த கல்லூரிகள் | மொத்த இடங்கள் |
|---|---|---|
| ஐ.ஆர்.டி. (தமிழ்நாடு அரசு நிறுவனம்) | 1 | 60 |
| மருத்துவக் கல்லூரிகள் | 5 | 510 |
| பல் மருத்துவக் கல்லூரிகள் | 10 | 440 |
| மருந்தாக்கியல் கல்லூரிகள் | 34 | 1690 |
| இயன்முறை மருத்துவம் | 40 | 1880 |
| செவிலியர் (பட்டப் படிப்பு) | 36 | 1602 |
| தொழிலிய நோய் மருத்துவம் | 6 | 300 |

**தேர்வு முறை**

மருத்துவம்/பல் மருத்துவம்/செவிலியர்/இயன்முறை மருத்துவம்/பி.ஓ.டி./ மருந்தாக்கியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு, மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு வருடமும் அரசின் கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, எம்.டி.எஸ். (முதுநிலை பல் மருத்துவம்), உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்கு பொது நுழைவுத் தேர்வினைத் தொடர்ந்து கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால் மாணவர்கள் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்) இடங்களுக்கும் தகுதி அடிப்படை (+2 மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால் மாணவர்கள் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி தேர்வு செய்யப்படுகிறார்கள்.

கிராமப்புற மாணவர்களுக்கு அதிக வாய்ப்பு அளிக்கும் வகையில், கிராமப் பஞ்சாயத்தில் அமைந்துள்ள பள்ளிகளில் மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு படித்து முடிக்கும் மாணவர்களுக்கு மருத்துவம்/பல் மருத்துவம்/மருத்துவம் சார்ந்த படிப்புகளில் உள்ள இட ஒதுக்கீட்டை 15 விழுக்காட்டிலிருந்து 25 ஆக அரசு உயர்த்தி உள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 255 மாணவர்கள் இதன்மூலம் பயனடைந்தார்கள். இந்த இடஒதுக்கீடு செல்லாது என்று உயர் நீதிமன்றம் 5-2-2002 நாளிட்ட ஆணையில் தீர்ப்பளித்துள்ளது. இதனை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



2002 மே 6]

பட்டம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு விண்ணப்பம் இலவசமாக வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 8586 மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.

தேர்வுகளில் முதல் பத்து இடங்களில் தேர்வுபெறும் பட்டதாரி இல்லாத குடும்பத்தைச் சார்ந்த 10 மாணவர்களின் படிப்புச் செலவை அரசே ஏற்றுக்கொள்கிறது. இதன்மூலம் 2001-2002 ஆம் ஆண்டு வரை 120 மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.

**மனநலப் பாதுகாப்பு**

ஏர்வாடியில் ஏற்பட்ட தீ விபத்தின் விளைவாக, மனநோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதிகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துள்ளது. ஏர்வாடியிலுள்ள அனைத்து மனநோயாளிகளுக்கான மனநலக் காப்பகங்கள் மூடப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள மனநோயாளிகள், தங்கி இருந்த இடங்களைப் பார்வையிட்டு சங்கிலியால் கட்டப்பட்டிருந்த மனநோயாளிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டார்கள். மனநோய் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை அளிக்கும் இல்லங்களுக்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு, அவற்றுக்கு உரிமம் வழங்கும் நடவடிக்கை தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28 மன நல நோய் சிகிச்சை இல்லங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மனநோய் தொடர்பான பணிகளை மேற்பார்வையிடவும் மற்றும் ஒருங்கிணைப்பு செய்யவும் மாவட்ட மனநல நோய் ஆய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட மன நலத் திட்டம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் மதுரையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள அரசு மனநல நிலையத்தில் தண்ணீர் வசதியை மேம்படுத்துவதற்கு மேல்நிலை தண்ணீர்த் தொட்டி கட்டக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள சமையல் அறை, சலவை மற்றும் சில வார்டுகள் நவீனப்படுத்தப்பட உள்ளன. ரூ. 40 இலட்சம் செலவில் குடும்ப சிகிச்சை வார்டு கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலேயே இது திறக்கப்படும்.

**கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம்**

கிண்டியிலுள்ள கிங் நோய்த் தடுப்பு நிறுவனம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் சீரம் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும்

[2002 மே 6

4. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு ராஜா மிராசுதாரர் மருத்துவமனை, தஞ்சாவூர் ஆகிய மருத்துவமனைகளில் ரூ. 90 இலட்சம் செலவில், மார்பகப் புற்று நோய் கண்டுபிடிக்கும் சாதனம் (Mammography Units) நிறுவப்படவுள்ளது.

5. சென்னையில் உள்ள அரசு மனநலக் காப்பகத்தின் உள்நோயாளிகளுக்கு தற்போது உணவு வழங்குவதற்கு நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 9.64-லிருந்து ரூ. 13.70 ஆக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 26.67 இலட்சம் செலவாகும்.

6. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில், இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள 207 நிலையங்களிலுள்ள நூலகங்களுடன் தொடர்புகொள்வதற்காக ரூ. 8.5 இலட்சம் செலவில் மின்னணு நூலகம் ஏற்படுத்தப்படும்.

## அத்தியாயம் 3

### மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்

25 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 162 வட்ட மருத்துவமனைகள், 79 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள் வாயிலாக, மருத்துவ வசதிகளை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் அளித்து வருகிறது. காசநோய்த் தடுப்பு, மனநலம், எச்.ஐ.வி. மற்றும் இரத்த வங்கி போன்ற பல்வேறு மருத்துவப் பணி திட்டங்களை இந்த இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் முதலாம் மேல்சிகிச்சைப் பிரிவுகளாகவும், 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், இரண்டாம் கட்ட மேல்சிகிச்சைப் பிரிவுகளாகவும் செயல்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட தலைமை மருத்துவமனை, மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் திட்டங்களை நிறைவேற்றுதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது. சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் குடும்பநலம் உள்ளிட்ட அனைத்து மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணித் திட்டங்களின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பு, அந்தந்த மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை



2002 மே 6]

இயக்குநர்களைச் சார்ந்ததாகும். கண்ணொளி இழப்புத் தடுப்பு, எய்ட்ஸ் நோய்த் தடுப்பு, மலைப் பகுதி மேம்பாடு திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம் போன்ற திட்டங்களை இதர துறைகளுடன் ஒருங்கிணைந்து இந்த இணை இயக்குநர்கள் செயல்படுத்துகிறார்கள்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் மொத்தம் 21,389 படுக்கை வசதிகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு சராசரியாக உள் நோயாளிகளின் எண்ணிக்கை 17,315 ஆகவும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை 1,69,800 ஆகவும் உள்ளன.

### 1. பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம்

1994 ஆம் வருடத்திய பிறப்பிற்கு முன் கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப முறை (வரன்முறை மற்றும் தவறான பயன்பாட்டினைத் தடுத்தல்) சட்டம், தமிழ்நாட்டில் 1-1-1996 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தினைச் சிறப்பான வகையில் செயல்படுத்த, மாநில, மாவட்ட, வட்டார அளவில், ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர்கள், மற்றும் வட்டார மருத்துவமனைகளின் முதுநிலை மருத்துவ அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் இச்சட்டத்தை அமலாக்கும் அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இச்சட்டத்தின்கீழ் இதுவரை 1625 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தீவிர கண்காணிப்பின் பலனாக, 61 பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் சட்டப்படி கையகப்படுத்தப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத 6 ஸ்கேன் மையங்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### II. மாவட்ட மனநல மருத்துவத் திட்டம்

மனநலமின்மை குறிப்பாக, ஊரகப் பகுதிகளில் எளிதில் விளைவுகளையும், தலையீடுகளையும், உருவாக்கக் கூடிய ஒன்றாக அமைவதால், மனநலமின்மை பொது சுகாதாரத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ளது. எனவே, மாவட்ட மனநல மருத்துவத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. திட்டச் செலவு ரூபாய் 1 கோடி ஆகும். திட்டத்தின் கால அளவு ஐந்தாண்டுகளாகும். சமுதாயத்தில் மனநல நோயாளிகளை விரைவில் கண்டறிந்து அவர்களுக்கு மனநல சிகிச்சை அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மருத்துவப்

[2002 மே 6

## அத்தியாயம்-4

## பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை

தமிழ்நாட்டு மக்களுக்கு நோயற்ற வளமான வாழ்வை அளிப்பதே அரசின் கொள்கையாகும். மேற்குறிப்பிட்ட கொள்கையினை அடைந்திட அரசு பல்வேறு பொது சுகாதாரத் திட்டங்களை உருவாக்கி, ஆரம்ப சுகாதார நலன் அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது.

### 1. ஆரம்ப சுகாதார நலன்

தமிழ்நாட்டில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,682 துணை சுகாதார நிலையங்களும் உள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் வாயிலாக நோய்த் தடுப்பு, உடல்நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளான தொடர் குளிர்சாதனக் கருவிகள், சிறு அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையானக் கருவிகள், மகப்பேறு சாதனங்கள், மருந்துப் பொருட்கள், பரிசோதனைக் கூட வசதிகள் ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 6 படுக்கை வசதிகள் உள்ளன. எனினும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 30 படுக்கை வசதிகள் வீதம் மற்றும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10 படுக்கை வசதிகள் வீதம் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்புரை நோய் கண்டறியவும், கண்களில் ஏற்படும் சிறு கோளாறுக்கான சிகிச்சை அளிக்க வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் தமிழ்நாடு மருந்துவப் பணிகள் கழகத்தினால் பெறப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 1,411 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 241 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கக்கூடியதாக செயல்படுகின்றன. மொத்தமுள்ள 1,411 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 6 துணை சுகாதார நிலையங்களும் தொழில் நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 97 விழுக்காடு ஆரம்ப



2002 மே 6]

சுகாதார நிலையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 421.17 இலட்சம் புறநோயாளிகளும், 1,18,488 உள் நோயாளிகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வாயிலாக சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நாள்தோறும் வருகை தந்த சராசரி புற நோயாளிகளின் மாதாந்திர வாரியான ஒப்பிட்ட விவர வரைபடம் இணைப்பு 2-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

### ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பெண் மருத்துவர்கள்

பொதுச் சுகாதாரத் துறையின் பணிகளில் தாய் சேய் நலப் பணிகளே முக்கியமானது ஆகும். சிறப்பு இனமாக 350 பெண் மருத்துவர்களை நியமிக்கவும் 555 மருத்துவர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நியமிக்கவும், ஆணைகள் வழங்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு 300 பெண் மருத்துவர்களும் மற்றும் 485 மருத்துவர்களும் பணியில் சேர்ந்துள்ளனர்.

### ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வசதியுடன் கூடிய 30 படுக்கைகள் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் அமைப்பது அரசின் கொள்கையாகும். தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. பெரும்பாலான ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் ஏற்கெனவே மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவையாவன: 25 மாவட்ட மருத்துவமனைகள், 162 வட்ட மருத்துவமனைகள், 79 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 59 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் / சமுதாய ஆரம்ப சுகாதார நிலையங்கள். இந்த மருத்துவமனைகளில் மேம்படுத்தப்பட்ட சிகிச்சை அளிக்கப் போதுமான வசதிகள் உள்ளன. 2001-2002-ல், 21 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை அடுத்த 3 ஆண்டுகளில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### II. நடமாடும் மருத்துவப் பணிகள்

மலைவாழ் மக்களுக்கும் நெடுந்தூரத்திலும் மற்றும் எளிதில் சென்று வர இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் தேவையான மருத்துவ நல சேவைகள் அளிக்க தற்பொழுது 25 நடமாடும் மருத்துவப் பணிக் குழுக்கள் உள்ளன.

[2002 மே 6

## VII. பள்ளிக் குழந்தைகள் நலவாழ்வுத் திட்டம்

மக்கள் தொகையில் 25% பள்ளி செல்லும் சிறார்கள் ஆவர். பள்ளி மாணவர்கள் இடையே உடல் வலிமை, மன வலிமை, உணர்வு பூர்வமான, அறிவு பூர்வமான வளர்ச்சி பரிபூரணமாக அடைந்திட பள்ளிக் குழந்தைகள் நலவாழ்வுத் திட்டம் பெரிதும் உதவுகிறது. தரம் உயர்ந்த சுகாதாரமும், சுகாதார வளர்ச்சியும் அடைவதே இத்திட்டத்தின் இரு பெரும் நோக்கங்களாகும். பள்ளி மாணவர்களிடையே காணப்படும் நோய்களின் தன்மையை முன்னரே கண்டறிந்து அதனால் அவர்களின் கல்வி மற்றும் உடல்நலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தில் இருதயம், கண் மற்றும் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எல்லா வியாழக்கிழமைகளும் பள்ளி சுகாதார நாளாகும். சிறப்பு மருத்துவ கவனிப்பு தேவைப்படும் மாணவர்கள் மேல் மற்றும் தொடர் சிகிச்சைக்காக உயர் மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ரூ. 300 இலட்சங்கள் மதிப்புள்ள மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் அளிக்கப்படுகின்றன. எல்லா சனிக்கிழமையும் மேல் சிகிச்சை நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்திடவும் ஒருங்கிணைக்கவும் ஒவ்வொரு பள்ளியிலும் இரு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுவாக மாணவர்களிடையே தோன்றும் நோய்களைக் கண்டறியவும் அதனை மருத்துவரிடம் எடுத்துச் சொல்லவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டில் மருத்துவக் குழுக்கள் 40,308 பள்ளிகளைப் பார்வையிட்டது. 87,99,189 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டனர். பரிசோதனை செய்யப்பட்ட 87,99,189 மாணவர்களில் 55,87,905 மாணவர்களுக்கு சாதாரணமான நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 70,252 மாணவர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

பள்ளிச் சிறார் நலவாழ்வுத் திட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே கண்டறிந்த நோய்களின் நிலை

| வரிசை எண் | நோய்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1. | பல் சொத்தை | 11.12 |
| 2. | வயிற்றுப் பூச்சி | 9.60 |
| 3. | சுவாசக் கோளாறு | 10.62 |
| 4. | இரத்த சோகை | 5.03 |
| 5. | வைட்டமின்-ஏ குறைபாடு | 2.30 |
| 6. | சொறி சிரங்கு | 1.52 |
| 7. | கண்பார்வை கோளாறு | 0.23 |
| 8. | காதில் சீழ்வடிதல் | 0.37 |
| 9. | தொழுநோய் | 0.05 |
| 10. | காது கேட்பதில் குறைபாடு | 0.04 |
| 11. | இருதய நோய் | 0.06 |
| 12. | காசநோய் | 0.05 |
| 13. | முன்கழுத்துக் கழலை | 0.02 |



2002 மே 6]

2001-2002 ஆம் ஆண்டில் பள்ளி செல்லும் மாணவர்களிடையே காணப்பட்ட நோயின் தன்மை பற்றிய மாதிரிப் படிவம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## VIII. தொற்று நோய்க் கட்டுப்பாடு

வயிற்றுப் போக்கு, வாந்திபேதி போன்ற நோய்கள் தண்ணீர் மூலமாகப் பரவும் பொதுவான நோய்களாகும். 2001-2002ம் ஆண்டில் தடுப்பு நடவடிக்கையாக 1.52 இலட்சம் பேர்களுக்கு வாந்திபேதி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மற்றும் 50,173 குடிநீர் நிலைகளில் கிருமிநாசினி கலக்கப்பட்டது. வாந்தி பேதியினால் உண்டாகும் உடல்நீர் வறட்சியை ஈடுசெய்ய, வாய்வழி உப்புநீர் கரைசல் பொட்டலங்களின் உபயோகம் மற்றும் உப்பு சர்க்கரை நீர் கரைசல் தயாரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கம் மக்களுக்கு களப்பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

### தேசிய கொள்ளை நோய்த் தடுப்பு கண்காணிப்புத் திட்டம்

நோய் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை செய்யவும் கொள்ளை நோய் தடுப்பு கண்காணிப்பு அவசியம். அந்த கொள்ளை நோய்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளவும் கொள்ளை நோய்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளவும் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்கவும் இது உதவுகிறது. தமிழ்நாட்டில் தேசிய அளவிலான

நோயுற்றவர்களை அதிகமாகக் கொண்ட திருவாரூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஐந்தாவது சுற்று ஒட்டுமொத்த டி.இ.சி. சிகிச்சை முறை 2.8 கோடி மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது. இத்திட்டம் உலகின் மிகப் பெரும் திட்டங்களில் ஒன்றாகும்.

**லெப்டோஸ்பைரோசிஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்**

தமிழக அரசால் பூந்தமல்லி, திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள வட்ட/மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் 7 லெப்டோஸ்பைரோசிஸ் சிகிச்சை நிலையங்கள் தொடங்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன.

**XIV. விலங்கின மனித இன பரிவர்த்தனை நோய்கள் கட்டுப்பாட்டு மையம், ஓசூர்**

ஓசூரிலுள்ள நோய் பரப்பிகள் மற்றும் விலங்கின, மனிதயின பரிவர்த்தனை நோய்கள் கட்டுப்பாட்டு மையம், பிளேக் கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகின்றது. இந்த மையத்தில் டெங்கு மற்றும் மூளைக் காய்ச்சல் நோய்களுக்காக ஆர்போ வைரஸ்களை கட்டுப்படுத்திட இரசாயன கரணி தயாரிக்கும் ஆய்வகம் ஒன்றினை அனைத்து வசதிகளுடன் அரசு அமைத்துள்ளது.

மலேரியா மற்றும் யானைக்கால் நோய்கள் தவிர தற்பொழுது பரவிவரும் டெங்கு, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் குறித்தும், விலங்குகள் மூலம் பரவிவரும் லெப்டோஸ்பைரோசிஸ், ஆந்தராக்ஸ், போன்ற நோய்கள் குறித்தும் பரந்த அளவிலான முன் தடுப்பு நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு நோயின் தீவிரம் அதிகமாக காணப்படும் ஐந்து மாவட்டங்களில் முன் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஐந்து நோய் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**XV. தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்**

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1954-55ஆம் ஆண்டில் தொழுநோய் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து அனைத்து



தொழுநோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1983-ம் ஆண்டு இருந்த நோயின் தன்மை 10,000 மக்கட் தொகைக்கு 118 என்ற நிலை தற்போது 10,000-க்கு 4.5 என்ற நிலைக்கு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இலக்கிடப்பட்டுள்ள நோயின் தன்மை 10,000 மக்கட் தொகைக்கு 1-ற்கு கீழ் என்ற நிலையினை அடைய, ஒட்டு மொத்த தொழுநோய் ஒழிப்பு என்ற நிலை சில ஆண்டுகளில் அடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து வரைபடம் வாயிலாக இணைப்பு 3-ல் விளக்கப்பட்டுள்ளது.

**XVI. சிறப்பு மருத்துவ முகாம்கள்**

கிராமப்புற மக்களுக்கு, சாதாரண நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் மருத்துவ நல நிலையங்களின் அமைப்பு மூலமாக பயன்பெறும் வகையில் வழங்கப் பெறுகின்றன. எனினும் நாளுக்கு நாள் பெருகி வரும் நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய் மற்றும் இருதய நோய் போன்றவைக்கு சிறப்புச் சிகிச்சை பெற அவர்களுக்கு போதுமான வசதிகள் அருகில் கிடைப்பதில்லை. ஆகவே, கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக தொலைதூரத்தில் வசிப்போருக்கு இந்த நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள் மற்றும் வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 130 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தியதில் மொத்தம் 2,27,509 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களில் வருகை தந்த மக்களிடையே கண்டறியப்பட்ட நோய்களின் தன்மையைப் பற்றி விளக்கப்படம் வாயிலாக இணைப்பு 5-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**XVII. தமிழகத்தில் மாநில எல்லைப்புற மாவட்டங்களில் தாய் சேய் நலக் குழுத் திட்டம்**

தமிழ்நாட்டில் யுனிசெஃப் ஆதரவுடன் திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் தாய் சேய் நலத்திட்டப் பணிகளை வலிமைப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து துறைகளுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன், நகரம்

மாநிலமாகும். தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு ஆகும்.

2000 ஆம் ஆண்டின் மைய அரசின் மாதிரி பதிவு முறைப்படி தமிழக மக்கள் தொகையியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது :

| | |
|---|---|
| பிறப்பு விகிதம் | 19.2/1000 மக்கள் தொகைக்கு |
| இறப்பு விகிதம் | 7.9/1000 மக்கள் தொகைக்கு |
| சிசு மரண விகிதம் | 52/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம். | 130/ஒரு லட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |

## குடும்ப நலத்திட்ட செயல்திறன்

2001-2002ஆம் ஆண்டு குடும்ப நலத்திட்டம் மூலம் அடைந்த செயல்திறன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | குடும்ப நலத்திட்ட முறைகள் | செயல்திறன் (எண்ணிக்கையில்) |
|---|---|---|
| 1 | குடும்ப நல அறுவை சிகிச்சை | 3,90,195 |
| 2 | கருத்தடை வளையம் | 3,88,568 |
| 3 | வாய்வழி மாத்திரை உபயோகிப்போர் | 1,91,222 |
| 4 | ஆணுறை உபயோகிப்போர் | 2,27,138 |
| 5 | மருத்துவ ரீதியான கருக்கலைப்பு செய்வோர் | 66,086 |

## II. மாநில மக்கள் தொகை ஆணையம்

குடும்ப நலம் மற்றும் தாய்சேய் நலத் திட்டப் பணிகளை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்து தக்க அறிவுரை வழங்கவும், திட்டமிடப்பட்டுள்ள இலக்குகளை அடையவும் மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் மாநில மக்கள் தொகை ஆணையம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது.



## III. குடும்ப நல மையங்கள்

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் கீழ்க்கண்ட பணி மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| வரிசை எண் | மையங்களின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பேறுகால பின்கவனிப்பு மையங்கள் | 118 |
| 2 | நகர்புற குடும்ப நல மையங்கள் | 101 |
| 3 | நகர நல்வாழ்வு மையங்கள் | 198 |
| 4 | கிராமப்புற குடும்ப நல மையங்கள் | 382 |
| 5 | அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள் | 1015 |
| 6 | தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் | 27 |

தமிழ்நாட்டில் தாய்சேய் மற்றும் குடும்ப நலத் திட்டங்கள் மேலே குறிப்பிட்டுள்ள மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் நடைபெறும் மொத்த குடும்ப நல அறுவை சிகிச்சைகளில், 55 விழுக்காடு அரசு மருத்துவமனைகளிலும், 11 விழுக்காடு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலும், 25 விழுக்காடு அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளிலும், 4 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகளிலும், மீதமுள்ளவை அங்கீகரிக்கப்படாத மருத்துவ மனைகளிலும் நடைபெறுகின்றன.

## IV. குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுத் திட்டம் என்ற சிறப்புத் திட்டம் பிப்ரவரி 2001 முதல் சோதனை முறையில் ஓராண்டு காலத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களில் எவரேனும் அரசு மருத்துவ மனைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் உயிரிழக்க நேரிட்டால் அவருடைய வாரிசுதாரருக்கு ரூபாய் 2 லட்சம் காப்பீட்டுத்

[2002 மே 6

1. 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945ம் ஆண்டு விதிகள்.
2. 1995ஆம் ஆண்டு மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணை.
3. 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம்.
4. 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டம்.

ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியனவற்றை தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்து கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார். மத்திய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் பணியினையும் இவர் ஆற்றுகிறார்.

**I. நடமாடும் புலனாய்வுக் குழு மற்றும் சட்டம், புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள்**

போலி மருந்து மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென்மாவட்டங்களிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கைகளை எடுக்க, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் புலனாய்வுக் குழுவும், சென்னையிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இது தவிர, சென்னையிலுள்ள புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது. 33,316 விற்பனை நிலையங்கள் மருந்து ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 67 நிகழ்வுகளில் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

**II. மருந்து ஆய்வுக்கூடம்**

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழு திறன் கொண்ட, ஒரு மருந்து ஆய்வுக்கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள்



2002 மே 6]

ஆகிய இடங்களிலிருந்து (குடும்ப மருந்து தயாரிப்பு நீங்கலாக) மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

**III. இரத்த சேமிப்பு வங்கிகள்**

இரத்த சேமிப்பு வங்கிகளுக்கான உரிமங்களை, 1940 ஆம் ஆண்டு மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள் விதிகளின் கீழ் வருகிறது. (அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள்) இரத்த சேமிப்பு வங்கிகள், மாநில மற்றும் மைய அரசு அதிகாரிகளால், கூட்டாக ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு அறிக்கை மைய உரிமம் வழங்கும் அலுவலரான இந்திய மருந்து கட்டுப்பாடு இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது. மத்திய குழுமத்தின் ஒப்புதலுக்குப்பின், மாநில உரிம அலுவலரால் உரிமம் வழங்கப்படுகிறது. ஆய்விற்கு பின்னர் 178 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-7

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை

பரம்பரை மருத்துவமுறைகள் புத்துயிர் பெறுவதை உலகம் தற்போது, கண்ணுற்று வருகிறது. உலக மக்களில் 70 விழுக்காடு நபர்கள் இன்று பரம்பரை மருத்துவ முறைகளை சார்ந்துள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் கண்டறிந்துள்ளது. நவீன மருத்துவ முறையில் ஏற்படும் அதிகப்படியான செலவும், நச்சுத் தன்மையும், சில நோய்களில் உண்டாகும் பக்க விளைவுகளும் தற்போது மீண்டும் பாரம்பரிய மருத்துவ முறைகளின் முக்கியத்துவத்தையும் உடல் நலத்திற்கு ஒத்துவரக்கூடியது என்பதை ஓங்கி பறைசாற்றிடும் நிலையை தோற்றுவித்துள்ளன.

தமிழக அரசு, இந்திய மருத்துவ முறைகளை தமிழ்நாட்டில் பரப்புவதில் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நவீன மருத்துவ முறைகளும், இந்திய மருத்துவ முறைகளும் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்து பங்காற்றுகின்ற ஒரு திட்டம் வகுத்திடவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களில், தற்போது 280 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்களும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் யுனானி மருத்துவரும்

[2002 மே 6

**பழைய மருத்துவ ஆவணங்களைச் சேகரித்து நூலாக்கம் செய்தல்**

சித்தர்கள் எழுதிவிட்டுச் சென்றுள்ள ஓலைச்சுவடிகள் நமக்கு கிடைத்துள்ள அரிய செல்வமாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த அரிய ஓலைச் சுவடிகளை சேகரித்து கடினப்பட்டு படித்தறிந்து புத்தகமாக வெளியிடும் அரிய பணியை இத்துறை முதன்மையானதாக செயல்படுத்தி வருகிறது.

அண்மைக்காலத்தில் தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. குறிப்பாக இந்த ஓலைச்சுவடிகளில் பதிந்துள்ள கருத்துகளை உலகம் முழுவதிலுள்ள வல்லுநர்கள் அறிந்து பெருமளவில் மனித இனம் பயனடைவதற்கு உலக இணைய தளம் வழிவகை செய்துள்ளது. எனவே, இது தொடர்பாக மேலும் விரிவாக பரிசீலித்து, ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் உறுதுணையுடன் நடைமுறைப்படுத்தத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## II. சென்னையில் உள்ள தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நிறுவுதல்

மைய அரசு மொத்தம் ரூ.47 கோடி செலவில் சென்னை தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்க ஒப்புக்கொண்டுள்ளது. மாநில அரசு இதற்கென சென்னை, தாம்பரத்தில் 14.78 ஏக்கர் நிலத்தை மைய அரசுக்கு வழங்கியுள்ளது. 2002-2003ம் ஆண்டில் மேற்கண்ட நிறுவனம் அமைப்பதற்கென ரூ.4 கோடி மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிறுவனம் அமைப்பதற்கான தொடர் செலவினத்தை, 60:40 என்ற விகிதத்திலும், தொடராச் செலவினத்தை 75:25 என்ற விகிதத்திலும், மைய அரசும், மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு அமைய உள்ள இந்த நிறுவனம் சித்த மருத்துவ முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், உயர் படிப்பிற்கு வழிவகை செய்யவும், உலக அளவில் சித்த மருத்துவத்திற்கு என தனி அங்கீகாரம் பெற்றுத் தரவும் வழிவகை செய்யும்.

## III. மூலிகைத் தாவரங்கள்

உலகமெங்கும் இயற்கை மருந்துகள் மீது ஏற்பட்டுள்ள ஆர்வம் காரணமாக அண்மைக் காலத்தின் மூலிகை மருந்துத் தொழில் விரைந்து



2002 மே 6]

வளரும் தொழில்களில் ஒன்றாக அமைந்து உள்ளது. மூலிகைச் சந்தையானது உலக அளவில், 60 பில்லியன் டாலர்கள் என்றும் இதன் ஆண்டு வளர்ச்சி விகிதம் 7 விழுக்காடு என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மூலிகைத் தாவரங்களின் உற்பத்தி, விற்பனை, சேமிப்பு ஆகியவற்றை நவீனப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி தேவையான ஒருங்கிணைப்பு வசதிகளை உருவாக்கிட வேண்டும் என்பதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. தற்பொழுது மூலிகைத் தாவரங்களை விற்பனை செய்வது இவ்வாரியம் எதிர்கொள்ளும் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகள் தேவைப்பட்டால் வேளாண்மை, தொழில் துறை போன்ற துறைகளின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படும்.

## IV. இந்திய மருத்துவமுறை மற்றும் மருந்துகளைத் தரப்படுத்துதல்

பல்வேறு மருத்துவ மூலப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் இந்திய முறை மருந்துகளின் தரக்கட்டுப்பாடு ஒரு பெரும் சவாலாக உள்ளது. மருந்துகள் தயாரித்துப் பயன்படுத்தப்படும் மூலிகைகள் தரமிக்கதாகவும், மாசற்றதாகவும், கலப்படமற்றதாகவும் இருக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் வலியுறுத்துகின்றனர். மருந்துகளின் தரத்தை மேம்படுத்த சென்னையில் உள்ள மருந்து பரிசோதனைக் கூடம் வலுப்படுத்தப்பட உள்ளது.

## V. பழங்குடியினர் நலத் திட்டம்

பழங்குடியின மக்களுக்கு இந்திய மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் பழங்குடியின மக்களுக்கு சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்க ஏழு அரசு சித்த மருந்தகங்களும், ஒரு அரசு சித்த மருத்துவ நடமாடும் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

## VI. பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம்

தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகம் மற்றும் தமிழ்நாடு இந்திய மருத்துவ வாரியம் ஆகியவற்றில் பதிவு செய்துள்ள, 60 வயதினை அடைந்த, ஆண்டு வருமானம் ரூ.6000க்கு கீழ் உள்ள, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு மாதந்தோறும் முதியோர் ஓய்வூதியமாக ரூ.500 அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

மதுரை மற்றும் காந்தி கிராமம் ஆகிய இடங்களில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல பயிற்சி மையங்களை வலுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிவுறும்.

**II. பயிற்சி**

பயிற்சி அறிவுரைக் குழுமத்தின் உதவியுடன் மாநில பயிற்சிப் பிரிவு ஒன்று பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அனைத்து வகைப் பயிற்சிகளின் செயலாக்கத்திற்குத் திட்டமிட உதவி புரிகிறது.

**III. நலப் பணிகள் மேலாண்மை**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் பணிகளை ஒவ்வொரு மாதமும் கண்காணிப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, மாநிலத்திலுள்ள 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பகுதிகளிலுள்ள 10 சுகாதார பணிகள் துணை இயக்குநர்களுக்கு கணினிகளும், கூடுதல் எரிபொருள் உதவியுடன் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து கிராம சுகாதார செவிலியர்களுக்கும் சுகாதார மேலாண்மை தகவல் முறை சம்பந்தப்பட்ட பதிவேடுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்ட மாவட்டங்களில், கிராமங்களில் எளிதில் சென்று அங்கு உள்ள மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட நல்வாழ்வு பணிகள் வழங்க ஏதுவாக இரு சக்கர வாகனம் ஓட்ட விருப்பமுள்ள பெண் சுகாதார பணியாளர்கள் அனைவருக்கும் எளிய கடன் வசதியில் இரு சக்கரவாகனம் (Moped) வாங்குவதற்கும், இவ்வாகனங்களை ஓட்டுவதற்கான பயிற்சி அளிப்பதற்கும் ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்ட மாவட்டங்களில் பணிபுரிகிற கிராம சுகாதார செவிலியர்களுக்கும் துணை செவிலியப் பணியாளர்களுக்கும் இரண்டு சீருடைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**IV. மருந்து வழங்கல் மேம்பாடு**

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்கீழ் இயங்குகிற 23 மத்திய மருந்து பண்டகசாலைகளுக்கு கணினி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கழகத்தின் நான்கு மண்டல மேலாளர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான மருந்து வழங்குதல் முறையினை சீர் செய்யும்



பொருட்டு மருந்து அளவீடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகமும் மருந்து வழங்கும் முறையை சீர் செய்யும் பொருட்டு வல்லுநர்கள் சேவையை பயன்படுத்தியுள்ளது.

**2002-2003 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்**

1. சேலம் மாவட்டத்திலுள்ள 150 சுகாதார துணை மையங்களில் முக்கிய சுகாதாரத் திட்டங்கள் தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கென ரூ.35 இலட்சம் மதிப்பில் பிரச்சாரங்கள் நடத்தப்படும்.

2. தொலைக்காட்சித் தொடர் மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் ரூ.30.80 இலட்சம் செலவில் 5 முக்கியப் பொருள்கள் தொடர்பாக தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக பெரிய அளவில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

3. பள்ளிக் குழந்தைகள் சுகாதார நலத் திட்டத்தினைச் செயலாக்குவதில் சுகாதார நலத்துறையின் பணியாளர்களுக்கு உதவிகரமாக அமைவதற்கென தகவல் கல்வி தொடர்பு சம்பந்தமான சாதனங்கள் ரூ.44.60 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

4. ரூ.228.60 இலட்சம் செலவில் சுகாதார மேலாண்மை தகவல் முறைப் பதிவேடுகள் அச்சிடப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மற்றும் பூச்சியினால் பரவக்கூடிய நோய் கட்டுப்பாட்டு பிரிவுகளுக்கும் வழங்கப்படும்.

5. பரவலாக்கப்பட்ட முறையின்கீழ் 10 திட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார துணை மையங்களில் தடுப்புப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். முதலில் தூய்மைப்படுத்தும் பணியினையும் அதைத் தொடர்ந்து முறையான கட்டடப் பராமரிப்பு பணியும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.24.81 இலட்சம்.

புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், பூந்தமல்லியிலுள்ள பொது சுகாதார நிறுவனம் ஆகிய இடங்களில், தெரிவு செய்யப்பட்ட 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இனப்பெருக்க பாதை தொற்றுநோய்/பால்வினை நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. ரூ.125.14 இலட்சம் மதிப்பிலான மருந்துகளையும், காயங்களுக்கு கட்டும் துணிகளையும், தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், முதன்மை மேல் சிகிச்சை நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**II. பயிற்சி**

புதுடெல்லியிலுள்ள தேசிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் பின்வரும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன:-

* பேறுசார் குழந்தை நலம் பற்றியும், நாட்டின் மக்கள் தொகை சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் பற்றியும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிற்சி.
* ஒருங்கிணைந்த திறமை வளர்ப்பு பயிற்சி (அத்தியாவசியமான பிரசவ கவனிப்பு, சிசு கவனிப்பு ஆகியவற்றில் திறமை வளர்க்கும் பயிற்சி)
* சிறப்புத் திறமை வளர்ப்பு பயிற்சி (மருத்துவ ரீதியில் கருக்கலைத்தல், பெண் குடும்ப நல அறுவை சிகிச்சை, காப்பர்-டி பொறுத்துதல் போன்றவற்றில் திறமை வளர்ப்பு பயிற்சி)
* தகவல் தொடர்பு பயிற்சி
* மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு மேலாண்மை பயிற்சி

**2002-2003 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

1. ரூ.20 கோடி மொத்த செலவில் துணை சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வாங்கி தரப்படும்.
2. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட செவிலியர்களுக்கு ரூ.10.50 இலட்சம் மொத்த செலவில் ஒருங்கிணைந்த திறமை வளர்ப்பு பயிற்சி வழங்கப்படும்.





3. ரூ.192 இலட்சம் செலவில், அரசு சாரா அமைப்பின் ஆதரவுடன் சிக்கலான பிரசவங்களையும், விபத்தில் பலியானவர்களையும், அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு எடுத்துச்செல்வதற்கு வசதியாக வயர்லெஸ் சாதன வசதியுடன் கூடிய அவசர ஊர்தி திட்டம் செயல்படுத்தப்படும்.
4. ரூ.13.08 இலட்சம் செலவில் அகில இந்திய வானொலியில் தமிழ் செய்தி ஒலிபரப்பின்போது 9 மாதத்திற்கு நலவாழ்வு செய்தி ஒலிபரப்பப்படும்.
5. ஒருங்கிணைந்த தகவல் கல்வி, தகவல் தொடர்பு முறைத் திட்டம் ரூ.10 இலட்சம் செலவில் கீழ்மட்ட அளவில் மகளிர் சங்கத்தினரையும், சுகாதார குழுவினரையும் இணைத்து செயல்படுத்தப்படும்.

## அத்தியாயம்-10

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது இவ்வகையில் நம் நாட்டிலேயே முதன் முதலாக தொடங்கப்பட்ட சங்கமாகும். மாநிலம் முழுவதும் எய்ட்ஸ் தொடர்பான நோய்களை திறம்படக் கட்டுப்படுத்துவதும், எச்.ஐ.வி. நோய் தொற்றுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இச்சங்கத்தின் நோக்கமாகும்.

**தமிழ்நாடு எய்ட்ஸ் சங்கத்தின் செயல்பாடுகள்**

எச்.ஐ.வி. /எய்ட்ஸ் நோய் வராமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் விழிப்புணர்வு முக்கியமான திறவுகோல் என்பதால் பொது மக்களிடையே குறிப்பாக நோய்க்குள்ளாகும் வாய்ப்பு அதிகமுள்ள மற்றும் பலவீனமான குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இச்சங்கத்தின் முக்கியப் பணியாகும்.

மக்களிடையே நடத்தை மாற்றம் கொண்டு வருவதற்காக, நேருக்கு நேர் விளக்குவதற்கும், நடத்தை மாற்றத் தொடர்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேவையான தகவல்களை பரப்புவதற்கும் செய்தித்தாள் மற்றும் மின்னணு சாதனங்கள், சுய உதவிக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இளைஞர் குழுக்கள், தொழில் அமைப்புகள், கல்வி நிலையங்கள் ஆகியவை திறம்பட பயன்படுத்தப்படுகின்றன.

[2002 மே 6

## VI. குடும்ப நல்வாழ்வு விழிப்புணர்வு முகாம்கள்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், இந்திய அரசின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் உதவியுடன், பால்வினை நோய்கள் மற்றும் இனப்பெருக்க உறுப்புகளில் வரும் நோய்கள் ஆகியவற்றிற்கு ஆளானவர்களை, அடையாள அறிகுறிகளை வைத்துக் கண்டறிந்து சிகிச்சையளிக்க மூன்று சுற்று குடும்ப நலவாழ்வு விழிப்புணர்வு முகாம்களை நடத்தி முடித்துள்ளது.

## VII. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

எச்.ஐ.வி. தொற்றுக்காளான தாய்மார்களுக்குக் குறுகிய கால ஏ.இசட் டி (AZT) மருந்து வழங்கும் ஆராய்ச்சித் திட்டம் 4 அரசு மருத்துவமனைகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பெண் உறை (Female Condom) பயன்பாடு குறித்த ஆய்வு சென்னையிலுள்ள மகளிர் நோயியல் மகப்பேறு இயல் மருத்துவமனை (IOG) முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. எச்.ஐ.வி. பாதிபபுக்குள்ளானவர்களுக்கு சித்த மருந்துகள் கொடுத்து உடல்நிலையைத் தேற்றுவது குறித்த ஆய்வு தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2002-2003 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

1. தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையை அட்லாண்டாவில் உள்ள நோய்க் கட்டுப்பாடு நிலையத்தின் உதவியுடன் வலுப்படுத்துதல்.

   எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வரும் தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் சேவை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அட்லாண்டாவில் உள்ள, நோய்க் கட்டுப்பாடு நிலையம், இம்மருத்துவமனையை மேம்படுத்த ரூ.4.70 கோடி நிதி உதவி அளிக்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இம்மருத்துவமனையின் உள்நோயாளிகளுக்கான வசதிகள், ஆய்வக வசதிகள் முதலியவை இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும். மேலும் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் நோய் குறித்து, மருத்துவர்களுக்கும், மருத்துவம் சாரா பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் முதன்மை நிலையமாகவும் இம்மருத்துவமனை செயல்படும்.



2002 மே 6]

2. ஏற்கெனவே உலக வங்கி மற்றும் அமெரிக்க நாட்டு உதவியுடன் எய்ட்ஸ் நோய் தடுப்பு குறித்து இரண்டு முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எய்ட்ஸ் நோயை முழுமையான அளவில் திறம்பட எதிர்ப்பதற்கு வெளிநாட்டு நிதியுதவியை மேலும் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
3. எச்.ஐ.வி. /எய்ட்ஸ் நோயுள்ள பெண்களை சுயசேவை குழுக்கள் அமைக்க ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கு கடன் வசதிகளும் அளிக்கப்படும்.
4. பால்வினை நோய்கள் மற்றும் இனப்பெருக்க உறுப்புகளில் நோயுள்ளவர்களை கண்டுபிடித்து, குணப்படுத்த மாநிலம் முழுவதும் குடும்ப நல விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.
5. நோய் பரவும் அதிக வாய்ப்புடைய பகுதிகளில் பராமரிப்பு மற்றும் ஆலோசனை வழங்க அரசு சாரா நிறுவனங்கள் மூலம் "சமுதாய பராமரிப்பு நிலையங்கள்" ஏற்படுத்தப்படும்.

## அத்தியாயம்-11

### தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

அரசு மருத்துவ நிலையங்களுக்கும் அரசுக்குச் சொந்தமான கழகத்தின் மூலமும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமும் நடத்தப்படுகின்ற மருந்தகங்களுக்கும் தேவைப்படுகின்ற உயர்தர மருந்துகளையும், அறுவை சிகிச்சைப் பொருட்களையும், அறுவை மருத்துவ தையல் பொருட்களையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் நோக்கத்தோடு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் என்ற தனித்தன்மை வாய்ந்த குறிப்பிடத்தக்க நிறுவனம் 1-7-1994 அன்று நிறுவப்பட்டது. மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்தல், நோய்கண்டறியும் மையங்களை நிறுவுதல் போன்ற பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது. தமிழ்நாட்டில் 23 மருந்து கிடங்குகள்மூலம் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த நிறுவனம் மேலும் ஒரு மருந்து கிடங்கினை சென்னையில் உள்ள கே.கே. நகரில் கட்டி வருகிறது. அந்த மருந்து கிடங்குடன் சேர்த்து மொத்தம் 24 மாவட்ட மருந்து கிடங்குகளாக அமையும். மேற்சொன்ன 24 மருந்து கிடங்குகளில், 17 கிடங்குகள் இக்கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி

இணைப்பு - 1

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்ற பிரசவங்கள்

2000-01 - 2001-02






இணைப்பு - 2

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு நாளின் சராசரி புறநோயாளிகள்

2000-01 மற்றும் 2001-02



இணைப்பு - 5

## சிறப்பு மருத்துவ முகாம்
### கண்டறியப்பட்ட நோய்கள்






இணைப்பு-6

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்
சி.டி. மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்கள்



நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 35 விழுக்காட்டுக்கும் மேல் வருவாய் ஈட்டும் தொழில் இது. இந்திய பொருளாதார வளர்ச்சியில் துணி நெசவுத் தொழில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. பஞ்சை அடிப்படையாகக் கொண்ட நெசவுத் தொழில், தற்போது உலகச் சந்தையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை, தேவைக்கு அதிகமான உற்பத்தி, ஏற்றுமதியில் வீழ்ச்சி, போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் போன்றவற்றால் பெரும் இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகிறது. இந்த இடர்ப்பாடுகளுக்கிடையிலும் கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான நூல் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய கூட்டுறவு நூற்பாலைகள் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

1.05. மக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

1.06 இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:—

*1354 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

*142 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

*18 கூட்டுறவு நூற்பாலைகள்

*தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்)

*தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

*தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

*தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு



*தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

*தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை

1.07. 2002-2003 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 16 இன்கீழ், 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.8,977.94 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| அ. | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (நிர்வாகச் செலவுகள்) | ரூ.95.16 இலட்சம் |
| ஆ. | கைத்தறி மற்றும் துணிநூல் துறை (பல்வேறு திட்டங்களை செயல்படுத்த மற்றும் நிர்வாகச் செலவுகள்) | ரூ.8882.78 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.8977.94 இலட்சம் |

## 2. கைத்தறித் தொழில்

2.01. 1987-ஆம் ஆண்டு கைத்தறி கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 4.27 இலட்சம் கைத்தறிகள் இருந்தன. 31-03-2002-ஆம் தேதிய விவரப்படி, மொத்தம் 2.83 இலட்சம் கைத்தறிகள் 1,354 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கி வருகின்றன. மொத்தம் உள்ள 1,354 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1,144 பிரதம சங்கங்களாகவும், 120 தொழிலியல் சங்கங்களாகவும், மீதமுள்ள 90 பிரதம சங்கங்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் இயங்கி வருகின்றன. இதுவரை, கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1.97 இலட்சம் நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராம மற்றும் புறநகர் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தமிழக அரசு மற்றும் மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் அனைத்தும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களுக்குச் சென்றடைகின்றன.

[2002 மே 6

4. சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சேலம்

5. ஈரோடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம், ஈரோடு மாவட்டம்

6. கரூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, கரூர்

7. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி மாவட்டம்

8. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்.

9. விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சாரம், விழுப்புரம் மாவட்டம்

10. வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அரியூர், வேலூர் மாவட்டம்

11. நாகப்பட்டினம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு, நாகப்பட்டினம் மாவட்டம்

12. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர், மதுரை மாவட்டம்

13. தருமபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை, தருமபுரி மாவட்டம்

14. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்

15. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

16. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

17. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்

18. மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை, மதுரை

4.04. கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் சிட்டா நூலையும், விசைத்தறி தொழிலுக்குத் தேவைப்படும் கோன் நூலையும் உற்பத்தி செய்கின்றன. 2001-2002-ஆம் ஆண்டு கூட்டுறவு நூற்பாலைகள் 157.81 இலட்சம் கிலோ கிராம் நூலினை 40ஆம் எண் நூலாக மாற்றம் செய்த வகையில் உற்பத்தி செய்துள்ளன.



2002 மே 6]

4.05 பொதுவாக துணித் தொழிலில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, ஏற்றுமதியில் வீழ்ச்சி, பருத்தி விலையில் ஏற்பட்ட விலை உயர்வு மற்றும் பருத்திக்கான செலவைவிட நூல் விலை குறைந்துள்ளது போன்ற காரணங்களால் ஜவுளித் தொழில் மிகுந்த நிதி நெருக்கடியில் உள்ளது. இதனால் பெரும்பாலான ஆலைகள் மூடும் நிலையிலும் சில ஆலைகள் மூடப்பட்டும் உள்ளன.

4.06 கூட்டுறவு நூற்பாலைகளில் தன் விருப்ப ஓய்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 4615 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டு அவர்களுக்குச் சேரவேண்டிய பணப்பயன் ரூ.42.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. நூற்பாலைகள் மூடப்படும் நிலை உருவாகும்போது எதிர்கொள்ள வேண்டிய சமூகப் பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்குடன் மேலும் அதிக அளவு தொழிலாளர்கள்/பணியாளர்களை தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் விடுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.07. தற்போது தேனியிலுள்ள அண்ணா, எட்டயபுரத்திலுள்ள பாரதி கூட்டுறவு நூற்பாலைகள் வியாபார இலாபத்தில் இயங்கி வருகின்றன. இவ்விரண்டு நூற்பாலைகளுக்கும் ஐ.எஸ்.ஓ. 9000 தர சான்றிதழ் பெற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4.08 நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை (அண்ணா மற்றும் பாரதி தவிர) தனியார்மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒரு குழுவை அமைத்து அரசு உத்தரவிட்டது. முதற்கட்டமாக, இயங்காமல் உள்ள நான்கு கூட்டுறவு நூற்பாலைகள் (அதாவது) மிசேரியர், வேலூர், விழுப்புரம் மற்றும் மதுரை ஆகிய கூட்டுறவு நூற்பாலைகளைத் தனியார் மயமாக்கப்பட வேண்டும் எனவும், இதில் வேலூர் கூட்டுறவு நூற்பாலையின் நிலம் மற்றும் கட்டடத்தினை அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு உபயோகிக்கலாம் எனவும், இதர சொத்துக்களை விற்று அதன் வருவாயை தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் செல்லும் தொழிலாளர்களுக்கு பயன்படுத்தலாம் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

4.09. இந்த நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் செயல்படுவதால், இவற்றை கலைக்கலாமே தவிர, தனியார்மயமாக்க இயலாது என குழு முடிவெடுத்தது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையின்படி, 1983ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 82-ன்கீழ் நூற்பாலைகளின் நிலையினைக் கண்டறிய, 18 கூட்டுறவு நூற்பாலைகளில் அண்ணா மற்றும்

[2002 மே 6

5.08 குழுவின் பரிந்துரையின்படி, உயர் இரக துணிகளை நெய்வதற்காக 5000 கைத்தறி நெசவாளர்களையும், கோ-ஆப்டெக்ஸ் உடன் இணைந்து ஏற்றுமதிக்கான துணிகளை நெய்வதற்காக 5000 கைத்தறி நெசவாளர்களையும், ஆக மொத்தம் 1000. கைத்தறி நெசவாளர்களைக் கண்டறிய அரசு ஆணையிட்டது. அதன்படி 2002-2003-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை நிறைவேற்ற கைத்தறி நெசவாளர்களை தெரிவு செய்ய துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

5.09 குறைந்த மதிப்புள்ள விசைத்தறிகளை நவீன வசதிகளுடன் கூடிய விசைத்தறிகளாக மாற்றம் செய்ய ஒரு புதிய திட்டத்தினை உருவாக்க குழு அமைத்து அரசு ஆணையிட்டது. குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5.10. இத்துறை இரக மாற்றத்திற்கும், வடிவமைப்பு அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. தொன்மை வாய்ந்த கலாக்ஷேத்திரா வடிவமைப்புகளை பட்டு மற்றும் பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அறிமுகப்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, கலாக்ஷேத்திரா இரக துணிகளுக்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ளதால், உடனுக்குடன் தேக்கமின்றி விற்பனையாகி வருகின்றது. கலாக்ஷேத்திரா வடிவமைப்பு சேலைகளை 2002-2003-ஆம் ஆண்டில் மேலும் அதிக தறிகளில் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

5.11 சந்தை நிலவரத்திற்கேற்ப எளிதில் விற்பனையாகக் கூடிய இரகங்களையும் ஏற்றுமதி இரகங்களையும் உற்பத்தி செய்ய ஏதுவாக அவ்வப்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கி, 2002-2003-ஆம் ஆண்டில் விற்பனையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5.12 கூட்டுறவில் அல்லாத கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் (தொழில் நிலைமை மற்றும் பல்வகை) சட்டம், 1981ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் கைத்தறி தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதமும், அவர்களின் தொழில் முறையை சீரமைப்பதும் இச்சட்டத்தின் குறிக்கோளாகும். இச்சட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.13 நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 2002-2003-ஆம் ஆண்டில் 550 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.



2002 மே 6]

5.14 தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தின்கீழ், 2002-2003-ஆம் ஆண்டில் நெசவாளர்களுக்கு 750 தறிக்கூடம் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. 2002-ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் அறிவிப்புகளைத் தொடர்ந்து துறை மேற்கொள்ளவுள்ள செயல்திட்டம்

**(மாண்புமிகு முதல்வரின் 15 அம்ச திட்டம் உள்பட)**

6.01. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ற வகையில் துணிகளை உற்பத்தி செய்ய இத்துறை 10000 நெசவாளர்களின் தேர்ச்சித் திறனை உயர்த்தி உயர் இரக மற்றும் ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. இதனால், நெசவாளர்களுக்கு அதிக கூலி கிடைப்பதுடன், வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பும் கிடைக்கும்.

6.02 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கும், பண்ணைசாரா தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து ஊக்கமளிக்கவும், நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியில் தேவைக்கு ஏற்ற வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் வெளிச்சந்தையில் விற்பனை செய்யக்கூடிய துணி வகைகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கின்றன. விற்பனைக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் உதவி செய்கின்றது. இயக்குநரகத்தில் செயல்பட்டு வரும் ஏற்றுமதி தகவல் மையம், சங்கங்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் பாலமாக அமைந்து கைத்தறித் துணிகளை, ஏற்றுமதி செய்ய உறுதி செய்கின்றது. இத்தகைய வசதிகளை அனைத்து சரகங்களும் பெறும் வகையில் மாவட்ட அளவில் ஏற்றுமதி தகவல் மையம் அமைத்து ஏற்றுமதிக்குத் தொடர்புடைய அனைத்து உதவிகளும் செய்ய ஏற்பாடு செய்யப்படும். இயக்குநரக ஏற்றுமதி தகவல் தொடர்பு மையம் வாயிலாக ரூ.40.00 கோடி அளவிற்கு கைத்தறி துணிகள் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

6.03 தமிழக அரசின் ஜரிகை நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் ஜரிகையின் விலை, தனியாரிடம் உற்பத்தி செய்யப்படும் ஜரிகையின் விலைக்கேற்றவாறு ஈடான விலையில் உற்பத்தி செய்யப்படும். இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9002 சான்று பெற்றிருக்கின்றது. மேலும், இந்நிறுவனம் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படக்கூடிய மாறுதல்களைக் கருத்தில் கொண்டு ஜரிகையின் தரத்தினை மேலும் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2002 மே 6

## 7.02 பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

7.02.1. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தொடக்க கல்வி இயக்குநர், பள்ளி கல்வி இயக்குநர், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு ஒவ்வோர் ஆண்டும் ஒரு ஜோடி இலவச சீருடை வழங்கும் திட்டத்தை 1985-86-ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூக நலத் துறையிடமும், தைத்த சீருடைகளை வழங்கும் பொறுப்பு கல்வித் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீருடைகளுக்கான துணிகளை வழங்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

7.02.2 2001-2002-ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி 2002-2003ஆம் கல்வி ஆண்டுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக, உற்பத்தித் திட்டம் வகுக்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களுக்கு வழங்கப்படவுள்ள சீருடைத் துணிக்குத் தேவையான 117.17 இலட்சம் மீட்டர் துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருவதோடு குறித்த காலத்திற்குள் விநியோகம் செய்யப்படும்.

7.02.3 இது தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்குத் தேவையான 22.76 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு 2002-2003-ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 194 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 5000 கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

## 7.03 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம்

7.03.1 மைய அரசு நெசவாளர்களின் நலனையும், கைத்தறியின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த "தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம்" என்ற புதிய திட்டத்தினை 1-4-2000 முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் பல்வேறு இனங்களின் விவரம் பின்வருமாறு:



2002 மே 6]

1. அடிப்படை வசதிகள்
2. உள்கட்டமைப்பு வசதிகள்
3. வடிவமைப்பு உள்ளீடு
4. விளம்பரம்
5. விற்பனை ஊக்கத்தொகை/தள்ளுபடி
6. கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

7.03.2 இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன.

7.03.3 2001-2002-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 257.76 இலட்சம் விடுவிக்கக் கோரி மைய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், மைய அரசு இதுவரை ரூ. 91.03 இலட்சம் விடுவித்துள்ளது.

7.03.4 2002-2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் (விற்பனை ஊக்குவிப்பு தவிர இதர இனங்களுக்கு) ரூ.220.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7.04 வட்டி மானியத் திட்டம்

7.04.1 நடைமுறை மூலதனம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமான வங்கி வட்டி விகிதங்களிலேயே வழங்கப்பட்டு வருவதால், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 விழுக்காடு வட்டி மானியம் அரசால் வட்டி மானியத் திட்டத்தின்கீழ் நேரடியாக வழங்கப்படுகிறது.

7.04.2 தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) 2001-2002-ஆம் ஆண்டிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸிற்கு மொத்தம் ரூ. 508.96 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது. 2002-2003-ஆம் நிதியாண்டிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 347.72 கோடியும், கோ-ஆப்டெக்ஸுக்கு ரூ. 127.00 கோடியும் காசுக்கடன் வழங்கக்கோரி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 7.05 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்

7.05.1 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம், மத்திய ரிசர்வ் வங்கியின் கைத்தறி நிதியுதவித் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச்

[2002 மே 6

7.08.2 2002-2003ஆம் ஆண்டில், 3000 தகுதி வாய்ந்த நெசவாளர்களை இத்திட்டத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

7.08.3 இத்திட்டத்திற்கென 2002-2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 210.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.09 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

7.09.1 "தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" தமிழக அரசால் 1992 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் 60 வயதினை கடக்கும் முன் இறக்க நேரிட்டால், அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு உறுப்பினர் இறந்த நாளிலிருந்து மாதத்திற்கு ரூ. 350/- வீதம் 10 வருடங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

7.09.2 இத்திட்டத்தில் தற்போது 82,626 நெசவாளர்கள் உள்ளனர். 454 குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றன.

7.09.03 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ. 20.00 இலட்சம் குடும்ப ஓய்வூதியமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**7.10 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

7.10.1 "கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்" தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்காக 1-4-1997 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் 60 வயதினை அடைந்த பின்னர் மாதம் ரூ. 200/- வீதம் இத்திட்டத்தின் மூலம் முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும். 5 விழுக்காடு வட்டியிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

7.10.2 இத்திட்டத்தின் மூலம் தற்சமயம் 8207 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மாநில அரசு 2001-2002-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 200.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து வழங்கியுள்ளது.

7.10.3 2002-2003-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 2.00 கோடி முதியோர் ஓய்வூதியமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



2002 மே 6]

**7.11 நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்**

7.11.1 நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் 1979-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மைய அரசும் 1985-ஆம் ஆண்டு முதல் பங்கு பெற்று வருகின்றது.

7.11.2 தற்போது இத்திட்டத்தின்கீழ் தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்றுக்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதியுதவி வழங்கப்படுகிறது :

| விவரம் | கிராமப்புறம் (ரூ.) | நகர்ப்புறம் (ரூ.) |
|---|---|---|
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| பயனாளர் பங்கு | 3,000 | 5,000 |
| மொத்தம் | 68,000 | 72,000 |

7.11.3 2002-2003-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 550 நெசவாளர்களுக்கு வீட்டுடன் கூடிய தறிக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7.11.4 இத்திட்டத்திற்கென 2002-2003-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 252.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.12 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்**

7.12.1. தறிக்கூடம் அமைக்கும் திட்டமானது 1997-ஆம் ஆண்டு மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| விவரம் | கிராமப்புறம் (ரூ.) | நகர்ப்புறம் (ரூ.) |
|---|---|---|
| மைய அரசு மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளி பங்கு | 2,000 | 4,000 |
| மொத்தம் | 9,000 | 14,000 |

[2002 மே 6

| வ. எண். | படிப்பு | தகுதி | ஒவ்வொரு கல்விக்கும் ஆண் | பெண் | வருடம் | உதவித் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொழில் கல்விகள் | பட்டப்படிப்பு /+2 | 1 | 1 | 3/4/5 | 3000/ 2500 |
| 2. | முதுகலை பட்டப்படிப்பு | இளங்கலை பட்டப்படிப்பு | 1 | 1 | 2 | 3000 |
| 3. | இளங்கலை பட்டப்படிப்பு | +2 | 1 | 1 | 3/4 | 2000/ 2500 |
| 4. | இதர கல்விகள் | பட்டப் படிப்பு /+2/ 10-ம் வகுப்பு. | 1 | 1 | 1/3 | 2000/ 3000 |
| 5. | +2 அதிக மதிப்பெண் | +2 | 1 | 1 | 1 | 2000 |
| | 10 ஆம் வகுப்பு அதிக மதிப்பெண் | 10-ம் வகுப்பு | 1 | 1 | 1 | 1500 |

மேற்படி கல்வி உதவித் தொகை கல்விக் காலம் முடியும் வரை ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

**7.15** இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை.

7.15.1 சேலத்தில் இயங்கி வரும் இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிற்சி நிலையம் நெசவாளர் குழந்தைகளின் நலனுக்காக 3 ஆண்டு கைத்தறி தொழில்நுட்ப பட்டயப்படிப்பினை நடத்தி வருகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது :

| | | |
|---|---|---|
| முதல் ஆண்டு | ரூ. 400/- | மாதமொன்றுக்கு |
| இரண்டாம் ஆண்டு | ரூ. 450/- | மாதமொன்றுக்கு |
| மூன்றாம் ஆண்டு | ரூ. 500/- | மாதமொன்றுக்கு |



2002 மே 6]

7.15.2 இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கு ரூ.60/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்க்கு மட்டும் சுற்றுலா செல்வதற்கு ரூ.200/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

**7.16** தேசிய ஆடை வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்

7.16.1 தேசிய ஆடை வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் துணித் தொழில் நுட்பப் பட்டய மற்றும் வடிவமைப்பு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்த வடிவமைப்பு நிறுவனம் நடத்தி வரும் ஆயத்த ஆடை உற்பத்தித் தொழில் நுட்பக் கல்வி, அலங்கார வடிவமைப்பு மற்றும் பின்னலாடை ஆகிய பயிற்சி வகுப்பில் சேருவதற்காக அகில இந்திய அளவில் நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. தையல் இயந்திரம் இயக்குவதற்கான பயிற்சி மற்றும் கணினியில் துணி வடிவமைப்புகள் அமைத்தல் ஆகிய குறுகிய கால பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

7.16.2 நெசவாளர்களின் குழந்தைகளுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சிகள் அளித்து ஊக்குவிக்கும் நோக்குடன், நுழைவுத் தேர்வுக்கான கட்டணத்தையும் குறுகிய கால பயிற்சிக்கான கல்விக் கட்டணத்தையும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திடம் இருந்து பெறப்படும் நிதியுதவியிலிருந்து துறை செலுத்தி வருகிறது. மேற்படி பயிற்சி அளிப்பதற்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ.17.10 இலட்சம் வழங்கியுள்ளது.

7.16.3 இதுவரை 58 மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 30 மாணவர்களுக்கு ஆடை உற்பத்தித் தொழில் நுட்பக் கல்வியும், 20 மாணவர்களுக்கு குறுகிய கால கல்வியான கணினியில் துணி வடிவமைப்பு கல்வியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ.17.10 இலட்சத்தில், ரூ.10.58 இலட்சம் இதற்கென செலவிடப்பட்டுள்ளது.

7.16.4 தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு 2002-2003-ஆம் ஆண்டில் தகுந்த பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

டார்ட் (7) டிரஸ் மெட்டீரியல்ஸ் (8) பேரெக் பிளாங்கெட்ஸ், காம்பால்/ கம்பளி (9) ஷால் லாய், மஃப்ளர், பங்கி முதலியன (10) உல்லன் டுவீடு (11) ஜடார் மேகலா/பாநெக்.

9.02 தமிழ்நாட்டில் அமலாக்கப் பிரிவு உருவாக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தினை அமல்படுத்த சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர், அமலாக்க அலுவலராகவும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி அமலாக்க அலுவலர்கள் தலைமையின் கீழ் சரக அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

9.03 2001-2002 ஆம் ஆண்டில், 42,366 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

9.04 2002-2003 ஆம் ஆண்டில் 50,000 விசைத்தறிகளை ஆய்வு செய்து இச்சட்டத்தை மீறுபவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இத்துறை மூலம் வேலைவாய்ப்பு அளித்தல்

10.01 இத்துறையின்கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள் ஆகிய பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவற்றில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு கீழ்க்கண்டவாறு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது :

| வ. எண் | பொருள் | தொழிலாளர்/ உறுப்பினர் |
|---|---|---|
| 1. | கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,725 |
| 2. | விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 500 |
| 3. | கூட்டுறவு நூற்பாலைகள் | 1,100 |
| | மொத்தம் | 5,325 |

10.02 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்காக, பிரத்யேகமாக ஈரோடு மாவட்டத்தில் காசிப்பாளையம் ஆதிதிராவிடர்



விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் மற்றும் கோவை மாவட்டத்தில் சோமனூர் டாக்டர் அம்பேத்கர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் தொடங்கப்பட்டு இரண்டு சங்கங்களும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும் சேலம் மாவட்டத்தில் உள்ள மேச்சேரி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் இயங்கும் திங்களூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சங்கங்கள் நன்முறையில் இயங்கி வருகின்றன.

10.03 இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சன்குளத்தில் இயங்கும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை முழுமையாக ஆதிதிராவிடர்களுக்கென ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. அதில் இச்சமூகத்தைச் சார்ந்த 300 தொழிலாளர்கள் மற்றும் 23 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 11. துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### (அ) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்)

11.01 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டு, மாநிலத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் துணிகளைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் நோக்குடன் "கோ-ஆப்டெக்ஸ்" என்ற புகழ் பெற்ற பெயரில் இயங்கி வருகிறது. இதுதவிர, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் லக்னோவிலுள்ள தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நூல் கொள்முதல் செய்து உறுப்பினர்களாக உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

11.02 விற்பனை நிலையங்கள் மூலமாக கைத்தறித் துணிகளைச் சில்லறை விற்பனை செய்வது மட்டுமல்லாமல், அரசு நலத் திட்டங்களான சத்துணவு திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பள்ளிச் சீருடை வழங்குதல், ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்தோருக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல், இலங்கை அகதிகளுக்கு இலவச துணி வழங்குதல் போன்ற திட்டங்களுக்குரிய துணிகளைக் கொள்முதல் செய்து வழங்குவதன் மூலம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழக அரசுக்கு உதவி புரிந்து வருவதுடன், கிராமப்புறங்களில் உள்ள நெசவாளப் பெருமக்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

11.07. 2001-2002 ஆம் ஆண்டில் இக்கழகம் 1,092 உறுப்பினர்களுக்கு ரூ.283.63 இலட்சம் அளவிற்கு கடன் வழங்கியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1.12 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

11.08. இக்கழகம் 2002-2003ஆம் ஆண்டில் 1,400 உறுப்பினர்களுக்கு ரூ.400.00 இலட்சம் அளவிற்கு கடன் உதவிகள் வழங்க திட்டமிட்டுள்ளது.

**(இ) தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்**

11.09. தமிழ்நாடு சரிகை ஆலை காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் தரமான சரிகை வழங்க நிறுவப்பட்டது.

11.10 இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில் 66,846 மார்க்குகள் சரிகையினை உற்பத்தி செய்து, 67,661 மார்க்குகள் சரிகையினை விற்பனை செய்துள்ளது. மேலும், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 3,367 சரிகை மாதிரிகளைப் பரிசோதனை செய்துள்ளது. இந்நிறுவனம் சரிகை தரத்தினை முன்னிட்டு ஐ.எஸ்.ஓ. 9002 தர சான்றிதழ் பெற்றுள்ளது. 1999 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சரிகை ஆலையின் 2-வது பிரிவு அப்பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரிகைத் தேவையினைப் பூர்த்தி செய்து வருகிறது. இப்பிரிவினைப் புத்துயிரூட்டி மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

11.11 தமிழ்நாடு சரிகை ஆலை இலாபகரமாக இயங்கிவரும் ஒரு நிறுவனமாக உள்ளதால், தொடர்ந்து அரசு பங்கு மூலதனத்திற்கு ஈவுத் தொகை செலுத்தி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ஈவுத் தொகை செலுத்தப்பட்ட விவரம்.

| வ. எண் | ஆண்டு | அரசின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | ஈவுத் தொகை (விழுக் காடு) | செலுத்தப் பட்ட தொகை (ரூ. இலட் சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1998-1999 | 34.40 | 25 | 8.60 |
| 2. | 1999-2000 | 34.40 | 25 | 8.60 |
| 3. | 2000-2001 | 34.40 | 35 | 12.04 |



11.12. 2002-2003 ஆம் ஆண்டில் சரிகைகள் உற்பத்தி செலவினத்தைக் கணிசமாகக் குறைத்து, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் சரிகையின் தரத்தினை மேலும் மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

**(ஈ) தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு**

11.13. ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை கூட்டுறவு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு 5-9-1973 அன்று தொடங்கப்பட்டது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும்.

11.14. இவ்வாலை பருத்தி மற்றும் செயற்கை இழை நூல் துணிகளுக்கு வெளுத்தல், சாயமிடல் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலையின் துணி பதனிடும் திறன் மாதம் ஒன்றுக்கு 15.00 இலட்சம் மீட்டர்கள் ஆகும்.

11.15. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலைக்கு கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கோவை மத்திய சிறை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடக கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்கள் துணிகளைப் பதனிடவும், அச்சிடவும் வழங்கி வருகின்றன. அரசு திட்டமான பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துணிகளையும் இவ்வாலை பதனிட்டு வழங்குகிறது.

11.16. இவ்வாலை 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.851.80 இலட்சம் அளவிற்கு வியாபாரம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை ரூ.9.00 இலட்சம் (உத்தேசமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

11.17. 2002-2003 ஆம் ஆண்டில் இவ்வாலையில் 24.00 இலட்சம் கிலோ நூல் வெளுப்பதற்கும், 20.00 இலட்சம் கிலோ நூல் சாயம் தோய்ப்பதற்கும் மற்றும் 15.00 இலட்சம் மீட்டர் துணிகள் அச்சிடுவதற்கும் திட்டமிட்டுள்ளது. மேலும், இவ்வாலை ஐ.எஸ்.ஓ. 9001 தரச் சான்றிதழ் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வாலை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சாயக் கழிவு நீரைப் பிரித்தெடுக்கும் உபகரணம் ஒன்று அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

## இணைப்பு

### கைத்தறி மற்றும் துணி நூல் துறை முன்னேற்றம் பற்றிய குறிப்பு

#### 1. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | 1,410 | 1,414 | 1,354 |
| 2. | தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.90 | 2.92 | 2.83 |
| 3. | உற்பத்தி (அ) மீட்டர் (இலட்சத்தில்). | 923.58 | 941.77 | 957.35 |
| | (ஆ) மதிப்பு (ரூ. கோடியில்) | 389.72 | 462.65 | 436.37 |
| 4. | விற்பனை மதிப்பு (ரூ. கோடியில்) | 461.57 | 550.73 | 493.58 |
| 5. | நடைமுறை மூலதனம் (ரூ. கோடியில்). | 373.57 | 344.78 | 346.96 |

#### 2. கூட்டுறவு நூற்பாலைகள்

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 4.69 | 4.69 | 2.86 |
| 2. | உற்பத்தி (ரூ. இலட்சததில்) | 18,934.73 | 19,555.00 | 15,230.98 |
| 3. | விற்பனை (ரூ. இலட்சத்தில்) | 18,523.80 | 18,882.96 | 14,564.32 |
| 4. | நடைமுறை மூலதனம் (ரூ. இலட்சத்தில்). | 3,550.40 | 3,550.40 | 3,806.88 |



#### 3. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்)

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | கைத்தறித் துணி கொள்முதல் (ரூ. கோடியில்). | 182.26 | 188.07 | 139.35 |
| 2. | கைத்தறித் துணி விற்பனை (ரூ. கோடியில்). | 255.80 | 253.22 | 173.07 |
| 3. | நடைமுறை மூலதனம் (ரூ. கோடியில்). | 139.00 | 149.00 | 162.00 |

#### 4. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | கடன்களின் எண்ணிக்கை | 1,305 | 1,233 | 1,092 |
| 2. | அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. இலட்சத்தில்). | 305.54 | 301.47 | 283.63 |

#### 5. தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 69479 | 64728 | 66846 |
| 2. | விற்பனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்). | 1706.94 | 1790.49 | 1775.16 |
| 3. | நிகர இலாபம் (ரூ. இலட்சத்தில்). | 62.21 | 45.83 | 64.30 (உத்தேசமாக வரிக்கு முன்) |

#### 6. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|
| 1. | வியாபார மதிப்பு (ரூ. இலட்சத்தில்). | 909.73 | 735.23 | 851.80 |
| 2. | நிகர இலாபம் (ரூ. இலட்சத்தில்). | 27.23 | 13.79 | 9.00 (உத்தேசமாக) |